கோகுலம்

GOKULAM

ஆகஸ்ட் '88 விலை ரூ. 3.





இதோ! கேம்ப்கோ ட்ரீட் – அதிகச்சுவை ததும்பும் கேரமல் மில்க் சாக்கலேட் பார்



கேம்ப்கோ ட்ரீட்! கொண்டாட்டங்களுக்குக் குதூகலம் சேர்த்திட ஒரு மகத்தான வழி! சுவை சேர்க்கும் கேரமலும் வளமூட்டும் மில்க் சாக்கலேட்டும் கூடித் தரும் மறுக்க முடியாத ருசி அனுபவம்... உங்களுக்கும் உங்கள் நண்பர்களுக்கும் ஏற்றதொரு அற்புத விருந்து கேம்ப்கோ ட்ரீட்!

கொண்டாட்டமா? கொண்டு வா கேம்ப்கோ ட்ரீட்!

R K SWAMY/CL/6038

இந்தியாவின் மிகப்பெரிய அதிநவீன ஆலை அளிப்பது கேம்ப்கோ லிமிடெட், மங்களூர்.



உயிர்களிடத்தில் அன்பு வேணும்.—தெய்வம்
உண்மையென்று தானறிதல் வேணும்.

— பாரதியார்.

கோகுலம்

1988 ஆகஸ்ட் மாத இதழ்
மலர் : 6 இதழ் : 7
தனிப் பிரதி ரூ. 3/—
ஆண்டுச் சந்தா ரூ. 36/—
கௌரவ ஆசிரியர்:

அழ. வள்ளியப்பா

புகைப்படம்: எம். நடராஜன்.



அருமைச் சிறுவர் சிறுமியரே,

எட்டாவது படிக்கும் ஒரு மாணவன் கனமான புத்தகப் பையை (பையா அது? மூட்டை என்றுதான் கூற வேண்டும்). முதுகிலே சுமந்து கொண்டு பேருந்தில் ஏறுகிறான். அவனுடன் பலர் போட்டி போட்டுக் கொண்டு ஏறுகிறார்கள். உள்ளே நுழைவதே கடினமாயுள்ளது. அவ்வளவு கூட்டம்! ஒருவரை ஒருவர் இடித்துக் கொண்டு நிற்கிறார்கள்.

நடத்துநரோ, 'முன்னாலே போ. முன்னாலே போ' என்று விரட்டுகிறார். சற்று உள்ளே செல்லப் பார்க்கிறான் அந்த மாணவன். அப்போது, அவனுடைய புத்தக மூட்டை சிலரை இடித்து விடுகிறது.

"என்னடா இது! எருமை மாடு மாதிரி இடிக்கிறாய்?"

"ஐயோ! இது என்ன புத்தக மூட்டையா? பொணக்கனம் கனக்குதே!"

"படிச்ச பிறகு எந்த வேலையும் கிடைக்கல்லேன்னாலும் போர்ட்டர் வேலைக்காவது போகலாமில்லையா? அதுக்குத்தான் பையன் பழகுகிறான்."

இப்படி ஆளுக்கு ஆள் 'அர்ச்சனை' செய்கிறார்கள். பாவம், அந்த மாணவன்தான் என்ன செய்வான்? வேண்டுமென்றா இடிக்கிறான்? அவன் பள்ளிக்குத் தினசரி எடுத்துச் செல்ல வேண்டிய புத்தகங்கள் அல்லது நோட்டுகளிலே சிலவற்றை வீட்டிலே வைத்து விட்டுப் போனால், ஆசிரியரின் கோபத்துக்கு ஆளாக வேண்டுமே! அதனால்தான், அவர்களின் சாபத்துக்கு ஆளாகிறான்!

மேல் வகுப்பில் படிக்கும் மாண வர்களைவிட, ஆரம்ப வகுப்புகளில் படிக்கும் அந்தப் பிஞ்சுக் குழந்தைகளின் நிலைமையோ பரிதாபமாயுள்ளது. அவர்களின் சக்திக்கு மீறிய கனமான புத்தகப்பை, சாப்பாட்டுச் சட்டி, தண்ணீர்ப் புட்டி முதலியவற்றையும் பள்ளிக்கு அவர்கள் கொண்டு செல்ல வேண்டியிருக்கிறது. எப்படிப் போவது? பெற்றோரோ ஆயாவோ சுமை தூக்க வந்தால்தான் பள்ளி செல்ல முடியும்.

இப்படி முதுகை முறிக்கும் சுமை தேவைதானா? இதைக் குறைக்க வழியே இல்லையா? பெற்றோர்—ஆசிரியர் சங்கக் கூட்டங்களில் இதுபற்றிப் பேசி ஒரு நல்ல முடிவை எடுக்க முடியாதா? கல்வித் துறையினரும் இதில் கவனம் செலுத்தலாமல்லவா?

பள்ளி செல்லும் பிள்ளைகளின் பளுவைக் குறைக்க விரைவில் ஒரு வழி பிறக்குமென்றே நம்புகிறோம்.

—அழ. வள்ளியப்பா

இந்த இதழ் எழுத்தாளர்கள்.




கப்பாலவன்




பிரபு சங்கர்

பிருந்தாவனக் கதாசிரியர்கள்.



மு. முத்துவேல்



ஏ. ஆர். வீரராகவன்

பிருந்தாவனக் கவிஞர்கள்.




இரா. செல்லத்துரை



ஏ. எஸ். உமா மகேஸ்வரி



தே. நீலாம்பரி



இரா. பரமசிவம்

வண்ண அட்டைப்படம் : யோகா



புதிய தொடர்கதை
அடுத்த இதழில்
ஆரம்பமாகிறது!

பூதலூர் முத்து எழுதும்


வண்ணத் தோட்டத்தின் வானம்பாடிகள்



(குழந்தை எழுத்தாளர் சங்கம் நடத்திய 'எல்லப்பா-ரங்கம்மாள் நினைவுப் போட்டி'யில் முதல் பரிசு பெற்ற சிறுவர் நாவல்.)

பெரியோர்

அணிற்பிள்ளைகளுக்கு விடுதலை!



ஒருநாள் தாகூருடைய அண்ணி இரு அணிற்பிள்ளைகளை விலைக்கு வாங்கிக் கூண்டிலே அடைத்து வைத்தார். "இப்படி அடைத்து வைக்கலாமா? இவற்றைப் பார்க்கவே பரிதாபமாயிருக்கிறது. விட்டுவிடுங்கள் அண்ணி" என்று கெஞ்சினார் தாகூர். அண்ணி கேட்கவில்லை. அன்று மாலை அண்ணி வெளியே சென்றிருந்த சமயம் பார்த்து, தாகூர் கூண்டைத் திறந்து அணிற்பிள்ளைகளுக்கு விடுதலை அளித்து விட்டார். அண்ணி திரும்பி வந்ததும், வெறும் கூண்டுகளைக் கண்டு தாகூரைத் திட்டினார். தாகூர் அது கேட்டு வருந்தவில்லை. தாம் செய்த நல்ல செயலை எண்ணி மகிழ்ச்சி அடைந்தார்.

கப்பல் பாடம் நடத்த...



கோகலே பூனாவில் ஆசிரியர் வேலை பார்த்த போது, கப்பலைப் பற்றிய பாடம் நடத்த வேண்டியிருந்தது. கப்பலின் வெளிப் பாகத்தை அவர் பார்த்திருக்கிறார்; உள்ளே பார்த்ததில்லை. மறுநாளே பூனாவிலிருந்து சுமார் 100 மைல் தூரத்திலுள்ள பம்பாய்க்குப் புறப்பட்டுச் சென்றார். துறைமுக அதிகாரிகளின் அனுமதி பெற்றுக் கப்பலுக்குள் சென்று ஒவ்வொரு பகுதியையும் கண்டார். பிறகு, பூனாவுக்குத் திரும்பி வந்து, கப்பலைப் பற்றி மிகத் தெளிவாகவும், அழகாகவும் மாணவர்களுக்கு விளக்கிக் கூறினார்.

கொம்பு முளைத்தவரா?



திரு. வி. கலியாணசுந்தர முதலியார், சிறு வயதில் நண்பர்களுடன் தெருவிலே விளையாடிக் கொண்டிருந்த போது, சலங்கைச் சப்தத்துடன் ஒரு மாட்டு வண்டி சிறிது தூரத்தில் வருவது தெரிந்தது. உடனே, "டேய் அமீனா வருகிறார்! பொல்லாத அமீனா வருகிறார்! வாருங்கள், ஓடிப் போய் ஒளிந்து கொள்ளலாம்" என்றான் ஒரு சிறுவன்.

"ஏன் இப்படிப் பயப்படுகிறீர்கள்? அமீனா என்றால் அவருக்கென்ன, தலையில் கொம்பா முளைத்திருக்கிறது?" என்று கேட்டார் திரு. வி. க. இது அமீனா காதில் விழுந்து விட்டது. உடனே வண்டியை விட்டு இறங்கி திரு. வி. க. வின் கையைப் பிடித்து இழுத்துக் கொண்டு, நேராக அவரின் தந்தையிடம் சென்றார். "இவனை நல்ல முறையில் வளர்க்க வேண்டும். பிற்காலத்தில் பெரிய அறிவாளியாக விளங்குவான்" என்று கூறிவிட்டுப் போய்விட்டார். அமீனாவின் வாக்கு பலித்துவிட்டது.

வாழ்விலே

3 ரூபாய்ப் பத்திரிகைக்கு 1000 ரூபாய்!




அபுல்கலாம் ஆஸாத், தேசத் தொண்டில் தீவிரமாக ஈடுபட்ட பிறகு 'அல்-ஹிலால்' என்ற ஒரு பத்திரிகையை நடத்தி வந்தார். அந்தப் பத்திரிகையைப் படித்து அநேகர் தேசிய உணர்ச்சி பெற்றனர்; தேசத் தொண்டில் முழுமூச்சுடன் ஈடுபட்டனர்.

அப்பத்திரிகையில் ஆஸாத் எழுதி வந்த கட்டுரைகளைப் பலர் பத்திரப் படுத்திப் பாதுகாத்து வந்தார்கள்.

ஒரு சமயம் சுமார் மூன்று ரூபாய் மதிப்புள்ள 'அல்-ஹிலால்' பத்திரிகைகள் ஆயிரம் ரூபாய்க்கு விற்கப்பட்டன! அப்பத்திரிகையின் சிறப்பை இதிலிருந்தே அறிய முடிகிறதல்லவா?

கிளியின் கால் விரல்கள்



''கிளியின் ஒவ்வொரு காலிலும் எத்தனை விரல்கள்?'' என்று இளைஞர்களிடம் கேட்டார் கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை. ''நான்கு'' என்றார்கள், இளைஞர்கள்.


''சரி, கிளியின் காலில் முன்னால் எத்தனை விரல்கள்? பின்னால் எத்தனை விரல்கள்?'' என்று கவிமணி கேட்டதும், ''முன்னால் மூன்று; பின்னால் ஒன்று'' என்றனர். அங்கிருந்த பாடப் புத்தகத்திலும் அப்படித்தான் இருந்தது. ''இல்லை. கிளியின் காலில் முன்னால் இரண்டு விரல்கள்; பின்னால் இரண்டு விரல்கள் இருக்கும். கிளியை நேரில் பார்த்துத் தெரிந்து கொள்ளுங்கள்'' என்றார். கிளியை நேரிலே பார்த்தபோதுதான் கவிமணி கூறியது உண்மைதான் என்று தெரிந்தது அந்த இளைஞர்களுக்கு.

சத்தியாக்கிரகத்தில் கஸ்தூரிபா



காந்திஜி தென் ஆப்பிரிக்காவில் இருந்தபோது பலமுறை சத்தியாக்கிரகம் செய்திருக்கிறார். ஆரம்ப காலத்தில் ஆண்கள் மட்டுமே இதில் கலந்து கொண்டார்கள். ஒரு சமயம், பெண்களையும் சத்தியாக்கிரகத்தில் ஈடுபடுத்த நினைத்தார். ஆர்வமுள்ள பதினைந்து பெண்களைத் தேர்ந்தெடுத்தார். 'கஸ்தூரிபாக்கு இதிலெல்லாம் ஆர்வமிருக்காது' என்று நினைத்துக் கஸ்தூரிபாவை அவர் சேர்க்கவில்லை. இதை அறிந்த கஸ்தூரிபா, ''உங்களை மற்ற பெண்கள் பின்பற்றும் போது, உங்கள் மனைவியால் பின்பற்ற முடியாதா?'' என்று கூறி, அவரும் சத்தியாக்கிரகத்தில் மும்முரமாக ஈடுபட்டார்; சிறையிலும் அடைபட்டார்!

மின்மினிக் கதைகள்



பட்டுவும் கிட்டுவும்

பட்டுவும் கிட்டுவும் நெருங்கிய நண்பர்கள். ஆனால், இருவரும் கர்வம் பிடித்தவர்கள். "உன்னைவிட நான்தான் கெட்டிக்காரன். உன் பலத்தைவிட என் பலமே அதிகம்" என்று இருவரும் அடிக்கடி சண்டை போட்டுக் கொள்வார்கள். இது அவர்களுடைய வழக்கமாக இருந்தது.

ஒருநாள் பட்டு, "நான் 100 அடி தூரத்தில் எது எழுதியிருந்தாலும் சரியாகப் படித்து விடுவேன்" என்றான்.

உடனே கிட்டு, "இது என்ன பிரமாதம்! நான் 200 அடி தூரத்தில், எது எழுதியிருந்தாலும் தவறில்லாமல் படித்து விடுவேனே!" என்றான்.

"ப்பூ, அதை என்னாலும் படிக்க முடியும்" என்றான் பட்டு.

இப்படியே இருவரும் சிறிது நேரம் தகராறு செய்து கொண்டிருந்தார்கள். பிறகு, ஒரு முடிவுக்கு வந்தார்கள். அதாவது அவர்கள் ஊரிலுள்ள கோவிலின் மதில் சுவரில் ஒரு பாட்டு எழுதியிருந்தது. "அதற்கு சுமார் 200 அடி தூரத்தில் நாளைக் காலையில் நாம் நின்று கொண்டு அந்தப் பாட்டைப்

படிக்க வேண்டும். நம்மில் யார் பிழையில்லாமல் படிக்கிறானோ அவனே கெட்டிக்காரன்'' என்று முடிவு செய்தார்கள். பிறகு அவரவர் வீடு சென்றார்கள்.

அன்று இரவு பட்டு, தன் அப்பாவிடம் கேட்டு, கோவில் சுவரில் எழுதியிருந்த பாட்டை மனப்பாடம் செய்து கொண்டான். அதே மாதிரி, கிட்டுவும் தன் அப்பாவைக் கேட்டுத் தெரிந்து மனப்பாடம் செய்து கொண்டான். இதில் வேடிக்கை என்னவென்றால், இரண்டு அப்பாக்களும் வேறு வேறு பாடல்களைச் சொல்லிக் கொடுத்து விட்டார்கள்!

மறுநாள் பட்டுவும் கிட்டுவும் கோவில் மதில்சுவருக்கு 200 அடி தூரத்தில் நின்று கொண்டார்கள். பட்டு ஒரு பாட்டைப் பாட, கிட்டு வேறொரு பாட்டைப் பாடினான். ''நான் பாடுவதுதான் சரி'' என்றான் பட்டு. ''இல்லை, நான் பாடுவதுதான் சரி'' என்றான் கிட்டு. சண்டை வந்துவிட்டது.

அப்போது, அந்த வழியாகப் போன கோவில் குருக்களிடம் மதில் சுவரில் எழுதியிருந்த பாட்டைப் பற்றிக் கேட்டார்கள். அதற்கு அவர் என்ன சொன்னார், தெரியுமா?

''பாட்டா, ஏது பாட்டு? சுவர் மீது ஒரு பாட்டு இருந்தது. அதைத்தான் நேற்று வெள்ளையடிக்கும்போது அழித்து விட்டார்களே!'' என்றார் குருக்கள்.

அப்போது, பட்டு, கிட்டு இருவர் முகங்களையும் பார்க்க வேண்டுமே!

— பி. வெங்கடேசன்.

மந்திரி சொன்னது...

மதனபுரி என்ற நாட்டை மதிவர்மன் என்ற அரசர் ஆண்டு வந்தார். அவர் குடிமக்களுக்கு யாதொரு குறையுமின்றிக் கண்ணும் கருத்துமாகக் கவனித்து வந்தார். குடிமக்களும் அவரை மிகவும் விரும்பினர்.

மதனபுரியின் புகழ் அந்நிய நாடுகளிலெல்லாம் பரவத் தொடங்கியது.

பக்கத்து நாட்டு அரசனாகிய பிரதாபன் மிகுந்த கொடுங்கோலன். அவன் குடிமக்களை மிகவும் கொடுமைப்படுத்தினான். 'கடவுளே, இவன் தொலைய மாட்டானா!' என்று தினமும் குடிமக்கள் வேண்டிக் கொண்டிருந்தார்கள்.

கொடுங்கோலனான பிரதாபன் மதிவர்மனின் புகழைக் கேட்டு மிகவும் பொறாமை கொண்டான். மதிவர்மனை அழிக்க எண்ணி மதனபுரி நாட்டின் மீது படை எடுத்தான்.

போர் நடந்தது. அதில் படுதோல்வி அடைந்து கைதியானான் கொடுங்கோலனாகிய பிரதாபன்.



உடனே, மதிவர்மன் பிரதாபனின் தலையை வெட்டும்படி உத்தரவிட்டார். அருகில் இருந்த மந்திரி யூகி என்பவர், ''இல்லை, இல்லை. இவரைக் கொலை செய்வது அழகல்ல; இவரைக் கிளி போல் வளர்க்க வேண்டும்'' என்று கூறினார்.


இதைக் கேட்ட மதிவர்மன், மிகுந்த கோபத்தோடு, ''இக்கொடுங் கோலனையா கிளிபோல் வளர்ப்பது?'' என்று மந்திரியைப் பார்த்துக் கேட்டார்.

உடனே மந்திரி, ''அரசே, இவரைச் சீக்கிரம் கொலை செய்வது கூடாது. இவர் குடிமக்களை எப்படித் துன்புறுத்தினாரோ, அதேபோல் துன்புறுத்த வேண்டும். எப்படியெனில், கிளியைக் கூண்டில் அடைப்பது போல, இவரைச் சிறையில் அடைத்து வாட்டி வதைக்க வேண்டும்'' என்று தான் கூறினேன்'' என்றார்.

இதைக் கேட்ட மதிவர்மன் மந்திரியின் சொல் திறமையை மெச்சியதோடு, அவர் யோசனைப்படியே பிதாபனைச் சிறையில் அடைக்க உத்தரவிட்டார். சிறையிலேயே அவன் வாடி வதங்கி மரணமடைந்தான்.

— ஆர். தருமன்.

சின்ன மீனும் பெரிய மீனும்



தர்மபுரியை பார்த்திபன் என்ற அரசன் ஆண்டு வந்தான். அவன் மிகவும் அற்பன். அரண்மனைக்கு வருகிறவர்களைச் சரியாக வரவேற்கவோ உபசரிக்கவோ மாட்டான்.

ஒருநாள் பார்த்திபனுடைய அரண்மனைக்கு ஓர் அறிவாளி வந்தார். அப்போது சாப்பாட்டு நேரமாதலால், வேறு வழியின்றி அவரையும் சாப்பிட அழைத்தான் அரசன்.

இருவருக்கும் சமையல்காரர்கள் விருந்து பரிமாறினார்கள். அப்போது அரசனுக்குப் பெரிய மீன்களையும், அறிஞருக்குச் சிறிய மீன்களையும் வைத்தார்கள். விருந்தாளிக்குப் பெரிய மீன்களை வைத்தால், அரசனுக்குப் பிடிக்காது என்பது சமையல்காரர்களுக்குத் தெரியும்.

விருந்தாளி இதைக் கவனித்தார். அவருக்கு மிகவும் வருத்தமாகப் போய்விட்டது. அரசரின் அற்ப குணத்தைப் பார்த்து அவனுக்குச் சரியான பாடம் புகட்ட வேண்டுமென எண்ணினார்.

உடனே, அவர் தம் இலையிலிருந்த ஒரு சிறிய மீனை எடுத்து வாயின் அருகில் வைத்துக் கொண்டு, ஏதோ முணுமுணுத்தார். பிறகு, அதைக் காதின் அருகிலும் வைத்து ஏதோ பதிலை எதிர்பார்ப்பவர் போல் பாசாங்கு

செய்தார். இப்படியே சிறிய மீன் ஒவ்வொன்றிடமும் செய்தார், இதைப் பார்த்தான் பார்த்திபன். அவனுக்கு ஒன்றும் புரியவில்லை.

"என் அப்படிச் செய்கிறீர்?" என்று அறிவாளியைக் கேட்டான் பார்த்திபன்.

அதற்கு அவர், "என் தகப்பனார் கொஞ்ச காலத்துக்கு முன்பு, துர்அதிர்ஷ்டவசமாகக் கடலில் விழுந்துவிட்டார். அதற்கு மேல் அவரைப் பற்றி ஒன்றும் தெரியவில்லை. ஆகையால், இந்த மீன்களைக் கேட்டால் தெரியுமே என்று எண்ணித்தான் இப்படிச் செய்தேன்" என்றார்.


அரசனுக்கு இது மிகவும் ஆச்சரியமாக இருந்தது. "சரி, அதற்கு அவை என்ன பதில் கூறின?" என்று கேட்டான்.

"உங்கள் தந்தை கடலில் மூழ்கியது நாங்கள் பிறப்பதற்கு முன்பே நடந்திருக்க வேண்டும். சிறிய மீன்களாகிய எங்களுக்கு என்ன தெரியும்? அதோ அந்த அரசர் வைத்திருக்கும் பெரிய மீன்களைக் கேட்டால் தெரியும் என்று பதிலளித்தன" என்றார் அறிவாளி.

இதைக் கேட்டதும் அரசனுக்கு உண்மை விளங்கிவிட்டது. உடனே, அவருக்கும் பெரிய மீன்களைக் கொண்டுவந்து வைக்கும்படி உத்தரவிட்டான். அதுமுதல், அவன் விருந்தாளிகளை மிகவும் கவனமாக விசாரிக்கலானான்.

— செ. க. ச.

படிக்காத கிழவர்



சுந்தரன் பட்டாளத்தில் சேர்ந்திருந்தான். அவனுடைய தகப்பனார் மிகவும் வயதானவர். அவருக்கு எழுதப் படிக்கத் தெரியாது.

சுந்தரன் ஒரு நாள், தன் தகப்பனாருக்கு ஒரு கடிதம் போட்டிருந்தான். கடிதத்தைப் படிக்கத் தெரியாத அவர், அந்த வழியாகச் சென்ற ஒரு வாலிபனிடம், கடிதத்தைக் கொடுத்து, "இதில் என் பையன் என்ன எழுதியிருக்கிறான்?" என்று கேட்டார்.

அவன் அதைப் படித்துவிட்டு, "இதில் ஒரு ஜோடி பூட்ஸ் வாங்கி அனுப்பும்படி எழுதியிருக்கிறது" என்றான்.

"பூட்ஸை எப்படி அவ்வளவு தூரத்துக்கு அனுப்புவது? இதற்கு ஒரு வழி சொல்ல மாட்டீர்களா?" என்று கேட்டார் பெரியவர்.

"எப்படி அனுப்புவதா? இதோ தெருவில் தெரிகிறதல்லவா தந்திக் கம்பி, அதில் கட்டிவிட்டால் பூட்ஸ் போய்ச் சேர்ந்துவிடும்" என்றான் வாலிபன்.

அவன் பேச்சை உண்மையென்று நம்பிய பெரியவர், உடனே புதிதாக

ஒரு ஜோடி பூட்ஸ் வாங்கி, அதே வாலிபனிடம் அதில் விலாசம் எழுதி ஒட்டச் சொல்லி, தந்திக் கம்பியில் கட்டிவிட்டுப் போய்விட்டார்.

அவர் தலை மறைந்ததும், வாலிபன், தன் பழைய பூட்ஸ்களைக் கழற்றி, அந்தத் தந்திக் கம்பியில் கட்டிவிட்டுப் புது பூட்ஸ்களை எடுத்துக் கொண்டு போய்விட்டான்.

பெரியவர் நாலைந்து நாட்கள் சென்று அந்த வழியாகப் போகும் போது பார்த்தார். தந்திக் கம்பியில் பழைய பூட்ஸ்கள் தொங்குவதைக் கண்டதும், ''என் மகனுக்குப் புது பூட்ஸ்கள் கிடைத்துவிட்டன. அதனால் தான் அவன் தன் பழைய பூட்ஸ்களை அனுப்பிவிட்டான்'' என்று மகிழ்ச்சியோடு அவற்றை எடுத்துச் சென்று வீட்டில் வைத்திருந்தார்.

சில நாட்கள் சென்றன. சுந்தரன் தகப்பனாரைக் காண லீவில் வந்தான். அவன் வந்ததும், ''உன் கடிதப்படி ஒரு ஜோடி புது பூட்ஸ் வாங்கி அனுப்பினேனே, கிடைச்சுதா?'' என்று கேட்டார்.


''நானாவது, பூட்ஸ் கேட்பதாவது? அதுதான் இராணுவத்திலே தருகிறார்களே?'' என்றான் சுந்தரன்.

தகப்பனார் நடந்ததைச் சொன்னதும், அழுவதா சிரிப்பதா என்று அவனுக்குத் தெரியவில்லை.

''ஐயோ, எழுதப் படிக்கத் தெரியாததால் அல்லவா இப்படி ஏமாந்து போனேன்!'' என்று கூறி, சுந்தரனின் தந்தை மிகவும் வேதனைப் பட்டார்.

— கே. சந்திரசேகரன்.

— புதுக்கோட்டை, தமிழ் நிலையம், வெளியிட்டுள்ள 'நிமிஷக் கதைகள்' என்ற புத்தகத்திலிருந்து.



என் குழந்தைப் பருவம்



கா. அப்பாத்துரை

'பன்மொழிப் புலவர்' என்றதுமே, நம் நினைவுக்கு வருபவர் கா. அப்பாத்துரை அவர்கள்தான். தமிழ், ஆங்கிலம், மலையாளம், இந்தி, சம்ஸ்கிருதம் ஆகிய ஐந்து மொழிகளிலும் ஆழ்ந்த புலமை உடையவர். இவை தவிர, சில தென்னிந்திய மொழிகளிலும், சில வட இந்திய மொழிகளிலும், சில ஐரோப்பிய மொழிகளிலும், சில ஆசிய ஆப்பிரிக்க மொழிகளிலும் அடிப்படை — தொடக்க நிலை அறிவு உடையவர்.

தமிழ் மொழி வரலாறு, தமிழ் நாட்டு வரலாறு, தமிழ்ப் பண்பாட்டு வரலாறு, உலக இலக்கிய வரலாறு, உலக நாடுகள் அமைப்பு வரலாறு என்று 170—க்கு மேற்பட்ட புத்தகங்களை இவர் எழுதியிருக்கிறார். குழந்தைகளுக்காகவும் பல கவிதைகள், கதைகள் எழுதியுள்ள இவர், ஷேக்ஸ்பியரின் 37 நாடகங்களைத் தமிழிலே தந்திருக்கிறார்.

கவியரசர் கண்ணதாசன் கல்வி கற்ற அமராவதிபுதூர் சுப்பிரமணியம் செட்டியார் பள்ளியில் தலைமையாசிரியராயிருந்து, பிறகு, சென்னை முத்தியாலுப்பேட்டை உயர்நிலைப் பள்ளி போன்ற சில பள்ளிகளிலும் பணியாற்றினார்.

சென்னைப் பல்கலைக் கழகம் தயாரித்த ஆங்கில — தமிழ் அகராதியின் உதவி யாசிரியராகவும், பிறகு தமிழ்நாடு சட்டத்துறை ஆணையத்தின் முழுநிலை ஆணையாள ராகவும் சிறப்பாகப் பணிபுரிந்தார்.

இவருக்குத் தமிழக அரசு 'செந்தமிழ்ச் செல்வர்', 'கலைமாமணி' என்ற பட்டங்களை அளித்ததோடு, திரு. வி. க. பரிசாகிய ரூபாய் பத்தாயிரமும் வழங்கியது. சென்னைப் பல்கலைக் கழகம் இவருக்குக் கௌரவ டாக்டர் பட்டமும், மதுரை காமராசர் பல்கலைக் கழகம் 'தமிழ்ப் பேரவைச் செம்மல்' என்ற பட்டமும் வழங்கிப் பாராட்டின.

1970 — இல் பாரிஸில் நடந்த மூன்றாவது உலகத் தமிழ் மாநாட்டில் கலந்து கொண்டார். 1982 — இல் மதுரையில் நடந்த ஐந்தாவது உலகத் தமிழ் மாநாட்டில் இந்திரா காந்தி அவர்கள் இவருக்குப் பொற்கிழி வழங்கிப் புகழ்மாலை சூட்டினார்.

நான் 1907 ஜூன் 24—இல் குமரி மாவட்டத்திலுள்ள ஆரல்வாய் மொழி என்ற சிற்றூரில் பிறந்தேன். என் குழந்தைப் பருவத்தில் இது திருவாங்கூர் என்ற தனியரசின் பகுதியாய், அதன் கோட்டை வாயிலாய் இருந்தது. சேர, சோழ, பாண்டியரா கிய தமிழரசர்கள் சந்தித்துப் பேசிய, அவர்களுக்கான இடம் இது.

முப்பந்தல் என்ற பெயருடன்



இங்கே மூன்று மடங்கள், மூன்று கிணறுகள், மூன்று பூசை புரைகள் இன்றும் உள்ளன. இங்கே பல போர்கள் நடந்ததனால் ஊரெங்கும் பீரங்கிக் குண்டுகளும், பீரங்கிகளும் அகப்பட்டுள்ளன. மதுரையில் சுல்தான்கள் ஆட்சிக் காலத்தில் மீனாட்சி சொக்கேசர் இங்கே வந்து ஒரு சில மாதம் தங்கினர்! இன்றும் திருவிழாக்களில் பாதி நாள் சொக்கேசர் திருவிழாக்களாகவும், பாதி நாள் உள்ளூர் சாதாத் திருவிழாக்களாகவும் நடக்கின்றன. ஒன்பதாம் நாளில் நடைபெறும் பறக்கும் குதிரை அல்லது நம்பிரான் விளையாட்டு இந்தியாவிலேயே வேறு எங்கும் இல்லாத அதிசயக் காட்சியாகும்.

என் தாய் முத்தம்மாள் நாங்குநேரி வட்டாரத்தில் கஸ்தூரி ரங்கபுரத்தைச் சேர்ந்தவர். தேவாரம் பாடுவதைத் தொழிலாகக் கொண்ட குடும்பத்தினர். தந்தை ந. காசிநாத பிள்ளை வழி வழியாக ஏழு தலைமுறைகள் ஆதி சங்கரரின் வேதாந்த பரம்பரையை வளர்த்தவர்கள். அதற்கேற்ப அந்தந்தக் காலத்திற்குரிய பல மொழிகள், பல கலை ஞானங்கள் பயின்றவர்கள். தந்தை ஆங்கிலம் உட்பட பல மொழிகள், பல கலைகள், பயின்றதுடன் எனக்கும் ஏழு வயதிற்குள் ஆங்கிலம், தமிழ், சமஸ்கிருதம், இந்தி, மலையாளம் ஆகிய மொழிகளைக் கற்றுக் கொடுத்து நானும் ஓரளவு புலமை பெறச் செய்திருந்தார்.

ஆரல்வாய் மொழியில் ஆட்சி மொழியாகிய மலையாளத்திற்கு மட்டுமே இடம் இருந்ததால், நான் குடும்பத்துடன் நாகர் கோவில் சென்றுவிட்டேன். உயர்தரக் கல்வியும் கல்லூரிக் கல்வியும், நாகர் கோவிலிலும், திருவனந்தபுரத்திலும் கழிந்தன.

விளையாட்டால் பயனில்லை என்ற என் தந்தையின் கட்டளைப்படி, நான் விளையாட்டையே விலக்கிவிட்டேன். பன்மொழி, பல்கலை இலக்கிய வரலாறுகளைப் பல நூலகங்கள் மூலம் கற்பதே என் வாழ்க்கையின் சிறந்த ஈடுபாடுகள். அடுத்தபடியாக மொழிகள் கற்பது, தேசிய இயக்கங்களில் ஈடுபடுவது, தமிழ் ஆராய்ச்சி ஆகியவற்றில் அக்கறை கொண்டேன்.

என் வாழ்க்கைக்கு அடித்தளமிட்டவர்களில் முதல்வர் என் தந்தையே. குலசேகர் பட்டணத்தில் சில காலம் என் தமிழாசிரியராய் இருந்த இராமநாத பிள்ளையின் தூண்டுதலால் நான் தமிழிலும் ஆங்கிலத்திலும் உள்ள சைவ சித்தாந்த இலக்கியங்களைப் பயின்றேன். என் அறிவுப் பரப்புக்கு உதவிய பள்ளி ஆசிரியர் பலர். இக்னேஷியஸ் என் ஆங்கில இலக்கண அறிவுக்கு நிலையான அடித்தளமிட்டார். நாராயண சாஸ்திரிகள் இது போலத் தமிழிலும் முத்துசாமி ஆச்சாரி என்பவர் வரலாற்றிலும் அடிப்படை நல்கினர்.

நான் எட்டாம் வகுப்பு படிக்கையில் விடுதலை இயக்கம் உச்ச நிலை கண்டது. இது என் இளமைக் காலக் கவிதை எழுத்தை ஊக்கியது. பம்பாயில் வேல்ஸ் இளவரசர் வருகைக்குக் காந்தியடிகள் கட்டளையால் நடத்தப்பட்ட மறியல் பற்றி ஆங்கிலத்தில் **'Pipes at Bombay'** என்றும், தமிழில் 'நாக



வேந்து' (நாதசுரம்) என்றும் பாடல்கள் எழுதி ஆசிரியர்கள் மாணவர்கள் சட்டைப் பைகளில் அவர்கள் அறியாமலே திணித்து மகிழ்ந்தேன்.

தமிழகத்தில் வேறு எந்த மாவட்டத்திலும் காண அல்லது கேள்விப்பட முடியாத தாவரங்கள், விலங்கு—புட்கள் ஆகியவை குமரி மாவட்டத்தில் உண்டு. அவற்றுள் கடுவாய் என்ற புலி வகை ஒன்று.

இது. புலியினும் உயரியது. இதன் முன் கால்கள், சிங்கத்தின் முன் கால்கள் போல மிகுந்த வலிமையுடன் எதையும் உடைக்கக் கூடியது.

புலியின் நிறத்தை விட இது சற்று வெண்மையானது. கோடுகள், புலியின் கோடுகளை விடத் திண்ணமானவை. என் இளமை வாழ்வில் ஏழு வயதில் ஒரு தடவையும் பதின் மூன்று வயதில் ஒரு தடவையும் சுவைமிக்க இவ் விலங்கு வேட்டையை நான் அருகிருந்து பார்க்க முடிந்தது.

என் பிறந்த ஊராகிய ஆரல்வாய் மொழியில் என் வீட்டின் கிழக்காக இரண்டாவது வளைவில் வேட்டையில் தேர்ந்த ஒரு பெரியவர் இருந்தார். குமரித் தமிழில் 'பாட்டன்' என்ற பொருளுடைய 'போற்றி' என்ற சொல்லால் நாங்கள் அவரை அழைத்து வந்தோம். ஒருநாள் அவர் அருகிலுள்ள காட்டில் வாழ்ந்த கடுவாய்க் குடும்பத்தில், ஆண் கடுவாயைச் சுட்டுக் கொன்று விட்டார்.

புலி,'• கடுவாய் போன்ற விலங்குகளின் ஜோடியில் ஒன்றைக் கொன்று விட்டால், மற்றது வாழாது. கொன்ற






வனை மோப்பத்தால் அறிந்து பழி வாங்கி விட்டுத்தான் சாகும்!

பெரியவர் சுட்ட கடுவாயின் பெட்டை, அவரைத் தேடி எங்கள் தெருவுக்குள்ளேயே நடமாடத் தொடங்கி விட்டது.

கடுவாயின் மோப்பத்தை வேறு திசையில் திருப்பி விடும் முயற்சியில் ஊரின் இளைஞர்கள், ஊரையடுத்து வெளியே ஒரு மரத்தில் பரண் கட்டி, அதில் போற்றியைக் கொண்டு வைத்து விட்டனர். சுற்றிலும் துப்பாக்கியுடன் இருந்து பலர் கடுவாயைச் சுட்டு வீழ்த்தினர். ஆனால் அது செத்து விட்டதா, அல்லது செத்து விட்டதாகப் பாவனை செய்கிறதா என்று தெரியாமல் எவரும் அருகே செல்ல அஞ்சினர். போற்றியோ ஒரு கிளையைப் பிடித்துக் கொண்டு தொங்கியவராய் கடுவாயை மிதித்து. "டேய், செத்து விட்டாயா? தூங்குகிறாயா?" என்று அதட்டினார். கடைசி மூச்சு விட்டுக் கொண்டிருந்த கடுவாய் முழு மூச்சுடன் எட்டடி உயரம் மேலே கிளம்பி அவரைத் தாக்கிற்று! அவரும் வேகமாகக் கிளையைப் பிடித்துக் கொண்டு மேலெழும்பினார். இதனால் சாகப் போகும் கடுவாய் அந்தக் கடைசி அடி மூலம் அவர் பாதத்தின் கீழ்ப் பாதியைப் பிய்த்தெடுத்துக் கொண்டு விழுந்து செத்தது!

மருத்துவ விடுதியில் அவருக்கு ஒன்றிரண்டு வாரங்கள் கடும் சிகிச்சை செய்த பின்னரே அவர் வீடு வந்தார். மீதமிருந்த வாழ் நாள் முழுவதும் கம்பு ஊன்றி நடக்கத் தொடங்கினார். சிறுவர்களாகிய



நாங்கள் அவரிடம் "போற்றி, கடுவாய் உங்களைக் கடித்ததா? நீங்கள் கடுவாயைக் கடித்தீர்களா?" என்று கேட்டுக் கிண்டல் செய்வோம்.

நான் கண்ட இரண்டாவது நிகழ்ச்சி, நாகர் கோவிலில் நான் உயர்நிலைப் பள்ளியில் ஏழாம் வகுப்பில் பயிலும் போது நேர்ந்தது. எப்படியோ ஒரு கடுவாய் இடலாக்குடி என்ற நகர்ப் பகுதியில் பட்டப் பகலிலேயே நடக்கிறது என்ற பத்திரிகைச் செய்தியுடன் ஊரில் கலக்கம் ஏற்பட்டது! கடுவாய் முன்னிரவில் ஆடு, கோழிகளைத் தின்று செறிக்க முடியாமல் அலைந்தது என்று பின்னால் தெரிந்தது. ஆனால் தெருவில் கடுவாய் தவிர, வேறு நடமாட்டம் இல்லை!

சிறு வீடுகளில் உள்ளவர்கள் ஓடிச் சென்று, பெரிய வீட்டு மாடிகளில் நின்று கிலியுடன் வேடிக்கை பார்த்தனர்! கடுவாய் அருகிலிருந்த சுசீந்தை குளம் என்ற வற்றிய ஏரியின் நடுவில் தங்கிற்று. அருகில் கரையோரத்தில் காவலர் படை, மக்கள் கூட்டம் ஆகியவற்றினிடையே தற்செயலாக நானும் அச்சத்துடன் நின்று கொண்டிருந்தேன். எவரும் கடுவாயை நெருங்கத் துணியவில்லை. கடுவாயோ நேரே எங்களை நோக்கி வந்தது. காவலர்கள், "நீ சுடுகிறாயா? நான் சுடட்டுமா?" என்று ஒருவரை ஒருவர் கேட்டுப் போருக்கு ஆயத்தமாயினர்.

ஒருவர் அருகில் நின்ற இளைஞர்களைப் பார்த்துகேலியாக "ஏனய்யா, இந்தக் கடுவாயுடன் யாராவது (மற்போர்) குஸ்தி செய்யப் போகிறீர்களா?" என்று கேட்டார். அப்போது, மது அருந்தி ஓரளவு போதையிலிருந்த 'சித்திரை' என்ற தொழிலாளி, "இதோ, நான் போகிறேன்!" என்று விரைந்து சென்று, கடுவாயின் இரு முன் கால்களையும் தன் இரு முன் கைகளால் பிடித்துப் போராட்டம் தொடங்கினான்.

கடுவாயின் கை முட்டுகள் வளையமுடியாதவை. ஆதலால் எவ்வளவு நேரம் முயன்றும் அதன் வாய்க்கோ, கைக்கோ சித்திரை பிடிபட முடியவில்லை! அது போலவே சித்திரையாலும் காலால், வயிற்றில் எட்டி மிதிப்பது தவிர, வேறு எதுவும் செய்ய முடியவில்லை. சிறந்த மற்போர் வீரர்களைப் போல் கடுவாயும் மனிதனும் சுற்றிச் சுற்றி வந்து கிடைத்த இடத்திலெல்லாம் ஒருவரை ஒருவர் தாக்கிக் காயப்படுத்தினர்.

பிற்பகல் இரண்டு மணிக்குத் தொடங்கிய இந்தப் போராட்டக் காட்சி மாலை ஐந்து மணி வரை தொடர்ந்தது. என் விழுந்தால், தரையில் விழாதபடி ஏரிக்கரை முழுவதும் இதற்குள் திரண்டு கூடி, வேடிக்கை பார்த்தது. காவலர்களோ சுழன்று சுழன்று வந்த கடுவாய்—மனிதன் ஆகிய இரண்டில் கடுவாயைச் சுடும் போது குறி தவறினால், மனிதனுக்கு ஆபத்து நேர்ந்து விடுமே என்ற கவலையுடன் நேரம் பார்த்துக் காத்திருந்தனர். இரவில் அவர்கள் சுடும் போது, கடுவாய்—மனிதன் ஆகிய இருவருமே குற்றுயிருடன் கீழே விழுந்து உருண்டனர். கடுவாயைக் காவலர்கள் உடனடியாகக் கொன்றனர்.

போர் வீரனான சித்திரை மருத்துவமனையில் ஒருநாள் முழுவதும் துடித்து இறந்தான்!

குமரி மாவட்டம் மக்கள் கவிஞருக்குப் பெயர் போனது. சித்திரையின் வீரப் போராட்டம் பற்றி அம் மாவட்டமெங்கும் நாட்டுப் பாடல்கள் எழுதி, அச்சிடப்பட்டு விற்கப் பட்டன!

பழையகதை;
புதியபாடல்

வட்டமான பொருள்



குழந்தைக் கவிஞர்

தெருவில் வட்ட மான பொருளைச்
சீனர் ஒருவர் கண்டார்.
அருகில் சென்றே ஆவ லாக
அதனைக் கையில் எடுத்தார்.

உருவம் ஒன்றை அதனில் கண்டே
உற்று நன்றாய்ப் பார்த்தார்.
'இறந்த என்றன் தந்தை உருவம்
இதுதான்' என்றே மகிழ்ந்தார்.

மனைவி கூடப் பார்த்தி டாமல்
மறைத்தே அறைக்குள் வைத்தார்.
தினமும் அதனை எடுத்து எடுத்துத்
திருட்டுத் தனமாய்ப் பார்த்தார்.

மறைந்துப் பார்த்த சமயம் ஒருநாள்
மனைவி பார்த்து விட்டாள்.
விரைந்தே அவரின் அருகில் சென்று
வெடுக்கென்றதனைப் பறித்தாள்.
உற்றுப் பார்த்தாள்;
அதிலே பெண்ணின்
உருவம் ஒன்றைக் கண்டாள்.
சட்டென் றுடனே கோபம் கொண்டு
சண்டை போட லானாள்.

''இதிலேதெரியும்பெண்ணைத்தானே
எனக்குத் தெரிந்தி டாமல்
நிதமும் எடுத்து எடுத்துப் பார்த்தீர்,
நியாய மாமோ?'' என்றாள்.

''சரியாய்ப் பார்பார், அதிலே என்றன்
தகப்ப னார்தான் தெரிவார்.
புரிந்தி டாமல் பேசு கின்றாய்,
புத்தி கெட்டாய்'' என்றான்.

''இல்லை, பெண்ணின் உருவமேதான்.
எவளோ சொல்வீர்'' என்றாள்.

''பொல்லா உனது கண்ணும் கெட்டுப்
போச்சோ'' என்றான் கணவன்.

புத்த மதத்தை அந்த ஊரில்
போதிக் கின்ற குருவும்
சத்தம் கேட்டே அங்கு வந்தார்.
தகவல் யாவும் அறிந்தார்.

அந்தப் பொருளை வாங்கிப் பார்த்தார்.
''அடடே, என்றன் குருவே
வந்து காட்சி தருகின் றாரே!
வட்டப் பொருளில்'' என்றார்.

இளைஞன் ஒருவன் அந்தச் சமயம்
எட்டிப் பார்த்தான் அங்கே
அழகு வட்டப் பொருளைக் கண்டே
அவனும் கூற லானான்:

''எந்த மனிதர் பார்த்த போதும்
இந்தப் பொருளில் அவரின்
சொந்த உருவம் தெரியும், மேலும்
சொல்லு கின்றேன்; கேட்பீர்.

இதற்குப் பெயர்தான் கண்ணாடி
என்றே கூறு கின்றார்.
புதிதாய்க் கண்டு பிடித்த தாலே
புரிய வில்லை உமக்கு.''

அந்த இளைஞன் பேச்சைக் கேட்டே
அவர்கள் உண்மை உணர்ந்தார்.
'வந்தாய் நல்ல சமயம்' என்றே
வாழ்த்த லானார் அவனை!

(முகம் பார்க்கும் கண்ணாடியைக
கண்டு பிடித்த சில நாட்களில் நடந்த
தாம் இந்த நிகழ்ச்சி!)

இராஜேஸ்வரிக்கு இத்தனை பரிசுகளா!

மயிலாடுதுறை குருஞான சம்பந்தர் மிஷன் மெட்ரிகுலேஷன் பள்ளிக்குப் பெருமை சேர்த்து வருகின்றார் செல்வி எம். இராஜேச்வரி. இந்தப் பெண் பெற்ற பரிசுகள் ஒன்றா, இரண்டா? எல். கே. ஜி. முதல் பத்தாம் வகுப்பு வரை பெற்ற பரிசுகள் 123.

ஒரே துறையில் இப்பரிசுகளைப் பெறவில்லை; மொழி, வரலாறு, கணிதம், அறிவியல், உடற்கல்வி, கலை, பேச்சு, நாடகம், நடனம், வினாடி – வினா, கதா காலட்சேபம் எனப் பலவேறு துறைகளில் பரிசுகள் பெற்றிருப்பதோடு, கல்வித் தொடக்க முதல் இதுவரைக்கும் ஒவ்வோராண்டும் பொதுக் கல்வித் தேர்ச்சியிலும் முதல் இடமும் சிறப்புப் பரிசும் பெற்றிருப்பது வியப்பளிக்கிறது.






உடற்கல்வித் துறையில் Best Champion என்ற பட்டத்தையும், தொடக்கப் பள்ளி இறுதியில் Best Outgoing Student என்ற பட்டத்தையும், Best Student of the school என்ற பட்டத்தைப் பலமுறையும் பெற்றிருக்கிறாள். இவள் பெற்ற பரிசுகளில் மாநில அளவில் Maths Talent Exam – இல், சென்ற ஆண்டு, முதலிடத்திற்கான கேடயத்தைப் பரிசாகப் பெற்றாள். தமிழ், ஆங்கிலம் ஆகிய மொழிகளுடன் இந்தியிலும் சமஸ்கிருதத்திலும் கூட நன்கு தேர்ச்சி பெற்றவள். 'ராஷ்டிர பாஷா பிரவீண்' பட்டம் பெற்ற இப்பெண், இந்த ஆண்டு பள்ளி இறுதித் தேர்விலும் 1100 – க்கு 990 மதிப்பெண்கள் பெற்றிருக்கிறாள்!

பள்ளியில் கடந்த இரண்டு ஆண்டுகளாக அக்னி (Awakening Group of National Integration) என்ற குழுவின் தலைவியாகவும், பணியாற்றி வருகிறாள்.

செல்வன் புகழொளி போல இப்பெண்ணும் மயிலாடுதுறைக்குமகிமை சேர்த்து வருவது மகிழ்ச்சிக்குரியது.

தகவல்: கம்பன் கவி இசைச் செல்வர், புலவர் ஆ. இராமபத்திரன்.



பம்பாயில் ஒரு பெரிய கம்பெனியில் மானேஜராக வேலை பார்த்து வரும் சீனுவின் பெரியப்பாவிடமிருந்து ஒரு கடிதம் வந்தது. அதைப் படித்துப் பார்த்து விஷயத்தை அறிந்ததும் பிரகாஷுக்கு ஆனந்தம் தாங்கவில்லை! காரணம், தற்சமயம் பரீட்சை முடிந்து விடுமுறையில் இருக்கும் பிரகாஷை நல்ல துணையுடன் லீவுக்கு பம்பாய் வரச் சொல்லி அவனுடைய பெரியப்பா எழுதியிருந்ததுதான்! உடனே கிளம்பியாக வேண்டுமென பிரகாஷ் குதிக்க ஆரம்பித்து விட்டான். பம்பாய் எப்படி இருக்கும் என்று இதுவரை அறிந்திராத பிரகாஷ். பெரியப்பா பையன் தினேஷ் கூட லீவைக் கழிக்கலாம் என்ற எண்ணத்தில் மனக்கோட்டை கட்ட ஆரம்பித்து விட்டான்.

"ஏம்பா! எலிபெண்டா கேவ்ஸ் பம்பாயில் இருக்கிறதா? என் புஸ்தகத்திலே வந்திருக்கே! பெரியப்பா கொண்டு போய்க் காட்டுவாரா?" எனக் கேட்டான்.

"நீ சமர்த்தா இருந்தா நான் நல்ல துணையோட உன்னைப் பெரியப்பா வீட்டுக்கு அனுப்பி வைப்பேன். எல்லா இடங்களையும் சுற்றிக் காட்டுவார். இன்னிக்கே ஆவடியிலிருக்கும் உன் அத்தை வீட்டுக்குக் கடிதம் எழுதி சென்னையிலிருந்து நண்பர்கள் யாராவது பம்பாய் போகிறவர்கள் இருந்தால், அவர்கள்கூட உன்னை அனுப்பி வைக்கச் சொல்லி ஏற்பாடு செய்கிறேன்" என்றார்!

"அதெல்லாம் யார் கூடவும் போக மாட்டேன். எனக்குத் துணையாக யாரும் வர வேண்டாம்" எனக் கூறிய பிரகாஷ், "நான் பம்பாய் போய் பெரியப்பா வீட்டிலே இறங்கினதும் எல்லோரும் என் வரவைக் கண்டு ஆச்சரியப்படணும்" என்றான். பிரகாஷின் தந்தை அதை ஏற்கவில்லை. பத்து வயது மட்டுமே நிரம்பிய உன்னை எப்படித் தனியாக அனுப்புவது? நான் சொல்வதைக் கேள். எப்படியும் நல்ல துணை அகப்படாமல் போகாது" என்று சொன்னார். பிரகாஷ் அப்பாவின் பேச்சைக் கேட்காமல் ஒரே பிடிவாதமாக இருந்

தான். ஆவடியிலுள்ள அவன் அத்தை வீட்டிற்குத் தஞ்சாவூரிலிருந்து சென்ற அனுபவம் பிரகாஷிற்கு இருந்ததால் மிகவும் வற்புறுத்தலின் பேரில் ஆவடி மட்டும் டிக்கெட் வாங்கிக் கொண்டு ரயிலேறி விட்டான். பிரகாஷின் தகப்பனாரும் அரை மனத்தோடு வழியனுப்பி வைத்தார்!

மறுநாள் காலை ஆவடியிலுள்ள அவன் அத்தை வீட்டை அடைந்தான். அத்தையின் மகன் நாகேஷ் அம்பத்தூரிலுள்ள ஒரு தனியார் நிறுவனத்தில் மேலதிகாரியாகப் பணிபுரிபவர். அவரும், ''பம்பாய்க்குத் தனியே செல்ல வேண்டாம். விரைவில் யாராவது என் நண்பர்கள் பம்பாய் செல்வார்கள். அவர்கள் கூட அனுப்பி வைக்கிறேன்'' என்று எவ்வளவோ சொல்லிப் பார்த்தார். ''அதெல்லாம் இல்லை. நாளையே நான் பெரியப்பா வீட்டிற்குப் போகப் போறேன்! சாண் பிள்ளை ஆனாலும் ஆண் பிள்ளை என்று கேள்விப்பட்டதில்லையா? என்னை ரயில் ஏற்றி விடுங்கள்'' என பிடிவாதம் பிடிக்கவே அவரும் மறுக்காமல் தாதர் விரைவு வண்டியில் ஏற்றி விட்ட கையோடு, ''பம்பாய் போய்ச் சேர்ந்ததும் உடனே பெரியப்பாவை விட்டுத் தந்தி கொடுக்கச் சொல்'' என்றார்.


புகை வண்டியில் ஏறியவுடன் துரித வண்டி என்பதால் முதலில் சற்று நேரம் மகிழ்ச்சியாகத்தான் இருந்தது. இரவு வந்ததும் பம்பாயில் தான் கண்டுகளிக்கப் போகும் இடங்களைப் பற்றிய நினைப்பில் அயர்ந்து தூங்கி விட்டான்.

மறுநாள் விக்டோரியா டெர்மினஸில் சூட்கேசோடு இறங்கிய பிரகாஷ், திரு திரு என விழித்தபடி நின்று கொண்டிருந்தான். எங்கு பார்த்தாலும் மக்களின் அலை வெள்ளம்! சுமை தூக்குபவர் ஒருவர் பிரகாஷிடம் வந்து ''கிதர் ஜாதா ஹை?'' என்றார். பிரகாஷுக்கு இந்தி புரியாததால், பதில் ஏதும் சொல்லாமல் விழித்தபடி நின்றான். அவனைப் பார்த்துப் பரிதாபப்பட்ட சுமை தூக்கி வேறு பிரயாணியைப் பார்க்க நகர்ந்து விட்டார்! கலங்கிய கண்களோடு நின்றிருந்தவனை நோக்கி வந்த ஒரு மனிதர், ''தம்பி, நீ எங்கே போகணும்?'' எனக் கேட்டார். தன் நிலையை விளக்கிய பிரகாஷ், தான் போக வேண்டிய விலாசத்தை எடுத்துக் காண்பித்தான்.

''தம்பி, நானும் அந்தப் பக்கம் தான் போகணும். உன்னைக் கொண்டு போய் உன் பெரியப்பா வீட்டிலே விட்டுடறேன்'' எனக் கூறி தன் காரில் ஏற்றிக் கொண்டு காரைச் செலுத்த ஆரம்பித்தார். முன் இருக்கையில் அமர்ந்தபடி ஜன்னலின் வழியாக பம்பாய் நகர நெரிசலையும், போக்குவரத்து வாகனங்களையும், பல மாடிக் கட்டிடங்களையும் வேடிக்கை பார்த்தபடியே சென்று கொண்டிருந்த பிரகாஷை, ஒரு பங்களா வாசலில் கொண்டு போய் நிறுத்தினார் அந்தப் புதிய மனிதர்! வாயிலில் கட்டப்பட்டிருந்த அல்சேஷியன் நாய் 'லொள் லொள்' என பயங்கரமாகக் குரைத்தது.

''பயப்படாமல் என் பின்னால் வா தம்பி, நாய் ஒண்ணும் செய்யாது. நீ அதை நண்பனாக்கிக்கிட்டா நல்லா விளையாடும். அதன் பெயர் அலெக்ஸ்'' என்றார் புதியவர்.


''எங்க பெரியப்பா உள்ளேதான் இருக்காங்களா? பெரியப்பா பையன் தினேஷ் எங்கே காணோம்? பள்ளிக்கூடம் போயிருக்கானா?'' என பிர



முட்டைக்குப் பதில்

நியூட்டன் ஒரு முறை ஆராய்ச்சியில் ஈடுபட்டவாறே உணவுக்காக முட்டையைக் கொதிக்கும் நீரில் போட்டார். சிறிது நேரம் சென்றபின் முட்டை வெந்திருக்கிறதா எனப் பார்த்தார். அவர் கையில் முட்டை இருந்தது. கையில் இருக்க வேண்டிய கடிகாரம் தண்ணீரில் வெந்து கொண்டிருந்தது!

— எஸ். ஜெயஸ்ரீ (1254),
திருச்சி — 14.



காஷ் புதிய மனிதரைக் கேட்க, அவர் சிரித்தவாறே, ''தம்பி, இது உன் பெரியப்பா வீடே இல்லே! உன் பெரியப்பாவை எனக்குத் தெரியவும் தெரியாது. அனாதையா நின்னியேன்னு கூட்டி வந்துட்டேன். எனக்குக் குழந்தை கிடையாது. உன்னைப் பார்த்ததும் எனக்கு ரொம்பவும் பிடிச்சுப் போச்சு. சுவீகாரம் எடுத்துக்கலாம்னு என் வீட்டுக்குக் கூட்டி வந்திருக்கிறேன்'' என்று சிரித்துக் கொண்டே சொன்னார். இதைக் கேட்டதும், பிரகாஷ் ஒரு முறை உடலைச் சிலிர்த்துக் கொண்டான். அவன் சந்தோஷம் போன இடம் தெரியவில்லை.


''கவலைப்படாதே பிரகாஷ்! அருகிலேயே பள்ளிக்கூடம் இருக்கு. தினமும் காரிலேயே ஸ்கூல் போயிட்டு வரலாம். உள்ளே போய்க் குளிச்சுட்டுச் சாப்பிடு. மாமிக்கிட்டே விவரம் சொல்லியிருக்கேன்'' என்று கூறியவர் காரை எடுத்துக் கொண்டு அவசரமாக வெளியே போய் விட்டார்!

''தம்பி பிரகாஷ், சூடா வெந்நீர் இருக்கு. பாத்ரூமிலே போய்க் குளிச்சுட்டு வாப்பா. சாப்பிடலாம்'' என்றார் அந்த வீட்டு எஜமானியம்மாள், மாமி!

''தயவு பண்ணி என்னை எங்க பெரியப்பா வீட்டுக்கே கொண்டு போயி விட்டுடச் சொல்லுங்கோ! உங்க வீட்டுக்காரர் என்னை ஏமாற்றி அழைச்சுக்கிட்டு வந்துட்டார். உங்களுக்கு ரொம்பப் புண்ணியம் உண்டு'' என்று கெஞ்சிய பிரகாஷை, ''இனிமேல் நீ எங்க வீட்டுப் பிள்ளை தான். ம்.. போய்க் குளிச்சுட்டு வா'' என மாமி அன்பொழுகக் கூறினாள்.

பிரகாஷ் முள்ளின் மேல் நிற்பதாக நினைத்தான். வேறு வழி தெரியாமல் குளித்து விட்டு வந்தவன், சாப்பாட்டு மேஜை மேல் இலையில் பரிமாறியிருந்த உணவு வகைகளைப் பார்த்து விட்டு, அதிர்ச்சியடைந்தவனாய் நின்று விட்டான். வகை வகையான பலகாரங்கள் அங்கிருந்தன.

'அடேயப்பா! நான் வரப் போவது எப்படி இவர்களுக்குத் தெரியும்?



தாய் : இது என்னடா அநியாயமாக இருக்கு! என்னதான் பசியாக இருக்கட்டும். அதற்காகப் பத்து ரூபாய்க்கா ஓட்டலில் சாப்பிடுவது?

மகன் : என்னம்மா செய்வது? பசி வந்திடப் பத்தும் பறந்து போயிடுத்து!

— சி. டி. காசி (21,301), மதுரை — 2

அல்லது தினமுமே இந்த வீட்டில் இப்படித்தான் சமைப்பார்களோ? சிந்தித்த வண்ணம் நின்று கொண்டிருந்த பிரகாஷை, மாமி தோளைப் பிடித்து நாற்காலியில் அமரச் செய்தாள். பிரகாஷுக்கு தொண்டையை அடைத்தது. நாகேஷ் மாமா போய்ச் சேர்ந்ததும் தந்தி கொடுக்கச் சொல்லியிருந்தாரே! என் நிலைமையை எவ்வாறு விளக்குவேன்? ஊரில் அம்மா, அப்பா கவலைப்பட்டுக் கொண்டிருப்பார்களே!' இதையெல்லாம் நினைக்க நினைக்க சாப்பாடே இறங்கவில்லை. ஏதோ சாப்பிட்டோம் எனப் பெயர் செய்து விட்டு ஹாலுக்கு வந்தான் பிரகாஷ்! "சோபாவில் படுத்துக்கோ. வேண்டுமானால் டி.வி. போடுறேன்" என்று டி.வி.யையும் 'ஆன்' செய்து விட்டுச் சென்றார் அந்த வீட்டு மாமி!

டி.வி.யில் நாட்டம் செல்லவில்லை. 'நாகேஷ் மாமா தகுந்த துணையோடே அனுப்பி வைக்கிறதாச் சொன்னதைக் கேட்காமல் அவரோட பேச்சை மீறி வந்து இங்கே மாட்டிக் கொண்டோமே!' என வேதனைப்பட்டான். 'நான் தனியாக கிளம்பி வந்ததுக்காக ஆண்டவன் நல்லா தண்டனை கொடுத்திட்டார். பெரியப்பா வீட்டுக்கு, அவர்கள் எதிர்பாரத போது திடீர்னு போய் எதிரே நிற்கணும்னு கிளம்பினது தப்புத்தான்' என மனசுக்குள் அரற்றிக் கொண்டிருந்தவன் எப்போது கண் அயர்ந்தான் என்பது அவனுக்கே தெரியாது!

அவன் கண்விழித்த போது சூரியன் மறைந்து அஸ்தமனமாகியிருந்தது. தன் கண்களைத் தானே நம்ப முடியாத நிலையில் இருந்த பிரகாஷ், கண்களை நன்றாகக் கசக்கி விட்டுக் கொண்டான். கனவோ என நினைத்து தன்னைத் தானே கிள்ளிப் பார்த்துக் கொண்டான். கனவு அல்ல; நிஜமே என உணர்ந்தான். ஆம்! புகை வண்டி நிலையத்திலிருந்து காரில் தன்னை அழைத்து வந்த புதிய மனிதருடன் கூட அவன் பெரியப்பா இருப்பதைக் கண்டு திடுக்கிட்டு சோபாவிலிருந்து துள்ளி எழுந்தான்.

"பெரியப்பா!" எனக் கூறிக் கொண்டே சென்று பெரியப்பாவைக் கட்டிக் கொண்டான். பிரகாஷின் பெரியப்பா சிரித்துக் கொண்டே, "நல்லபடியா நீ வந்து சேர்ந்துட்டதா காலையிலேயே ஆவடிக்குத் தந்தி கொடுத்துட்டேன். கவலைப்படாதே! தனியாப் புறப்பட்டு வருவது ஆபத்து என்பதை உனக்குப் புரிய வைப்பதற்காகவே இந்த நாடகம். இந்த மாமா என் கூட வேலை பார்ப்பவர்தான்! நீ வரப் போகிற விஷயம் குறித்து ஆவடியிலிருந்து நாகேஷ் மாமா நேற்றே எனக்குத் தொலைபேசி மூலம் தெரிவித்து விட்டார். நானும் இந்த மாமாவும் காலையில் புகை வண்டி நிலையம் வந்தோம். இந்த மாமாவிடம் உன்னை அடையாளம் காண்பித்து விட்டு, நான் உன் கண்ணில் படாமல் ஆபீஸ் போயிட்டேன். உன்னை இங்கே கொண்டு வந்து விட்டுட்டு, நேரா ஆபீஸ் வந்த இந்த மாமா என்னிடம் விவரம் முழுதும் கூறினார். இதே மாதிரித் தவறை மறுபடியும் நீ செய்திடக் கூடாது என்பதற்காகத்தான் உன்னை இத்தனை நேரம் தவிக்க விட்டுட்டோம். என் மேல் கோபமா?" என்று பெரியப்பா கேட்க, "இல்லை பெரியப்பா, நான்தான் தப்பு பண்ணிட்டேன். இனி மேல் இது மாதிரி தனியாகக் கிளம்பி வர மாட்டேன்" என்று கண்கலங்கக் கூறிய பிரகாஷ் அந்த வீட்டுக்கார மாமாவிடமும் மாமியிடமும் விடை பெற்றுக் கொண்டு, தன் பெரியப்பாவுடன் புறப்பட்டான் அளவில்லாத ஆனந்தத்தோடு!

சித்திரப் புதிர்! 29

ஆழி ———



1
இது
எந்த நாட்டுக்
குழந்தை?



2
இது
எந்த
மாநிலத்தின்
சுற்றுலாச்
சின்னம்?

3
இந்தப்
பறவையின்
பெயர்
என்ன?





4
இது
என்ன கொடி?



5
இது எந்த
விளையாட்டைக்
குறிக்கிறது?

விடை : வேறு பக்கம்

பிருந்தாவனக்

அதிசயப் பூசனிக்காய்

மு. முத்துவேல் (21247)



செல்வபுரம் என்றொரு ஊரில் சுப்பன் என்ற ஏழைக் குடியானவன் இருந்தான். அவன் தன் வீட்டுப் பக்கத்தில் உள்ள இடத்தில் ஒரு காய்கறித் தோட்டம் போட்டு, அதில் விளையும் காய்கறிகளை விற்று வந்தான். சுமாராகப் பிழைப்பு ஓடிக் கொண்டிருந்தது. அவன் தினசரி கடவுளிடம், ''கடவுளே, நான் தினமும் கஷ்டப்படுவது உனக்குத்தான் தெரியுமே! எனக்கு ஒரு தடவையாவது உதவக் கூடாதா?'' என்பான்.

ஒருநாள் அவன் உறங்கிக் கொண்டிருக்கும் போது, அவன் கனவில் கடவுள் தோன்றி, ''ஏய் சுப்பா, நீ கவலையாக இருக்கிறாய். நாளைக் காலையில் நீ உன் தோட்டத்திற்குப் போ. உனக்கு ஆச்சர்யமாக இருக்கும்.'' என்று கூறி மறைந்தார். சுப்பன் மறுநாள் அதிகாலையில் தோட்டத்திற்கு ஆவலுடன் சென்றான். சுற்றுமுற்றும் பார்த்தான். கடவுள் கூறியது போல் எதுவும் இல்லாததால் வருத்தமுற்றான்.

அப்போது திடீரென்று 'கலகல' வென்ற சிரிப்பொலி கேட்டது. அவன் திரும்பிய போது, ''ஏய், என்னைத் தெரியவில்லையா? ராத்திரிக் கூட கடவுள் உன் கனவில் கூறியிருப்பாரே!'' என்று ஒரு பூசனிக்காய் கூறியது. உடனே சுப்பன் அதன் அருகில் வந்து ''ஏய் பூசனிக்காய், உன்னால் என்ன பயன்? உன்னை விற்றால் 5 ரூபாய்தான் கிடைக்கும்'' என்று சொன்னதுதான் தாமதம். பூசனிக்காய் பறந்து வந்து, அவன் மண்டையில் ''ணங், ணங்'' என்று இருமுறை முட்டியது. அவன் தன் தலையைத் தடவிய போது அந்தப் பூசனிக்காய் ''என்னை யாராவது பூசனிக்காய் என்று கூறினால், கோபம் வரும். நீ கடவுள் அருள் பெற்றவன் என்பதால் விட்டு விடுகிறேன். இனி உனக்குக் கவலையே இல்லை. என்னை உன் வீட்டிற்கு எடுத்துப் போய்த் தினமும் ஒரு முறை என் கொண்டையைத் திருகினால் உனக்கு 50 தங்கக் காசுகள் கிடைக்கும். நீ சுகமாக வாழலாம்.'' என்றது.

''அப்படியா! ரொம்ப சந்தோஷம், பூசனிக்காய்...'' என்று சொல்ல வாயெடுத்தவன், ஏற்கெனவே பட்ட அடி வலித்ததனால் வாயை மூடிக் கொண்டான்.

நடந்ததை எல்லாம் மனைவியிடம் சொல்லி, காம்பைத் திருகினான். பூசனிக்காய் கூறியது போல் 50 தங்கக் காசுகள் கிடைக்கவே மகிழ்ந்தான். பெரிய பணக்காரன் ஆனான். இது எப்படியோ அந்த நாட்டு மன்னனுக்குத் தெரிய வந்தது.

''சுப்பனிடமிருந்து அந்த மந்திரப்

கதையரங்கம்

பூசனிக்காயைப் பறித்து வாருங்கள்" என ஆணையிட்டான்.

சுப்பன் உடனே பயந்து போய்ப் பூசனிக்காயை எடுத்து அரசனின் ஆட்களிடம் கொடுத்து விட்டான். அவர்கள் கொண்டு வந்து அரசனிடம் கொடுத்தவுடன், ''இந்தப் பூசனிக் காயா தங்கக் காசுகள் தினமும் கொடுக்கிறது! இதுவா மந்திரப் பூசனிக்காய்?'' என்றான்.

'பூசனிக்காய்' என்று அதைச் சொன்னதால் 'படார்', 'படார்' என்று அரசனை, அது மண்டையில் தாக்கத் தொடங்கியது. சபையிலுள்ள அத்தனை பேரும் ''பிடியுங்கள் பூசனிக் காயை'' என்று பிடிக்க வந்தனர். அவர்களுக்கும் அடி பலமாக விழுந்தது! மன்னன் சுப்பனை அழைத்து வர ஆள் அனுப்பினான். உடனே சுப்பன் ஓடி வந்து பார்த்தான்.

அங்கு பூசனிக்காய் அனைவரையும் சுழன்று சுழன்று தாக்கியது கண்டு அமைதியாக நின்றான். உடனே அரசன் சுப்பனிடம் ''இதை நிறுத்து'' என்றார். ''இல்லை. இதைத் தாங்களே எடுத்துக் கொள்ளுங்கள். எனக்கு வேண்டாம்'' என்று கூறினான் சுப்பன். அதற்கு மன்னன், ''சுப்பா, என்னை மன்னித்து விடு. நான் இனி மேல் காசுக்கு ஆசைப்பட மாட்டேன்'' என்றான்.

உடனே சுப்பன் ''கண்ணே, ராசா வா. எல்லோரையும் அடித்தது போதும். நம் வீட்டுக்குப் போவோம் வா'' என்று அழைத்ததும், மந்திரப் பூசனிக்காய், ''நீ என்னைச் சுமக்க வேண்டாம். நானே உன் பின்னால் பறந்து வருகிறேன்'' என்று அவன் பின்னால் பறந்து சென்றது. சபையிலுள்ள அனைவரும் சுப்பனை அதிசயமாகப் பார்த்தனர்!

எது பெரிது?

மா.தா.ஸ்ரீதர் (13601)



பொன்வகரம் என்னும் ஊரில் அறிவுடை நம்பி என்பவர் வாழ்ந்து வந்தார். அவர் மனத்தில் ஒரு சந்தேகம் ஏற்பட்டது. அவர் ஒரு பெரியவரைப் பார்த்து, ''கல்வி பெரிதா? செல்வம் பெரிதா?'' என்று கேட்டார்.

அதற்கு அவர், ''கல்விதான் பெரியது!'' என்று பதிலளித்தார்; ஏனென்றால், அவர் படித்தவர்; செல்வம் இல்லாதவர். அதனால், அப்படிப் பதில் அளித்தார்.

''ஐயா, தாங்கள் கல்விதான் பெரியது என்கிறீர்கள். நானோ செல்வம் தான் பெரியது என்று கூறுகிறேன். இதற்கு என்ன பதில் சொல்வீர்கள்?'' என்று அறிவுடை நம்பி வாதாடினார்.

''தம்பி! செலவு செய்யச் செய்யச் செல்வம் குறையும். கடைசியில் ஒன்றுமே இருக்காது! மேலும் அது

ஒரு நாளைக்கு வரும், இன்னொரு நாளைக்குப் போய்விடும்! ஆனால் கல்வியோ அழியாதது. அதைப் பயன் படுத்த, பயன்படுத்த குறையாது. மாறாக நம் கல்வியறிவு வளரும். மேலும், திருடர்களால் கல்வியைத் திருட முடியுமா? செல்வத்தை எத்தனை வீடுகளில் திருடியிருக்கிறார்கள்?'' என்று அப் பெரியவர் எதிர் வாதம் செய்தார்.

அறிவுடை நம்பிக்கோ திருப்தி ஏற்படவில்லை! அதே சந்தேகத்தை அவ்வூருக்கு அடுத்த ஊரில் இருந்த ஒரு பெரியவரைக் கேட்டார்.

அவர் கொஞ்சமும் தாமதிக்காமல், ''செல்வம்தான் பெரியது!'' என்றார். அவர் படிக்காதவர். ஆனால், பணக்காரர். அதனால் அப்படிப் பதில் சொன்னார்.

அறிவுடை நம்பி விடவில்லை! ''எப்படிச் செல்வம் பெரிதாகும்?'' என்று கேட்டார்.

''உனக்கு உணவு வேண்டுமானால், சும்மா கிடைக்குமா? காசு இருந்தால் தானே பொருள்கள் வாங்கி, சமைத்துச் சாப்பிட முடியும்? ஆகவே, நாம் உயிர் வாழ அவசியம் பணம் வேண்டும் அல்லவா?'' என்று அப் பெரியவர் விளக்கம் தந்தார்.

அப் பெரியவரின் பேச்சும் அறிவுடை நம்பிக்கு நிறைவு தரவில்லை! பேசாமல் வீட்டிற்கு வந்து படுத்துக் கொண்டார். நள்ளிரவு நேரத்தில் அவருக்கு ஒரு கனவு வந்தது. அதில், கலைமகளும், திருமகளும் தோன்றினார்கள்.

''மகனே! உனக்கு என்ன வரம் வேண்டும்?'' என்று இரு தேவியரும் கேட்டார்கள்.

''எனக்கு வரம் ஒன்றும் வேண்டாம்! என் சந்தேகத்தைத் தீர்த்து வைத்தால் போதும்!''

தேவியர் இருவரும் சிரித்தார்கள்.

''ஏன் சிரிக்கிறீர்கள்?''

''எங்களைக் கண்டால், எவரும் கஷ்டம் நீங்க வரம் தர வேண்டும் என்றுதான் கேட்பார்கள். நீ என்னவோ சந்தேகம் தீர்க்க வேண்டும் என்கிறாயே! அதனால்தான் சிரித்தோம். சரி! உன் சந்தேகம் என்ன?''

''தேவியரே! கல்வி பெரிதா? செல்வம் பெரிதா?''

''இதில் சந்தேகப்படுவதற்கு என்ன இருக்கிறது? செல்வம்தான் பெரியது!'' என்றார் திருமகள்.

''செல்வம் எப்படிப் பெரிதாகும்? சந்தேகத்தைத் தீர்ப்பது பதில்தானே தவிர, பணம் அல்ல! எப்பொழுது வினா விடை என்றாகி விட்டதோ அங்கு கல்விக்குத்தான் இடம். பணத்திற்கு அல்ல! எனவே கல்வியே பெரிதாகும்'' என்றாள் கலைமகள்.

''கல்வியா? செல்வமா? எது பெரியது என்று கேட்கும் பொழுது 'செல்வம்தான் பெரியது!' என்று பதில் சொன்னால் கூட ,பணமா கொடுக்கப் போகிறோம்? பதிலைத் தானே கொடுக்கப் போகிறோம். ஆகவே பணமாக இல்லாமல் 'பதிலாக' இருந்தாலும் செல்வம்தான் பெரியது'' என்றாள் மீண்டும் திருமகள்.

''இல்லை! கல்விதான் பெரியது!''

''இல்லவே இல்லை. செல்வம் தான் பெரியது!''

கலைமகளும், திருமகளும் மாறி மாறிப் பேசிக் கொண்டு சண்டையிட்டனர்.

''நிறுத்துங்கள், நிறுத்துங்கள்!'' என்று அறிவுடைநம்பி அலறினார்.

''எதை நிறுத்துவது? முதலில் உங்கள் உளறலை நிறுத்துங்கள். இன்றைக்குத்தான் காலேஜ் திறக்கிறார்கள். இன்றைக்கே காலேஜ் பணம் கட்ட வேண்டும். உங்கள் நண்பரைப் பார்த்து, அவர் கொடுப்பதாகச் சொன்ன பணத்தை முதலில் வாங்கிக் கொண்டு வாருங்கள். பிள்ளையைப் படிக்க வைப்பதுதான் முக்கியமான வேலை! எழுந்திருங்கள்'' என்று அறிவுடைநம்பியை எழுப்பினாள் அவரின் மனைவி.

கலைமகளும், திருமகளும் மறைந்தார்கள். கனவு கலைந்தது. மனைவியின் கூற்று மூலம் அவர் சந்தேகம் தீர்ந்தது. படுக்கையை விட்டு எழுந்து காலைக் கடன்களை முடித்தார்.

''தேவியரே! நீங்கள் இருவரும் சண்டையிட்டது ஒரு கனவாக இருக்கட்டும். மக்களுக்குக் கல்வியையும்

செல்வத்தையும் வாரி வாரி வழங்குங்கள். பிள்ளைகளுக்கு அப்பா அம்மா போல மக்களுக்குக் கல்வியும் செல்வமும் அவசியம் வேண்டும்'' என்று அறிவுடை நம்பி வணங்கி வழிபட்டார். பின்பு நண்பரிடமிருந்து பணத்தைப் பெற்று, பிள்ளையைக் கல்லூரியில் சேர்க்கப் புறப்பட்டுப் போனார்.



சுந்தர் எட்டாம் வகுப்பில் படித்துக் கொண்டிருக்கிறான். அவனுடைய பெற்றோருக்கு அவன் ஒரே பையன். அவனுடைய தந்தை திருச்சியில் பெரிய கம்பெனி ஒன்றில் மேலாளராக வேலை பார்க்கிறார். அதனால், வசதியுள்ள குடும்பமாகச் சுந்தரின் குடும்பம் இருந்தது.

ஒரு நாள் சுந்தர் தன் வீட்டு வாசலில் அமர்ந்து பாடம் படித்துக் கொண்டிருந்தான். அவன் தந்தை வீட்டின் உள்ளே அலுவலகம் செல்வதற்காகச் சாப்பிட்டுக் கொண்டிருந்தார். அப்பொழுது வாசலில்,

''தம்பி, ஐயா இருக்காங்களா...?'' என்று கேட்டுக் கொண்டே ஒரு பெரியவர் வந்தார்.

சுந்தருக்குப் படு எரிச்சலாக இருந்தது. 'யாரோ ஒரு பிச்சைக்காரக் கிழவன் தன் அப்பாவிடம் பணம் வாங்க வந்திருக்கிறான்' என்று நினைத்துக் கொண்டான்.

அவருடைய தலை கலைந்திருந்தது. வேட்டி அழுக்காக இருந்தது. அவருடைய சட்டையோ கைப் பக்கம் சிறிது கிழிந்திருந்தது. கக்கத்தில் அழுக்கான சிறு பை ஒன்றும் இருந்தது.

''கை கால்கள் தான் நன்றாக இருக்கிறதே, உழைத்துச் சாப்பிடக் கூடாதா?'' என்று நினைத்துக் கொண்டே, ''ஐயா ஊரில் இல்லை... போ... போ...'' என்று அவரை விரட்டினான்.

''ஐயா இல்லாவிட்டால் என்ன... அம்மாவிடம் போய் 'சுந்தரேசன் வந்திருக்கிறார்' என்று சொல்...'' என்று நிதானமாகக் கூறினார் அந்தப் பெரியவர்.

''அம்மாவும் வீட்டில் இல்லை... 'போ' என்று சொன்னால், போய் விட வேண்டியதுதானே....'' என்று கூச்சல் போட்டான் சுந்தர்.

வாசலில் ஏதோ சப்தம் கேட்கிறதே என்று சுந்தரின் அப்பா, ''என்ன தம்பி.... யார் அங்கே....?'' என்று கேட்டுக் கொண்டே வெளியில் வந்தார். வந்தவர் பெரியவரைப் பார்த்தவுடன்,

''அடேடே.... சுந்தரேசன் அய்யாவா....! வாங்க வாங்க... ஏன் வெளியிலேயே நின்று கொண்டிருக்கிறீர்கள்....?'' என்று மகிழ்ச்சியுடன் அவரை உள்ளே அழைத்துச் சென்றார்.

சுந்தருக்கு வியப்பாக இருந்தது. 'ஒரு பிச்சைக்காரனைப் போய் நம் அப்பா இவ்வளவு மதிப்புக் கொடுத்து உள்ளே மகிழ்ச்சியுடன் அழைத்துச் செல்கிறாரே!' என்று நினைத்து அவர்களின் பின் சென்றான்.

பெரியவரை உள்ளே அழைத்துச் சென்ற சுந்தரின் அப்பா, அவரை ஓர் இருக்கையில் உட்கார வைத்துவிட்டு ''கமலா, இங்கே வந்து பார், யார் வந்திருக்கிறார் என்று தெரிகிறதா?'' என்று கேட்டார்.

சுந்தரின் அம்மா அவரைப் பார்த்ததும், இரு கை கூப்பி வணங்கி, ''அடடே, உங்களைப் பார்த்து எத்தனை வருஷங்களாகி விட்டது!

சித்திரப்புதிர் 29 - விடை

1. ஜப்பான்,
2. கேரளா,
3. பப்பின்,
4. மிளகு,
5. கூடைப்பந்து.

இதோ 'கூல் டிரிங்ஸ்' கொண்டு வருகிறேன்'' என்று கூறி விட்டு உள்ளே சென்றாள்.

'கூல் டிரிங்' சாப்பிட்ட பின், பெரியவரிடம் சுந்தரைக் காட்டி, ''இவன்தான் என் மகன்... எட்டாம் வகுப்பில் படித்துக் கொண்டிருக்கிறான்'' என்று சுந்தரின் அப்பா கூறினார். பின்பு சுந்தரிடம்,

''இவர் யாரென்று உனக்கு தெரியுமா...?'' என்று கேட்டார். சுந்தர் மிகவும் பயந்து விட்டான். கை கால்களெல்லாம் நடு நடுங்கின. பின்பு அவன் அப்பா சிரித்துக் கொண்டே,

''உனக்குத் தெரிந்திருக்க நியாயமில்லை... இவர்தான் நம்மை வாழ வைத்த தெய்வம். குறிப்பாக எனக்குத் தெய்வம்தான்.... நான் சிறு பிள்ளையாயிருந்த போதே, உன் தாத்தா இறந்து விட்டார். அதனால் வறுமையால் வாடிய நமது குடும்பத்தில் என்னால் படிப்பைத் தொடர முடியவில்லை. எதிர் வீட்டுக்காரரான, இவர்தான் என் மீது அன்பு கொண்டு, என்னைப் படிக்க வைத்தார்.... வீட்டிற்கும் வேண்டிய உதவிகளைச் செய்து வந்தார். நான் இந்த நிலைமைக்கு வந்ததற்கும், நம் குடும்பம் நல்ல நிலையில் இருப்பதற்கும் இவர்தான் காரணம்....'' என்று சொல்லும் போது அப்பாவின் கண்களில் நீர் தெரிந்தது.


சுந்தரத்திற்கு மனம் பதறியது. நம்மால் தெய்வமாக மதிக்கப்பட வேண்டியவரை, கடுஞ் சொற்களால் பேசி விட்டோமே என்று வருந்தினான். வருத்தம் அழுகையானது. திடீரென்று அந்தப் பெரியவரின் கால்களில் விழுந்து, ''ஐயா.... என்னை மன்னித்து விடுங்களய்யா...'' என்று கதறினான்.


''தாங்கள் யார் என்று தெரியாமல் தோற்றத்தைக் கண்டு அறிவிழந்து விட்டேன்... கடுஞ் சொற்கள் பேசி, தங்கள் மனத்தைப் புண்படுத்தி விட்டேனே..... என்னை மன்னியுங்கள்...'' என்று அழுதான்.

உடனே அந்தப் பெரியவர் அவனைத் தூக்கி நிறுத்தி, ''வருத்தப்படாதே தம்பி... ஏதோ தெரியாமல் செய்து விட்டாய்.... உன்னை நான் எப்பொழுதோ மன்னித்து விட்டேன்... அழாதே.... தெரியாமல் தானே செய்தாய்....?'' என்று கூறி அவன் கண்களைத் துடைத்தார்.

சுந்தரின் அப்பாவுக்கு நடந்தது ஒருவாறு புரிந்து விட்டது. உடனே அவர், ''ஐயா.... நீங்கள் என்னை முதலில் மன்னியுங்கள்.... கிராமத்திலிருந்து தாங்கள் வருவதாய் எனக்குக் கடிதம் எழுதியிருந்தீர்கள்... அதை நான் இவனிடம் முன்பே சொல்லவில்லை... அப்படிச் சொல்லியிருந்தால்.... எத்தனையோ முறை நான் அழைத்தும் இன்றுதான் வந்திருக்கும் தங்களை வரவேற்க இவனும் காத்துக் கொண்டிருந்திருப்பான்... உங்களுக்கு இப்படி ஒரு சங்கடம் ஏற்பட்டிருக்காது......'' என்று கூறி அவர் கால்களைப் பற்றினார்.


''என் உடையையும் தோற்றத்தையும் தற்போது கண்டவர்கள் நான் ஒரு காலத்தில் எப்படி இருந்தேன் என்பதை அறிய மாட்டார்கள். என் சொந்த அண்ணன் மகனை நம்பி மில்லின் மேலாளராக நியமித்ததும், அவன் லட்சக்கணக்கில் மோசடி செய்து என்னை இந்த நிலைமைக்குக் கொண்டு வந்து விட்டான் என்பதும் இந்தத் தம்பிக்கு எப்படித் தெரியும்? ஆயினும், 'தவறுதல் மனித இயற்கை... அதற்காக வருந்துவதன் மூலம் அந்தத் தவறு மீண்டும் நிகழாமல் பார்த்துக் கொள்ள வேண்டும்' என்று காந்தியடிகள் கூறியிருக்கிறார்.... ஆகவே அந்தத் தவறு நீக்கப்பட்டு விட்டது.....'' என்று கூறி இருவரையும் அரவணைத்துக் கொண்டார்.





இரண்டு படங்களும் இரண்டு பழமொழிகளை நினைவுபடுத்துகின்றன.
எந்த எந்தப் பழமொழிகள்?

விடை 63 — ஆம் பக்கம்.



இப்படியும் நடக்குமா?

பிரபுசங்கர்

பள்ளிக்கூடத்தில் ஆறாம் வகுப்பு 'பி' பிரிவில் ஆறுமுகம்—சம்பத் இருவரும் பயின்று வந்தார்கள். இருவரும் நெருங்கிய நண்பர்கள். சம்பத்துடைய குணத்தை நன்கு புரிந்து வைத்திருந்த ஆறுமுகம், அவ்வப்போது பிறர் துன்புறுவதைக் கண்டு மகிழும் அவனுடைய போக்கை மட்டும் மாற்ற இயலாதவனாக இருந்தான்.

பரீட்சை முடிந்து பள்ளி விடுமுறை அறிவித்தார்கள். ஆறுமுகம், தன்னுடைய கிராமத்துக்கு வரும்படி சம்பத்தை அழைத்தான்.

"ஐயோ, பட்டிக்காட்டுக்கா கூப்பிடறே? நீ வேணுமானா இங்கேயே இருந்துடேன். பட்டணத்து ஜாலி வாழ்க்கை அங்கே கிடைக்குமா?" என்றான் சம்பத். கிராமம் என்றாலே இளப்பம் அவனுக்கு. பள்ளியில் படிக்கும் கிராமத்துப் பையன்களைக் கேலி செய்து அவர்கள் அழுவதைப் பார்ப்பது அவனுக்கு வேடிக்கை.

"ரொம்ப வேண்டாம். இரண்டு நாட்கள் அங்கே இருந்துவிட்டு வரலாம் வா. எப்போது பார்த்தாலும் கார், டி.வி., வீடியோ, சினிமான்னு பொழுதுபோக்க போரடிக்கல்லியா உனக்கு? ஒரு மாறுதலுக்கு என் ஊர்ப் பக்கம்தான் வாயேன்" என்று வற்புறுத்தி அழைத்தான் ஆறுமுகம்.

சம்பத்தும் தன் பெற்றோரிடம் அனுமதி கேட்டுக்கொண்டு வந்தான். ஹாஸ்டலில் தங்கியிருந்த ஆறுமுகம், தன் பெட்டியை எடுத்துக் கொண்டான். இருவருமாக கிராமத்திற்குப் புறப்பட்டார்கள்.

பூம்பொழில் கிராமம்தான் எவ்வளவு சுத்தமாக இருந்தது! புகை இல்லை; எரிச்சல் இல்லை; இரைச்சல் இல்லை; யந்திரத்தனம் இல்லை. எங்கு பார்த்தாலும் பசுமை, அமைதி, அழகு, அதுவரை அனுபவித்தறியாத சுகமான இயற்கைக் காற்று. கால் நடைகளும், கழனிகளும் சம்பத்துக்குப் புதுக்காட்சிகள்தான் என்றாலும் அந்தப் புதுமைச் சந்திப்பில் அவன் உள்ளம் குதூகலிக்கத்தான் செய்தது.

மணக்கும் தேங்காய் எண்ணெயில் செய்த பலகாரங்களை ருசித்து உண்ட அவன், ஆறுமுகத்தின் ஆலோசனைப்படி, அவனுடன் கிராமத்தைச் சுற்றிப்

பார்க்கப் புறப்பட்டான்.

திவலைகள் கட்டியம் கூற, நீர் நிறைந்த பெரியகுளம் ஒன்று அவ்விருவர் கவனத்தையும் கவர்ந்தது.

''குளிப்போமா?'' என்று சம்பத் கேட்டான்.

''உனக்கு நீச்சல் தெரியுமா?'' — ஆறுமுகம் திருப்பிக் கேட்டான்.

''ஐந்து நட்சத்திர ஓட்டலில் பல முறை குளித்திருக்கிறேன். அங்குள்ள நீச்சல் குளத்தில் பிரமாதமாக நீச்சலடிப்பேன்.''

''அப்போ வேண்டாம். சில சமயம் உள்ளே பாசி இருக்கும். வழுக்கி விடும். ஆபத்து!'' என்று தடுத்தான் ஆறுமுகம்.

''ஹூம்...'' ஏக்கமாய்ச் சொன்ன சம்பத் சுற்றுமுற்றும் திரும்பிப் பார்த்தான்.

குளக்கரையில் ஒரு வேட்டியும் ஒரு சட்டையும் மடித்து வைக்கப்பட்டிருந்தன. அதைப் பார்த்தவுடனேயே அவனுக்கு ஒரு வேடிக்கையான எண்ணம் உதித்தது. ''ஆறுமுகம், இந்த வேட்டி சட்டையை எடுத்து ஒளித்து வைத்துவிடலாமா? குளத்தில் குளிப்பவன் வந்து பார்த்துத் திண்டாடுவான்; தவிப்பான். பார்க்க வேடிக்கையாக இருக்கும்'' என்றான் உற்சாகத்துடன்.

''தப்பு சம்பத்'' ஆறுமுகம் அவசர அவசரமாக மறுத்தான். ''அதோ அங்கே குளிக்கிறானே, அவன் ஓர் ஏழை உழவன். பாவம், அவனுடைய இந்த வேட்டி, சட்டையைக் காணவில்லை என்றால், அவன் ரொம்பவும் தவித்துப் போவான். அரையில் கட்டிய சிறு துண்டோடு, எங்கோ தொலை தூரத்தில் இருக்கும் தன் வீட்டிற்கு நடந்து போக ரொம்பவும் கூச்சப்படுவான்... ம்... அதற்குப் பதிலாக இப்படிச் செய்வோம். அவனுடைய சட்டைப் பையில் ஓர் ஐந்து ரூபாய்த்தாளைச் செருகிவைப்போம். அதைப் பார்க்கும் அவன் எவ்வளவு சந்தோஷப்படுவான்! நமக்கும் அதைப் பார்க்க மனநிறைவாக இருக்கும்'' என்றான்.

சம்பத் உடனே தன் எண்ணத்திற்காக ரொம்பவும் வெட்கப்பட்டான். ''ஆறுமுகம், நான் சொன்னது தப்புத்தான். உன் எண்ணப்படியே செய்யலாம்,'' என்றான்.

அதேபோல அந்த உழவனின் சட்டைப் பையில் ஓர் ஐந்து ரூபாய்த் தாளை இருவரும் திணித்துவிட்டு, ஓடிப் போய்ப் பக்கத்துக் கோவிலில் ஒளிந்து கொண்டார்கள்.

உழவன் குளித்துவிட்டுக்கரையேறினான். உடலைத் துண்டால் துடைத்துக் கொண்டு, சட்டை, வேட்டியை அணிந்து கொண்டான். தற்செயலாகத் தன் சட்டைப் பையைத் தொட்டுப் பார்த்த அவன், அதில் ஓர் ஐந்து ரூபாய் நோட்டு இருப்பது கண்டு திடுக்கிட்டான். அதை வெளியே எடுத்து அதைத் திரும்பத் திரும்பப் பார்த்தான். 'எப்படி இந்தப் பணம் என் பைக்குள் வந்தது?' என்று யோசித்தான். ஒன்றும் புரியவில்லை.

எதிர்பாராமல் கிடைத்த அந்தப் 'பரிசை'க் கண்டு அவன் ஆனந்தக் கூத்தாடவில்லை; அகமகிழவில்லை. சற்று நேரம் யோசித்தான். பிறகு ஒரு தீர்மானத்திற்கு வந்து கோவிலை நோக்கிச் சென்றான்.





"கடவுளே! இந்தப் பணம் என் சட்டைப் பைக்குள் எப்படி வந்ததோ தெரியவில்லை. கீழே கிடந்து, நானாக எடுத்துப் பையில் போட்டுக் கொள்ளவுமில்லை. யாரிடமிருந்தும் திருடவுமில்லை. எனக்கு எந்த வகையிலும் உரிமையாக முடியாத பணம் இது. இதைப் பயன்படுத்திக் கொள்ள நான் விரும்பவில்லை. இது யாருடையதாக இருக்கும் என்று கண்டுபிடிக்க, நான் யாரையும் போய் விசாரிக்கப் போவதில்லை. ஏனென்றால், யாரேனும் தன்னுடையதுஎன்றுபொய்சொல்லக் கூடும். ஆகவே, இந்தப் பணத்தை உன் உண்டியலில் போட்டு விடுகிறேன். மாதம் ஒருமுறை இந்த உண்டியலைத் திறந்து கிடைக்கக் கூடிய பணத்தைவைத்து அன்னதானம்செய்வார்களே, அந்தப் பணிக்கு இந்தப் பணம் ஓரளவு உதவக் கூடும்" என்று வேண்டிக் கொண்ட அவன், அந்த ஐந்து ரூபாய்த் தாளை உண்டியலில் செலுத்திவிட்டு, கடவுளை வணங்கிச் சென்றான்.

ஆறுமுகத்திற்கும்கூட ஒரே பிரமிப்பு! சம்பத் ஆச்சர்யத்தால் உறைந்தே போய்விட்டான். "இப்படிக் கூட, கொஞ்சமும் சுயநலமில்லாத மனிதப் பிறவி இருக்க முடியுமா?" என்று அவ்விருவருமே அதிசயித்தனர்.

இதுமாதிரியான தன்னலம் நோக்காத வாழ்வில் எல்லா மகிழ்ச்சியும் நிறையும் என்பதைப் புரிந்து கொண்டார்கள்.


சிறுவன் : ஒரு முழம் இட்டலி தாங்க.

ஓட்டல் முதலாளி : என்ன தம்பி சொல்றே? இட்லி ஒரு முழமா?

சிறுவன் : நீங்கதானே எங்க கடை இட்டலி 'பூ' மாதிரி இருக்கும்னு சொன்னீங்க?

— எஸ். விஜயா சீனிவாசன்.





"டேய் கிட்டு என்னடா செய்யறே? தூங்கிட்டயா?"

"தூங்கறேன் அப்பா."

"ஓஹோ! நீ, முழிச்சிண்டு இருக்கியோன்னுதான் கூப்பிட்டேன்."

— எஸ். விஜயா சீனிவாசன்.



கவிதை பிறந்த கதை

சின்னச் சின்ன மூக்குத்தி

மனசை ப.கீரன்

"ஒருநாள், நான் வளர்ந்த ஊரான மன்சுராபாத் என்னும் சிற்றூரில் இருந்தபோது, காக்கைக் கூட்டங்களின் இயல்பைக் கண்டேன். கூரை மேல் வரிசை; நிழலில் உள்ள தானியம் எடுப்பது; பொருளை மறைத்து வைத்துப் பிறகு தேடுவது; குஞ்சுக்கு ஊட்டுவது — இப்படிக் காக்கைகளின் விளையாட்டு என் மனத்தில் கற்பனை ஊற்றெடுக்க ஆரம்பித்தது. உள்ளம் அசை போட்டது. உடனே அது கவிதையாகவும் மலர்ந்தது" என்று கூறும் கவிஞர் மனசை ப. கீரன் அவர்கள் எழுதிய அந்தப் பாட்டைப் படித்து மகிழ்வோமா?

காக்கை பார்ப்போம் காக்கை — புதுமை
ஆக்கும் நமது போக்கை!

வரிசை யாகக் குந்தும் — கூரைமேல்
வகுப்பு படிக்க முந்தும்!

விடியும் முன்னே விழிக்கும் — சுத்தி
வேலை செய்ய விளிக்கும்!

காலை மாலை குளிக்கும் — நாலு
மூலை பறந்து களிக்கும்!

கட்டும் நல்ல கூடும் — தங்கி
முட்டை அங்கே போடும்!

பொருளை எங்கோ புதைக்கும் — பின்னர்
புசிக்கத் தேடிப் பதைக்கும்!

தின்னும் பொருளை மெல்லும் — குஞ்சின்
திறந்த அலகில் தள்ளும்!

பொருள்கள் காய்ந்தால் வெளியில் — அமர்ந்து
பொறுக்கும் கூரை நிழலில்!

காக்கை பார்ப்போம் காக்கை — புதுமை
ஆக்கும் நமது போக்கை!



கவிஞர் வேலூரில் ஆசிரியராகப் பணியாற்றிக் கொண்டிருந்த நேரம். நண்பர் ஒருவர் மூக்குத்தி ஒன்று வாங்க கவிஞரை அழைத்துச் சென்றார். அப்போது இவர் நெஞ்சில் மூக்குத்தி பற்றிய கவிதை எழுத எண்ணம் எழுந்தது. அந்தக் கவிதையில் சில முக்கிய தகவல்களைக் கூற வேண்டும் என்றும் நினைத்தார்.

ஊட்டியில் செயற்கை வைரம் தயாரிக்கிறார்கள்; திருச்சியில் நகைக்கான கற்களைப் பட்டை தீட்டுகிறார்கள்; கோலாரில் தங்கம் கிடைக்கிறது. இதையெல்லாம் கவிதையில் சொல்ல

வேண்டுமே என்று நினைத்தார். அவர் நினைத்தது கவிதையாக உரு வெடுத்தது.



சின்னச் சின்ன மூக்குத்தி,
சிவந்த கல்லின் மூக்குத்தி,
பொன்னால் ஆன மூக்குத்தி,
புதிதாய்ச் செய்த மூக்குத்தி!

செயற்கை வைரம் ஊட்டியிலே
தீட்டும் கற்கள் திருச்சியிலே,
இயற்கைத் தங்கம் கோலாரில்,
இணைத்துச் செய்தார் வேலூரில்!

குமரி அம்மன் மூக்கினிலே
கொழுந்து விடுமே மூக்குத்தி!
அமெரிக் கப்பெண் அணியவே
ஆசை காட்டும் மூக்குத்தி!

''கல்விக்கூடங்களில் கட்டுரை எழுதப் பயிற்சி அளிப்பார்கள். அப்போது நதி, தன் கதையைச் சொல்லுதல்; செய்தித்தாள், தன் வரலாற்றைக் கூறுதல் போன்ற பல கட்டுரைகள் எழுதும் அனுபவம் எனக்கு மட்டுமல்ல, எல்லோருக்கும் ஏற்பட்டிருக்கும். அப்படி, ஊசி தன் கதையைக் கவிதையில்சொன்னால்எப்படி இருக்கும்?'' என்று கேட்கும் கவிஞர், ஊசியையே பேச வைக்கிறார்:

ஊசி எனது பெயராகும்.
உருவம் மிகவும் சிறிதாகும்.
நுனிதான் மிகவும் கூராகும்.
நூலைக் கொள்ளும் கண்ணாகும்!


துணியின் கிழிசல் தைத்திடுவேன்.
மனிதன் மானம் காத்திடுவேன்.
எவர்க்கும் உடனே உதவுங்கள்;
எளியோர் மானம் கருதுங்கள்!

எங்கள் குடும்பம் பெரிதாகும்.
இளையோன் ஒருவன் குண்டூசி.
அகன்ற மூக்கன் குத்தூசி.
அண்ணன் மூட்டை தைப்போனே!

தான்கள் கவடி ஆக்கிடுவேன்.
தைத்த முள்ளை நீக்கிடுவேன்.
புதிய சட்டை தைத்திடுவேன்.
பொத்தான் விழுந்தால் தைத்திடுவேன்!

பேட்டி: பி. வி. கிரி.





அந்த சுதா குட்டி இருக்காளே அவ மேலே தான் இந்த அப்பாவுக்கும் அம்மாவுக்கும், ஆசை. நான் ஒரு பையன் — பெரிய பையன் — ஆறாம் வகுப்பு 'ஏ' செக்ஷன் படிக்கிற பையன், பர்ஸ்ட் ரேங்க் வாங்கிற பையன் இருக்கானேன்னு அவங்களுக்கு ஏதாவது அக்கறையிருக்கா? ஊஹூம்... ஒண்ணும் கிடையாது.

அந்த சுதா பொண்ணுக்கு இன்னிக்குப் பிறந்த நாளு. வடை, பாயசம், பால்கோவா, லட்டு, சாக்லேட்டு என்று தினுசு தினுசா திங்கிறதற்குக் கிடைக்குமே! அதனாலே அவளுக்கு வருஷா வருஷமில்ல, வாரா வாரம் பிறந்த நாளு. தமிழ்த் தேதிப்படி ஒரு பிறந்த நாளு. இங்கிலீஷ் தேதிப்படி ஒரு பிறந்த நாளு. அப்புறம் தெலுங்கு மலையாளம், ஹிந்தின்னு இன்னும் எத்தனை பிறந்த நாளோ?

அவளுக்கு மட்டும் மூணு செட் புது டிரஸ்ஸுங்க. என்னோட பிறந்த நாளுக்கு எனக்கு ரெண்டு செட்தான் தைச்சாங்க. போனா போகட்டும். இதெல்லாம் எனக்கொன்னும் பிரமாதமில்லே. ஆனா, இந்த அப்பாவும் அம்மாவும் சேர்ந்துக்கிட்டு அந்த சுதா கழுதையைப் போட்டோ பிடிக்கப் போறாங்களாமே... அதுதான் நினைக்கும் போதே ஆத்திரம் ஆத்திரமா வருது.

அப்பா யாரோ பிரண்டுகிட்டேருந்து காமிரா வாங்கி வந்திருந்தார். ரொம்ப ரொம்ப உசத்தியான கலர் காமிராவாம் அது. நான் அப்பா பக்கத்திலேயே நின்னுக்கிட்டிருந்தேன். அப்பா காமிராவை ஏதோ சரி பார்த்துக்கிட்டிருந்தார்.

நான் மெதுவா, ''அப்பா, நானும் போய் டிரஸ் மாத்திக்கிறேனே. சுதா மட்டும் டிரெஸ் செஞ்சுக்கிறாளே. என்னை இதே டிரஸ்ஸிலா போட்டோ பிடிக்கப் போறீங்க?'' என்றேன்.

நான் ஏதோ ஜோக் சொன்ன மாதிரி; அப்பா, 'ஹா ஹா ஹா ஹி ஹி ஹி' என்று சிரிச்சார். ''உன்னை யார்டா இப்போ படம் பிடிக்கப் போறாங்க? இருப்பது நாலு பிலிம் தான். எல்லாமே சுதாவுக்குத்தான்.

இப்பத்தான் முதல் முதலா அவளைப் போட்டோ பிடிக்கப் போறோம், தெரியுமா உனக்கு? போ, போ, சுதா ரெடியாயிட்டாளான்னு பாரு, போ." அப்பா என்னை அந்த இடத்தை விட்டு விரட்டியடித்தார். நான் நகருவேனா என்ன?

"அப்பா, நாலு படம் இருக்கே, என்னை ரெண்டு, சுதாவை ரெண்டு பிடியுங்களேன் அப்பா" என்றேன் தைரியமா. பின்னே, நியாயமா பேசும் போது ஏன் பயப்படணும்?

அப்பா சட்டென்று திரும்பி என்னை முறைத்தார். "போடா ராஸ்கல், பெரிய கணக்கு! ரெண்டும் ரெண்டும் நாலுன்னு எனக்குத் தெரியாது பாரு. இந்தப் பிரகஸ்பதி சொல்லித் தரானாம்." அப்பா போட்ட இரைச்சலில் அம்மாவும் பாட்டியும் கூட அங்கே வந்துட்டாங்க.

நான் உடனே அம்மா பக்கத்திலே போய் ஒட்டிக்கிட்டேன். "அம்மா, அம்மா, என்னையும் போட்டோ பிடிக்கச் சொல்லும்மா. ஒரே ஒரு போட்டோவாவது பிடிக்கச் சொல்லும்மா ப்ளீஸ் ப்ளீஸ்'னு" கெஞ்சினேன்.

"ஏண்டா தொந்தரவு செய்யறே? சுதாவை மட்டும்தான் எடுக்கப் போறோம்'னு அப்பா சொன்னார் இல்லியா? உன்னை இன்னொரு தடவை பிடிப்பார். எல்லாம் அவருக்குத் தெரியும். நீ போய் விளையாடு போ." என்றாள் அம்மா.

கடைசியா இந்தப் பாட்டியையும் கேட்டுப் பார்த்துடறேன். 'அம்மா பேச்சைக் கேட்டு நட'ன்னு எனக்கு அப்பா சொல்றார் இல்லியா, இவர் அவரோட அம்மா பேச்சைக் கேட்கிறாரா பார்ப்போம்.

"பாட்டி, பாட்டி, நீயாவது சொல்லேன். என்னையும் போட்டோ எடுக்கச் சொல்லு பாட்டி. ஒரே ஒரு போட்டோவாவது எடுக்கச் சொல்லு பாட்டி" எனக்கு அழுகை தொண்டையை அடைத்தது. பாவம் பாட்டி அவ ரொம்ப நல்லவர். "அழாதேடா ராஜா" என்று என்னைக் கட்டிப் பிடிச்சுக்கிட்டா.

"இந்தப் போட்டோ சனியனெல்லாம் வேண்டாம்'டா கண்ணா. வீணா கண் திருஷ்டிதான் படும். அப்புறம் உடம்புக்கு ஏதாவது வரும்" என்றாள் பாட்டி. எனக்கு ஒண்ணுமே புரியலே. புடிக்கலே. இன்னிக்கு என்னைப் போட்டோ பிடிக்கப் போறதில்லே. அது மட்டும் நிச்சயம். அவ்வளவுதான்.

நான் விறு விறுன்னு வெளியே ஓடிட்டேன். எதிர் வீட்டுக் காம்பவுண்டுக்குள்ளே நுழைஞ்சி என் டியரஸ்ட் பிரண்டு ரவி எப்பவும் உட்கார்ந்திருப்பானே அதே மரக்கிளை மேலே ஏறி நல்லா சாஞ்சு படுத்துக்கிட்டேன். ரவிதான் ஊர்லே இல்லியே!


நான் எங்க வீட்டையேதான் முறைச்சிப் பார்த்துக்கிட்டிருந்தேன். இந்த சுதா இருக்காளே, சுதா, குதா, கிதா... அவளைப் பஞ்சாபி பொண்ணு மாதிரி சிங்காரிச்சி மொட்டை மாடியிலே நிக்க வெச்சி "சிரி, சிரி, இங்கே பாரு. என்னைப் பாரு"ன்னு ஆயிரத்தெட்டுத் தடவை சொல்லி, அப்பா ஒரு ஸ்நாப் எடுத்தாரே, அதையும் நான் கவனிச்சிக்கிட்டுத்தான் இருந்தேன். அப்பாதான் என்னைக் கவனிச்சிருக்க மாட்டார்.

ஒரு போட்டோதானே எடுத்தாங்க? ரெண்டாவது மூணாவது... நாலாவது....?

கொஞ்ச நேரம்தான் ஆயிருக்கும். ரெண்டாவது போட்டோவுக்கு சுதா வந்துட்டா, இப்போ அவளுக்கு வேறே டிரஸ்! பட்டுப் பாவாடை, சட்டை, டாலர் செயின், தங்கக் குஞ்சம் வெச்சுப் பின்னிய நீளமான ஜடை! இந்தக் குள்ளக் கத்தரிக்காய் சுதாவுக்கு எப்பவும் எலிவால் பின்னல்தான். இப்ப அம்மாவோட சவுரியை வெச்சி மாஜிக் செஞ்சிருந்தாங்க. புட்பால் மாதிரி இத்தனை பெரிய குண்டு மூஞ்சியைப் போட்டோ எடுக்கறாங்களாம் போட்டோ. நான் உதட்டைக் கோணி 'அழகு' காட்டினேன்... அடடா அப்பா என்னைப் பார்த்துட்டாரே. சரி, சரி எனக்கென்ன, இவரு பெரிய இவரோ?

'மூணாவது படம் எப்படி எடுக்கப் போறாங்க? அதையும் பார்க்க

— ஓவியராகலாம்



லாம்'னு நான் மரக்கிளை மேலேயே உட்கார்ந்துக்கிட்டிருந்தேன். இந்த முறை டிரஸ் சேஞ்ச் செய்யகொஞ்சம் அதிக நேரம்தான் ஆயிட்டது. ஆனா சுதா இப்போ நிஜமாவே ஜம்முனு இருந்தா. மேக்கப் பிரமாதம். அடுக்கடுக்கா ஃபிரில் வெச்ச ஃபிராக் போட்டுக்கிட்டு, தலைமுடியை பாப் செஞ்சுது போல் ரிப்பனைப் பட்டையா வெச்சி அப்படியே ரப்பர் பொம்மை போல இருந்தா. இந்த முறை வேப்பமரத்தடியிலே நிக்க வெச்சி... அநியாயம்! அநியாயம்! கூட அந்த வாயாடி வனஜாவும் நிக்கிறாளே!

நான் கெஞ்சோ கெஞ்சு கெஞ்சோ கெஞ்சுன்னு கெஞ்சினேன். என்னை ஒரே ஒரு போட்டோ கூடப் புடிக்க மாட்டேன்னு விரட்டியடிச்சிட்டு இப்ப அந்த வனஜாவை மட்டும் எப்படிப் பிடிக்கலாம்? சுதாவோடு சேர்ந்துதான் என்றாலும் அது மட்டும் போட்டோ இல்லியா? சே, சே இவங்களெல்லாம் என்ன அப்பாவோ, என்ன அம்மாவோ! மட்டம், மகா மட்டம்!

அதற்குப் பிறகு எனக்கு மனசு எதிலுமே ஓடல்லே. நாலாவது போட்டோ புடிச்சாங்களோ இல்லியோ யார் கண்டது? நான் அந்த மரக்கிளை மீதே கண்ணை மூடிக்கிட்டு ரொம்ப நேரம் படுத்திருந்தேன். நல்லா இருட்டிய பிறகே வீட்டுக்குள்ளே நுழைஞ்சேன். யாரிடமும் பேசவேயில்லே ஏன் பேசணும்? இவங்க என்ன பெரிய மனுஷர்களா? பெரிய மனசே இல்லியே!

"ஏண்டா ராஜா, வீட்டுக் கணக்குச் செஞ்சுட்டயா? நான் சொல்லித் தரவா?" என்று அப்பா கூட என்னை நைஸ் பண்ணிப் பார்த்தார். 'எல்லாம் எனக்குத் தெரியும்'னு சொல்லிட்டேன்.

"ஏண்டா உம்முனு இருக்கே? இந்தா இன்னிக்குப் பால்லே நிறைய சக்கரை போட்டிருக்கேன், குடி"ன்னு அம்மா கூட 'காக்கா' புடிச்சா. நான் பேசாம மடக் மடக்குனு பாலைக் குடிச்சுட்டுப் பாட்டிக்கிட்டே போய்ப் படுத்துக்கிட்டேன்.



எப்பவும் நான் ரூமுக்குள்ளே பாட்டியோடதான் படுத்துக்குவேன். கூடத்தில் ஃபேனுக்கு நேரா கீழே அம்மாவும் அப்பாவும் சுதாவும் படுத்துக்குவாங்க. எனக்குக் காற்றே ஆகாது.'குளிரும்'னு ரூம்குள்ளேதான் படுத்துக்குவேன்.

எவ்வளவு நேரம் தூங்கினேனோ, எனக்கே தெரியாது. திடீர்னு விழிச்சுக்கிட்டேன் நைட் லாம்ப் எரிஞ்சிக்கிட்டுத்தான் இருந்தது. ஆனாலும் கொஞ்சம் இருட்டாகத்தான் இருந்தது. எனக்கோ ஜில்லுனு தண்ணி குடிச்சாத்தான் திரும்பவும் தூங்க முடியும்னு தோணிச்சு. நான் மெதுவா எழுந்து தட்டுத் தடுமாறி பாட்டியின் கையைக் காலை மிதிக்காமே ஜாக்கிரதையா கதவுக்கிட்டே வந்துட்டேன்.

நல்ல காலம் கதவைச் சட்டுனு திறக்காமே இருந்தேனோ, பிழைச்சேன். ஹால்லே அம்மாவும் அப்பாவும் ஏதோ பேசிக்கிட்டிருந்தது காதிலே விழுந்தது. ராஜா ராஜான்னு என்னைப் பத்தித்தான் இந்த நடு ராத்திரியிலும் பேசணுமா? என்ன பேசறாங்க இவங்க?

''பாவம், ராஜாப்பயல்! போட்டோ போட்டோன்னு குழந்தை ரொம்பவும் ஏங்கிட்டான். அவனுடைய நாலாவது வயசிலே இப்படித்தான் நான் அவனை நிறைய போட்டோ புடிச்சேன், நினைவிருக்கா? பேப்பர் படிக்கிற மாதிரி, காப்பி குடிக்கிற மாதிரி, பந்தடிக்கிற மாதிரி, எத்தனை போஸுங்க! ராஜா என்ன சமத்தா, ஜம்முனு காமிரா முன்னாடி நின்னான் தெரியுமா? இந்த சுதா ஒண்ணுத்துக்கும் பிரயோஜனமில்லே. மூணு ஸ்நாப் எடுக்கறதுக்குள்ளே பாதி உயிர் போயிடுச்சு.''

எனக்கு ஆச்சரியமாயிருந்தது. அப்பாவா இப்படிப் பேசறார்? என்னைக்கூட நிறைய போட்டோ வெல்லாம் பிடிச்சிருக்காங்களாமே!

''ஏன், முருகன் வேஷம், கிருஷ்ணன் வேஷம் கூடப் போட்டு ராஜாவைப் போட்டோ எடுத்திருக்கோமே. கவனமில்லையா உங்களுக்கு? போட்டோ காப்பியெல்லாம்

போட்டு வந்தப்ப, ராஜா ஜுரமா படுத்துக் கிடந்தான். உங்க அம்மா எல்லாப் படத்தையும் தானே வாங்கி எங்கோ மறைச்சி அல்லவா வெச்சுட் டாங்க? ராசியில்லே. திருஷ்டிபட்டு டுச்சு. போட்டோ எடுத்ததினால தான் ஆசைப் பேரனுக்கு நோயே வந்ததுன்னு சண்டையே போட்டாங் களே, மறந்தா போயிடும்?''

அம்மாவின் பேச்சைக் கேட்க கேட்க எனக்கு எப்படியோ இருந்தது. அப்படின்னா என்னோட அந்தப் பழைய போட்டோவெல்லாம் பாட்டி யிடம்தான் இருக்கும்.

''நாளைக்கி அந்தப் போட்டோ வையெல்லாம் அம்மாவிடமிருந்து வாங்கி ராஜாவுக்குக் காட்டணும். தன் னைப் போட்டோவே பிடிக்கலைன்னு குழந்தை எப்படிக் கஷ்டப்பட்டான் பாத்தீங்களா? என்ன கோவம், என்ன ஆத்திரம்! முகமெல்லாம் ஜிவு ஜிவுன்னு சிவந்து, ஊம்...ம் நீங்க அவனையும் ஒரு ஸ்நாப் எடுத்திருக்க லாம்.'' அம்மா நிஜமான வருத்தத் தோடுதான் பேசினாங்க.

''சரிதான். நான் ராஜாவைப் போட்டோவே எடுக்கலைன்னு தீர்மானிச்சிட்டியா? ராஜா கோவிச் சுக்கிட்டு அந்த மரத்து மேலே சாஞ்சு படுத்திருந்தானே, அதை அப்படியே தத்ரூபமா பிடிச்சிருக்கேன் தெரிஞ் சுக்கோ. உன் சுதா பொண்ணு பட மெல்லாம் அதுகிட்டே கூட நிக்க முடியாது. அற்புதமா இருக்கப் போவுது! பாரேன். உண்மையைச் சொல்லப் போனா, ஒரு போட்டோ போட்டியிலே கலந்துக்கணும்னுதான் அந்தக் காமிராவையே வாங்கி வந் தேன். தலைப்பு என்ன தெரியுமா, 'கோபம்' நம்ம ராஜாப் பயலுக்குக் கோபம் வந்தா, எப்படியிருக்கும்னு உனக்குத் தெரியாதா? உர் உர்ருனு கண்ணை உருட்டிக்கினு, சிடு சிடுன்னு மூஞ்சியைத் தூக்கிக்கினு முறைப்பானே, அந்த முக பாவம் எத்தனை பர்ஸ்ட் கிளாஸா இருக்கும்! அதனாலேதான், சுதாவைத்தான் போட்டோ புடிக்கிறோம் உனக்குக் கிடையவே கிடையாதுன்னு சொல்லி அவனைக் கிளப்பி விட்டுட்டேன்.''

அப்பா கதை கதையாச் சொன்ன தையெல்லாம் கேட்கக் கேட்க எனக்கு மட்டுமா, அம்மாவுக்கும் ஆச்சரிய மாத்தான் இருந்திருக்கும்.

''அப்படியா, உங்க ஐடியா எனக்கு முன்பே தெரிஞ்சிருந்தா, நானும் கொஞ்சம் அவனைச் சீண்டி விட்டி ருப்பேன். நிச்சயமா ராஜாவோட படத்துக்கு பர்ஸ்ட் பிரைஸ் கிடைக் கும்'' என்றாள் அம்மா.

நான் அப்படியே சிலை போல நின்னுட்டேன். இந்த அம்மாவையும் அப்பாவையும் கெட்டவங்கன்னு நினைச்சேனே. சுதா மேலே கூடப் பிறந்த தங்கை மேலே பொறாமைப்பட் டேனே! ஒரு குழந்தை மேலே கொஞ் சம் ஆசை, இன்னொரு குழந்தை மேலே நிறைய ஆசைன்னு எந்த அம்மாவும் அப்பாவும் ஒரவஞ்சனை யெல்லாம் செய்ய மாட்டாங்கன்னு இப்ப எனக்கு நல்லா புரியுது.

நம்மைப் பெற்று வளர்க்கிற அம்மா அப்பா எது செஞ்சாலும் நம் முடைய நல்லதுக்குத்தான் செய்வாங் கன்னு நம்பணும். நம்பலையின்னா நாம நல்ல பிள்ளைங்களேயில்லே!


நான் தண்ணீர் குடிக்காமலேயே திரும்பிப் போய்ப் படுத்துக்கிட்டேன். மனசுதான் ஜில்லுனு குளிர்ந்து போச்சே!


தேடிய தெரு

''ஏங்க, ராமசாமித் தெரு எங்கே இருக்குது?''

''ராமசாமித் தெருதானே! அந்தத் தெருவைத் தேடித் தேடித்தான் நான் அலுத்துப் போய் உட்கார்ந்திருக்கேன்''

— ஆர். ராஜா, (1006), சென்னை — 17.





"பள்ளிக்கூடம் வேண்டாமே!"

— பிருகஸ்பதி

ராஜுவுக்கு அன்று காலையிலிருந்தே 'மூட்' சரியாக இல்லை. பல் தேய்ப்பதிலிருந்து ஆரம்பித்து ரகளை செய்து கொண்டிருந்தான். பச்சையாய், கற்பூரம் போல் வாசனை அடிக்குமே, அந்தப் பல்பொடிதான் வேண்டும் என்று பிடிவாதம்! தயிர் ஏன் 'இஸ்திரி' யாகவில்லை என்ற கேள்வியுடன் அழுகை. கடைசியாக 'ஆனை மேலே குதிரை மேலே டப்பா மேலே 'டு' விட்டாலும் 'ஸ்கூல்' போக மாட்டேன்' என்று உறுதியாகச் சொல்லிவிட்டான்.

'ஸ்கூல் பஸ்' வர இன்னும் ஒரு மணி நேரம் இருந்தாலும், இவனைத் தயார் பண்ணி விட்டால் நிம்மதியாகக் காலை வேலைகளைக் கவனிக்கலாம் என்றும் ஆன மட்டும் முயன்றும் சலித்து விட்டாள் அம்மா. கடைசியாக "இவனைக் கொஞ்சம் பாருங்களேன்!" என்று குரல் கொடுத்தாள்.

அப்பா காதில் போட்டுக் கொள்ளவில்லை. "என்ன சொல்கிறான்? ஸ்கூலுக்குப் போக மாட்டானாமா? வேண்டாமே, விட்டுவிடு" என்றார்.

''தினமும் கூடப் போக மாட்டேன்'' என்றான் ராஜு.

''சரி!'' என்றார் அப்பா.

''எப்படியோ போங்கள்! பீஸ், யூனிபார்ம், அது, இது என்று ஏகத்துக்குத் தண்டம்!'' என்று வெடுவெடுத்துக் கொண்டே போய்விட்டாள் அம்மா.,

இந்த மகிழ்ச்சியைத் தன் நண்பர்களுக்குத் தெரிவிக்க ஓடினான் ராஜு.

அவன் திரும்பிய போது, அப்பா ஒரு நாற்காலியில் அமர்ந்து ஏதோ ஒரு நோட்டைக் கவனமாகப் பார்த்துக் கொண்டிருந்தார். எதிரே ஒரே சிந்தனையுடன் அம்மா. ராஜுவை யாரும் கவனித்ததாகத் தெரியவில்லை.

''அந்தப் பூட்ஸை என்ன செய்யப் போகிறீர்கள்?'' என்றாள் அம்மா.

''நூறு ரூபாய் போட்டு வாங்கினது! என்ன பண்ணுவது? நம்ம கந்தன் பையன் செருப்புக் கூட இல்லாமல் இருக்கிறான். அவனுக்குக் கொடுத்துட வேண்டியதுதான்!'' என்றார் அப்பா.

''அதுதான் சரி! புத்தகங்களை எதிர் வீட்டுக் கமலிக்குக் கொடுத்து விடலாம். இவன் வகுப்பில்தானே அவளும் படிக்கிறாள்?''

இப்படி அப்பாவும் அம்மாவும் மாறி மாறிப் பேசிக் கொண்டிருந்தார்கள். கடைசியில் அப்பா சொன்னார்: ''படித்துவிட்டுக் கலெக்டர், மானேஜர் என்றுதான் வரவேண்டுமா என்ன? படிக்காவிட்டால் வேலையா இல்லை? நான் நாளைக்கே நம்ம ராஜுவை 'ஜாலி' ரெஸ்டாரெண்டிற்கு அனுப்பப் போகிறேன். சின்னப் பையன்களுக்கெல்லாம் அங்கே மேஜை துடைக்கக் கற்றுக் கொடுக்கிறார்களாம்!''

''நானும் அதுதான் நினைத்தேன்! பள்ளிக்கூடம்வேண்டாமென்கிறபிள்ளையைக் கட்டாயப்படுத்துவது மகா பாவம்!'' என்றாள் அம்மா.

ராஜு ஓசைப்படுத்தாமல் வெளியே வந்தான். 'ஓஹோ, அப்படியா? என் உசத்தி பூட்ஸ் கந்தன் பையனுக்கா? அந்த ராங்கிக்காரி கமலிக்குப் புதுப்புத்தகங்களா?' ஜாலி ரெஸ்டாரெண்டிற்கு 'டேபிள்' துடைக்கவா அனுப்பப் போகிறீர்கள்? இரு, இரு, சொல்றேன்'' என்று கறுவிக் கொண்டான்.

பத்தே நிமிடங்களில் உடை அணிந்து தயாராகி விட்டான்.

''அம்மா, நாழியாச்சே! டப்பா கொடு!'' என்றான் அதிகாரமாக.

''இதோ தருகிறேனே!'' என்றாள் அம்மா, ஒன்றும் தெரியாதவள் மாதிரி.

பள்ளியைப் பற்றிய புதுக் கனவுகளுடன் கிளம்பினான் ராஜு!

அறிவு



* எனக்கு ஒன்று மட்டும் தெரியும். அது எனக்கு ஒன்றும் தெரியாது என்று.

— சாக்ரடீஸ்.

* அறிவைத் தொட்டிலிலிருந்து கல்லறை வரை தேடு.

— நபிகள் நாயகம்.


* சகல அறிவின் குறிக்கோள் ஒழுக்கத்தை வளர்ப்பது.

— மகாத்மா காந்தி.

* நான் எவ்வளவு நாள் வாழ்கிறேனோ அது வரை கற்பேன்.

— இராமகிருஷ்ண பரமஹம்சர்.


தொகுத்தவர்: ஜி. அனுராதா (18110), சென்னை—62.



சிவனைப் பூஜித்துக் கண்ணனைக் கண்ட நரசி!

கதை: ஆனந்தி படம்: வினு






ஆனால் நரசி படிப்பைவிட விளையாட்டிலேயே குறியாக இருந்தான்...
பலராம் மேத்தாவின் உடல் நலம் பாதிக்கப்பட்டது...
நரசி! எனக்கு உன்னைப் பற்றித்தான் கவலை.
ஏண்டா, ஒன்றைக் கூடப் பழுக்க விடாமல் எல்லாக் காயையும் பறிச்சுடறே!
மரணத் தருவாயில் தம்பி யமுனா தாஸை அழைத்தார் பலராம்...
தம்பி! நரசி தாயில்லாப் பிள்ளை...
நான் கவனித்துக் கொள்கிறேன் அண்ணா!
தந்தையின் மறைவும் நரசியைத் திருத்தவில்லை...
யார் முதலில் அக்கரையை அடைகிறார்கள் பார்க்கலாம்...
நரசியைப் பற்றி ஊர்ப் பெண்கள் யமுனா தாஸின் மருமகளிடம் பழி சுமத்தினார்கள்....
என் பிள்ளையை நரசி இன்று அடித்தான்...
படிக்கிறவனையும் கெடுக்கிறான்....
சற்று நேரத்தில் நரசி வந்து....
பசிக்கிறது, அண்ணி...
ஏண்டா, தண்டச் சோறு...



அண்ணி கோபமாகப் பேசினாள்...
நீயும் உருப்பட மாட்டே; ஊர்ப் பிள்ளைகளையும் கெடுப்பே! உனக்குச் சோறு ஒரு கேடா....
நரசிக்கு ரோஷம் பொத்துக் கொண்டு வந்தது...
அண்ணி கையால் இனி சாப்பிட மாட்டேன்; செத்தாலும் சரி...
நரசி கோபத்துடன் வீட்டை விட்டு வெளியேறி...
இருட்டி வருகிறதே... காட்டில் கொடிய மிருகங்கள் இருக்குமே...
அதோ ஒரு பாழடைந்த கோயில், இரவு அங்கு தங்கலாம்...
சிவன் கோயில்...! ஹர ஹர மகாதேவ்! ஈசனே! மார்க்கண்டேயனைக் காத்த நீதான் என்னையும் காக்க வேண்டும்....


களைத்துப் போய்க் கோயிலில் உறங்கினான் நரசி...
அம்மா... நீ இருந்தால் எனக்கு இந்தக் கதி நேர்ந்திருக்குமா?
கனவில் தாயார் தோன்றி...
நரசி! பயப்படாதே! துருவன், பிரஹ்லாதன் போல் பகவானை நம்பு... தவம் செய்!
காலை திடுக்கிட்டு எழுந்தான் நரசி....
அம்மா சொன்னபடி தவமிருப்பேன்!
ஓடை நீரில் குளித்து விட்டு... மலர்கள் பறித்து...
ஹரஹர...
சிவலிங்கத்தைப் பூஜித்தான்....
சிவசிவ...





நரசி உள்ளத்தில் 'ஹரஹர மஹாதேவா' என்ற மந்திரம் சுழன்று சுழன்று வந்தது!
ஊண் உறக்கமின்றி தவம் செய்த நரசிமுன், ஈசன் தோன்றி...
குழந்தாய்! உனக்கு என்ன வேண்டும்?
உங்களுக்குப் பிரிய மானதை அருளுங்கள்!
அழகாகக் கேட்டாய்! வா, எனக்குப் பிரிய மானதைக் காட்டுகிறேன்!
அடுத்த கணம் சிவனும் நரசியும் யமுனை நதிக்கரையில் இருந்தனர்.
அதோ பார்!
நரசி கண்ட காட்சி...


இன்னொரு காட்சியையும் நரசி பார்த்தான்...
கண்ணன் இவர்களை நெருங்கி...
இந்தச் சிறுவன் யார்?
என் பக்தன்; உங்களை வழிபடப் போகிறவன்...
நரசி கண்ணனை வணங்கி...
சிவ பக்தர்களுக்கு என் அருள் பரிபூரணமாய் உண்டு.
மகத்தான பேறு பெற்றேன்.
ஹரி ஹரன் இருவரையும் தரிசித்த பாக்கிய சாலி நரசி....
பக்திப் பாடல்கள் என் உள்ளத்தில் தாமாகவே பெருக்கெடுக்கின்றனவே!
கோயிலில் அமர்ந்து நரசி பாடினான்.
ராதே ச்யாம்: ராதே ச்யாம்!





★ காந்திஜிக்கு மிகவும் பிரியமான பாடல்


இதேகாலத்தில் நரசியின் புகழ் பரவ...
நரசியைத் தரிசித்து விட்டுத் திரும்புகிறோம்!
பூஜையைப் பார்த்தோம்; பஜனையில் கலந்து கொண்டோம்... அடடா! அற்புதம்!
நரசி பாடக் கேட்டு பக்தர்கள் பரவசமானார்கள்...
ராதேச்யாம்! ராதேச்யாம்!
ஆண்டுகள் பல சென்றன... நரசியின் மனைவி...
நம் மகள் குமரியாய் வளர்ந்து விட்டாள்... கல்யாணம் பண்ண வேண்டும்...
பாண்டுரங்கன் பார்த்துக் கொள்வான்...
எல்லாப் பொறுப்பையும் ஆண்டவன் தலையிலேயே சுமத்தினால் எப்படி...?
அதே சமயம்... வாசலில்...
நரசிமேதா வீடு இதுதானா?


அதிதிக்கு வாசல் கதவைத் திறந்து விட்ட நரசி...
நான்தான் நரசி; வர வேண்டும்...
நான் சியாமளபுரத்திலிருந்து வருகிறேன்... கிருஷ்ணபட்டர் என்று சொல்வார்கள்.
மகிழ்ச்சி; வந்த காரணம்?...
என் நண்பர் திரிபுராந்தகர் நல்ல செல்வந்தர். தம் மகளுக்கு நல்ல வரன் பார்க்கச் சொன்னார்...
தங்கள் மகனே தகுந்த வரன். நீங்கள் சம்மதிக்க வேண்டும்...
கடவுள் அருள் இருந்தால் அப்படியே நடக்கும்.
கிருஷ்ணபட்டர் சந்தோஷமாகத் திரும்பினார். திரிபுராந்தகரைச் சந்தித்தார்.
போன காரியம் ஜெயமா?
நரசி மேத்தாவின் மகனுக்குத் தங்கள் பெண்ணைக் கொடுப்பதாக...
என்ன! நரசிமேத்தா வெறும் ஆண்டியாச்சே! நமக்குத் தகுந்த சம்பந்தியா?



அப்படி எண்ணாதீர்கள். பரம பக்தர். அவர் சம்பந்தியாகக் கிடைப்பது உங்கள் பாக்கியம்.
சீர் என்ன கொண்டு வருவார்? அதைச் சொல்லுங்கள்!
பக்திச் செல்வத்தை உடைய நரசியிடம் பொன்னையும் பொருளையும் எதிர்பார்க்கலாமா....? அவரை வரவேற்கத் தயாராகுங்கள்!
மறுநாள் சியாமளபுரத்தை ஒரு பஜனை கோஷ்டி நெருங்கியது...
ரங்கா! ரங்கா!
பாண்டுரங்கா!
கிருஷ்ணபட்டர் அவசரமாக ஓடி வந்து....
திரிபுராந்தகரே! நரசி வந்து விட்டார்! நீங்கள் ஒன்றுமே தயார் செய்யவில்லையே!
இது என்ன தர்மசங்கடம்...
அந்தச் சமயம் இன்னொரு திசையிலிருந்து சியாமளபுரம் நோக்கிப் பல வண்டிகள் வந்தன...


...திரிபுராந்தகர் வீட்டை அடைந்தனர்...
தங்கள் மகளுக்குச் சீர் வந்திருக்கிறது... கல்யாண மண்டபத்தைக் காட்டுங்கள். ... இறக்கி வைக்கிறோம்...
தாங்கள் யார்?
நரசி மேத்தாவின் காரியஸ்தன். துவாரகையிலிருந்து வருகிறேன்-அவர் ஆணைப்படி.
காரியஸ்தர் ஒரு வண்டியிலிருந்த சில மூட்டைகளைப் பிரித்து... வஸ்திரங்களை வழங்கினார்.
ஊராருக்கெல்லாம் நரசி மரியாதை செய்யச் சொன்னார்...
இதற்குள் பஜனை கோஷ்டியும் திரிபுராந்தகன் இருந்த தெருவை அடைந்ததும் கிருஷ்ணபட்டர் எதிர் கொண்டு...
வரவேணும்! உங்களுக்கு முன்பாகவே சீர் வரிசைகள் வந்து விட்டன!


திரிபுராந்தகர் மனம் வருந்தி...
நான்தான் கல்யாண ஏற்பாடுகளைச் சரியாகச் செய்யவில்லை... முகூர்த்தத்தை இரண்டு நாள் தள்ளி வைத்துக் கொள்வோமா?
காரியஸ்தர் இடை புகுந்து...
வேண்டாம். நாளைய தினம் மிக நல்ல நாள். எல்லா ஏற்பாடுகளையும் நான் கவனித்துக் கொள்கிறேன்!
இரவோடு இரவாக ஊரை அலங்கரிக்கப்பட்டது. மணப்பந்தல் தயாரானது. உணவுச் சாலை உருவானது. வாத்திய கோஷம் எழுந்தது!
கிருஷ்ணபட்டர் புரோகிதராக இருந்து திருமணத்தை நடத்தி வைத்தார்.
நரசி, ஜூனாகாட்டுக்குத் திரும்பினார். சில மாதங்களில் அவர் மகன் குமீவர் பாய்க்கும் கல்யாணம் நடந்து முடிந்தது...


புக்ககம் செல்லக் கும்வர் பாய் பெற்றோரிடம் விடை பெற்றாள்....
பயப்பட வேண்டாம். கண்ணன் துணை இருப்பான்.
நரசி மனமுருகிப் பிரார்த்தித்தார்...
மகன், மகள் இருவருக்கும் சிறப்பாகத் திருமணம் நடத்தி வைத்தாய்! உன்னைப் பூஜிப்பதைத் தவிர வேறு கைம்மாறு நான் என்ன செய்ய முடியும்?
நரசி மேத்தா பஜனை செய்தபோது ஹரிஜனங்கள் கலந்து கொண்டார்கள்...
ஜே ஜே விட்டல்!
ரங்கா! ரங்கா!
இதைக் கண்டு உயர் ஜாதி ஜனங்கள்...
நரசிக்குப் புத்தியே தடுமாறி விட்டது! தாழ்ந்தவர்களைக் கோயிலில் சேர்க்கிறான்....
... நரசியை ஏசினார்கள்...
ஊரைக் கெடுக்கிறீர்! குலத்தை நாசமாக்குகிறீர்!
பக்தர்களில் ஏற்றத் தாழ்வு ஏது?


ஊரார் நரசியை ஏச, அவர் மனைவி மனமுடைந்து இறந்து விட்டாள்...
கௌரி! என்னை விட்டு விட்டுப் போய் விட்டாயே!
ஒரு நாள் ஜூனகாட்டுக்கு இரு வியாபாரிகள் வந்தார்கள்...
நாங்கள் துவாரகை போகிறோம். வழியில் திருட்டுப் பயம். இந்த ஆயிரம் பொன்னை வைத்துக் கொண்டு துவாரகையில் தரும்படி ஹூண்டி எழுதித் தர முடியுமா?
ஊர் மக்களில் இருவர்... ரகசியமாக...
இந்த ஊரில் அப்படிப் பட்ட செல்வமும் செல்வாக்கும் உள்ளவர் யாருமில்லை.
ஆனால் நரசியை மாட்டி வைக்க ஒரு நல்ல சந்தர்ப்பம்!..
அவர்கள் விஷமத் தனமாக...
வியாபாரிகளே! நரசி பணக்காரன். துவாரகையில் வியாபாரம்! அவரைக் கேளுங்கள்....
வியாபாரிகள் நரசியை அணுக...
அதற்கென்ன, எழுதித் தருகிறேன். சியாமள வாசுதேவ மேத்தாவிடம் வாங்கிக் கொள்ளுங்கள்!



நரசி மேத்தா ஆயிரம் பொற் காசுகளையும் ஏழைகளுக்கு உதவச் செலவிட்டார்...
உனக்கு வேட்டி புடவை; இவருக்கு விதை நெல்; அவருக்கு வண்டி மாடு...
துவாரகையை அடைந்த வியாபாரிகள்....
மோசம் போனோம்!
சியாமள வாசுதேவ மேத்தா என்று யாருமே இங்கு இல்லையே!
அப்போது...
ஜுனகாட்டிலிருந்து வருகிறீர்களா?
ஆமாம்; நரசி மேத்தா, சியாமள மேத்தாவுக்கு ஹுண்டி எழுதித் தந்தார்...
இங்கே கொடுங்கள்; நான்தான் சியாமள மேத்தா... இதில் ஆயிரம் பொன் இருக்கிறது... பெற்றுக் கொள்ளுங்கள்!
வியாபாரிகள் சரக்கு வாங்க, பணத்தைச் செலவிட்டனர்...
எடுக்க எடுக்கப் பையில் பணம் குறையவே இல்லையே!
என்ன ஆச்சர்யம்!


நரசிமேத்தா பெரிய மகான்!
அவரால் நமக்குப் பகவான் தரிசனமும் கிடைத்தது! சியாமள மேத்தா கண்ணனே தான்!
நரசியின் மகள் கும்பவர் பாய் செய்தி அனுப்பினாள்...
என் புக்ககத்தில் சீமந்தத்துக்குச் சீர் கேட்கிறார்கள்...
நரசி பிரார்த்தித்தார்...
கண்ணா! சீர்வரிசைக்கு நான் எங்கே போவேன்? நீயே கதி
சியாமள மேத்தாவான கண்ணன், நரசியின் சம்பந்தி வீட்டை அடைந்து...
சீமந்த விருந்தினர் அனைவருக்கும் சால்வைகள்... சம்பந்திக்குப் பட்டுவேஷ்டி... மாப்பிள்ளைக்குத் தோடா, பெண்ணுக்குச் சங்கிலி... இன்னும் பலருக்குப் பல வகைச் சீர்கள்....
நரசி விவரமறிந்து பக்தி பரவசமானார்...
ஹரே, கிருஷ்ணா! பாண்டுரங்கா!

குற்றால அருவியிலே...



பொதிகை மலைச் சாரலிலே
பூமி நனையுது — அதில்
புதிய சுகம் மேனியெல்லாம்
பரவி அலையுது!"

குற்றால மலையருவி
குதித்துக் கொட்டுது — என்றும்
வற்றாத கற்பனைதான்
நெஞ்சில் முட்டுது!

பேரருவி, தேனருவி,
ஐந்து அருவியாம் — காணப்
பேரழகுக் காட்சியாகப்
பொங்கிப் பெருகுதாம்!

பகலிரவு என்றில்லாமல்
அருவி யாடலாம் — தலைக்கு
சிகைக்காயும் தேவையில்லை
எண்ணெய் மறையுமாம்!

மலையிலுள்ள மூலிகைகள்
நீரில் கலக்குது — அதில்
குளித்து வந்தால் நோய்கள் தீர்ந்து
இன்பம் பிறக்குமாம்!

ஒலிம்பிக்

1. பழைய ஒலிம்பிக்கின் கதை

குழந்தைகளே! கடந்த பிப்ரவரி மாத கோகுலத்தில் லீப் வருடம் பற்றிப் படித்தீர்கள் அல்லவா? அப்போது இரண்டு விஷயங்களில் உங்களுடைய ஆவலுக்கு அணை போட்டு வைத்திருக்கச் சொன்னேனே, நினைவில் இருக்கிறதா?

அதில் ஒன்றை இப்போது பூர்த்தி செய்யப் போகிறேன். எதைத் தெரியுமா? 'ஒலிம்பிக்'கின் கதையை!

நான்கு ஆண்டுகளுக்கு ஒரு முறை, லீப் வருடத்தில் நடத்தப்படும் ஒலிம்பிக் பந்தயங்கள், இந்த ஆண்டு செப்டம்பர் மாதம் நடைபெற உள்ளன. எங்கு தெரியுமா? 'சியோல்' நகரில். அது தென் கொரியாவின் தலைநகர்.

ஒலிம்பிக் விளையாட்டுக்கள் மிகவும் பழமையானவை. பல்லாயிரக் கணக்கான ஆண்டுகளாக விளையாடப்பட்டு வருகின்றன. அதன் வரலாறு மிகவும் நீண்டது. ஏராளமான தகவல்களைக் கொண்டது. எனவே இரண்டு மூன்று தடவைகளாக அதை உங்களுக்குக் கூறப் போகிறேன். முதலில், இப்போது, மிகப் பழங்கால ஒலிம்பிக் பற்றித் தெரிந்து கொள்ளுங்கள். அதாவது, பழைய 'ஒலிம்பிக்'கின் கதை!

சரி! ஒலிம்பிக்கிற்கு அப் பெயர் எப்படி ஏற்பட்டது தெரியுமா? சொல்லுகிறேன்.

கிரீஸ் என்று ஒரு நாடு. ஐரோப்பாவில் உள்ளது. அங்கு பண்டைக் காலத்தில் பல நகர அரசுகள் — அதாவது ஒரு சிறு நகரம் இருக்கும். அதைச் சுற்றிய பகுதிகள் அந்த நகரைச் சேர்ந்தவை. அதற்கு ஒரு அரசன் இருப்பான். இதுதான் நகர அரசு எனப்படுவது. இப்படிப் பல நகர அரசுகள் இருந்தன.

அவற்றில் ஒன்று 'ஒலிம்பியா' என்பது. அங்குதான் இந்த விளையாட்டுக்கள் முதன் முதலாகத் தோன்றின. 'ஒலிம்பியா'வில் தோன்றியதால், அவை ஒலிம்பிக் விளையாட்டுக்கள் எனப்பட்டன.

ஆரம்பத்தில் ஒலிம்பிக் ஒரு கோயில் திருவிழாவாகத்தான் இருந்தது. அதில் விளையாட்டுக்களை இணைத்தார்கள். முதலில் 49—50 மாதங்களுக்கு ஒரு தடவை நடத்தப்பட்டதாக, பிரிட்டிஷ் வரலாற்றாசிரியர் ஜார்ஜ் தாம்சன் கூறுகிறார்.

அப்போது கிரீசில் பழைய காலண்டர் முறை அமுல்படுத்தப்பட்டது. அதன்படி ஆண்டுக்கு எட்டு மாதங்கள்தான்! தற்போதைய ஆகஸ்ட் மாதத்தின் மத்திக்குச் சரியான சமயத்தில் ஒலிம்பிக் நடத்தப்பட்டதாம். அது அந்த நாட்டின் அறுவடை சமயம். எனவே, ஒலிம்பிக் என்பது அறுவடைத் திருநாளாக இருந்திருக்கிறது. அதாவது, நம்முடைய பொங்கல் பண்டிகையைப் போல! இல்லையா?

கி.மு. 13—ஆம் நூற்றாண்டு. கிரீஸின் மத்தியப் பகுதியில் 'தீப்ஸ்' என்று ஒரு நகர அரசு இருந்தது. அதன் அரசன் ஹெராக்ளீஸ்! அவன் தெய்வீகத் தன்மை உடையவன். ஒரு சமயம் தேவர் உலகம் சென்றிருந்தான். திரும்பி வரும்போது, அங்கிருந்த மரத்தின் கிளை ஒன்றைக் கொண்டு வந்தான். அது ஒலிம்பிக் நடக்கும் சமயம். அவ்விளையாட்டுக்

கள் நடக்கும் இடத்துக்கு 'ஒலிம்பிக் கிராமம்' என்று பெயர். அந்த மரக் கிளையைத் தன் கையாலேயே அங்கு நட்டான். அது கப்பும் கிளையுமாகச் செழித்து வளர்ந்தது. அம்மரம் தெய் வீகமானது. எனவே அதன் இலைக ளால் கிரீடம் செய்து, அதை வெற்றி பெற்ற விளையாட்டு வீரர்களுக்கு அணிவிக்கத் தொடங்கினார்கள். வெகு காலம் வரையில் அப்பழக்கம் இருந்தது.


கி. மு. 6 — ஆம் நூற்றாண்டு. புலவர் கள் தமது இலக்கியப் படைப்புகளில் ஒலிம்பிக் நாயகர்களைப் பற்றி எழுதி னர். அதன் பிறகுதான் ஒலிம்பிக் பற் றிய ஆதாரப்பூர்வமான செய்திகள் கிடைக்கத் தொடங்கின. நாளடை வில் விளையாட்டுடன் நாட்டுப் பற் றும் இணைந்தது. சமூகத்தில் வீரர் களின் மதிப்பு உயர்ந்தது.

ஹெரோடோடஸ் என்று ஒருவர். வரலாற்று நிகழ்ச்சிகளை முதன் முதல் எழுதி வைக்கத் தொடங்கியது அவர்தான். உலகின் முதல் வரலாற் றாசிரியர். அவர் ஒலிம்பிக் பற்றிய செய்திகளை எழுதி வைத்துள்ளார்.

கி.மு. 500க்கும் 440—க்கும் இடைப் பட்ட காலம். பாரசீகப் போர் நடந்த சமயம். அப்போது கிரேக்கர்கள் 75—வது ஒலிம்பிக்கிற்கான ஏற்பாடு களைச் செய்து கொண்டிருந்தனர். ஒரு பக்கம் ஒலிம்பிக்கின் வருகை. மறு பக்கம் எல்லையில் பாரசீகப் படையின் தாக்குதல்.

ஸ்பார்ட்டா என்று ஒரு நகர அரசு. கிரேக்கர்களில் ஒருவன் துரோகியாக மாறி விட்டான். ஸ்பார்ட்டாவை பாரசீகர்களிடம் காட்டிக் கொடுத்து விட்டான். பாரசீகர்களுக்கு வெற்றி. ஸ்பார்ட்டா தோற்றது. எனினும் மனம் தளராத நிலையில், தன்னம் பிக்கையுடன் ஒலிம்பிக் விளையாட் டுக்களை நடத்துவதில் கிரேக்கர்கள் ஈடுபட்டனர். வெற்றி பெற்ற பாரசீ கப் படைத்தளபதி மார்ட்டோனியஸ் என்பவனே ஆச்சர்யப்பட்டுப் போனான்.

ஒலிம்பிக் விளையாட்டுக்கள் முடிந்தன. பிறகு, எல்லா நகர அரசு களும் ஒன்று கூடின. புதிய தெம்புடன்



* இலைக் கிரீடம் அணிந்த வீரன்.

பாரசீகப் படைகளை எதிர்த்து முறி யடித்தனர். அது வரையில் நகர அரசு களிடையே பொறாமையும் பகையும் நிலவி வந்தன. அதன் பிறகு, அவை முடிவுற்று நட்பும் ஒற்றுமையும் நில வத் தொடங்கின. அதற்கு அடிப்படை என்ன? ஒலிம்பிக்தான். இல்லையா?

ஆனால், அந்த நிலை அதிக நாள் நீடிக்கவில்லை. ஒலிம்பிக்கின் புகழ் உயர்ந்தது. அதை விட, அந்த ஒலிம் பிக்கை நடத்தும் 'ஒலிம்பியா'வின் புகழும் பெருமையும் கொடி கட்டிப் பறக்கத் தொடங்கின. அதைக் கண்டு பிற நகர அரசுகளிடம் ஆமை புகுந்து விட்டது. எந்த ஆமை என்று புரிகி றதா? — பொறாமைதான்! குறிப்பாக ஏதன்சு மனம் புழுங்கியது. அந்த ஒலிம்பிக் விளையாட்டுக்களை எப் படியாவது ஒலிம்பியாவிலிருந்து ஏதன்சு நகருக்கு மாற்றிவிடத் திட்ட மிட்டது. ஆனால், அம் முயற்சி வெற்றி பெறவில்லை. எனவே, ஒலிம் பிக்கின் புகழை மங்கச் செய்யும் முயற்சியில் ஈடுபட்டது. விளை யாட்டு வீரர்களுக்கு லஞ்சம் கொடுத் துத் தன் வயப்படுத்திக் கொள்ள முயன்றது.

கி.மு. ஐந்தாம் நூற்றாண்டின் நடுப்



* தோண்டி எடுக்கப்பட்ட ஒலிம்பியா.

பகுதி. ஏதன்சு தன் கபட நாடகத்தைத் தீவிரப்படுத்தியது. வர்க்கப் போராட்டத்தைத் தூண்டியது. அதனால், ஒலிம்பிக் பந்தயங்களை நேர்மையுடன் நடத்த முடியாமல் போயிற்று.

இது ஒரு புறம் இருக்கட்டும். மற்றொரு புறம், ஒலிம்பிக்கின் வசதிகள் பெருகத் தொடங்கின. தனித்தனி ஸ்டேடியங்கள் தோன்றின. வீரர்கள் தங்குமிட வசதிகள் அதிகரித்தன.

காலப் போக்கில் கிரேக்கர்கள் ரோமானியரிடம் தோற்றனர். கிரேக்க வீரர்களின் தீரத்தை ஊக்குவிப்பதில் ரோமானியர்களுக்கு ஆர்வம் இல்லை. எனினும் ஒலிம்பிக்கைத் தமது அரசியல் ஆதாயத்துக்குப் பயன்படுத்திக் கொள்ளலாயினர்.

ஷுலா என்று ஒரு மன்னன் ஒலிம்பிக்கை ரோம் நகரில் நடத்த விரும்பினான். 175—வது ஒலிம்பிக் அது. ரோம் நகரில் நடந்தது. ஆனால், விரைவில் அந்த மன்னன் இறக்கவே, ஒலிம்பிக் மீண்டும் ஒலிம்பியாவுக்குத் திரும்பியது. எனினும் ரோமானியர்கள் ஒலிம்பிக்கிற்கு உதவி செய்வதை நிறுத்தவில்லை. ஏன் தெரியுமா? அப்போதுதானே அவர்களின் கவனம் ரோமானியர்களிடமிருந்து விடுதலை பெற வேண்டும் என்று எண்ணாமல் இருப்பார்கள். இல்லையா?

நாளடைவில் ஆட்சியாளர்கள் ஒலிம்பிக்கை தமது பொழுது போக்கிற்குப் பயன்படுத்தத் தொடங்கினர். எனவே, ஒலிம்பிக்கில் பல முறைகேடுகள் நுழைந்தன.

கி.மு. 86 முதல் 84 ஆண்டுகளுக்கு — அதாவது, 265—ஆவது முதல் 268—ஆவது ஒலிம்பிக் வரையில் பந்தயத்தில் வெற்றி பெற்றவர்களைப் பற்றிய விவரம் எதுவும் தெரியவில்லை. ஒலிம்பிக் போட்டிகள் நடந்தனவா என்பதே ஐயப்பாடுதான்!

பொதுவாக, கிரேக்க நாட்டை ரோமானியர்கள் ஆண்ட காலத்தில், ஒலிம்பிக் வரலாறு திரையிட்டு மூடப் பட்டு இருந்தது. கி.பி. 393—ல் ஒரு ஒலிம்பிக் நடந்தது. அதுதான் ரோமானியர் காலத்தில் நடந்த கடைசி ஒலிம்பிக். ரோமானியர் கிறிஸ்தவ சமயத்தை அரசாங்க சமயமாக ஏற்றனர். அவர்கள் கிரேக்கர்களின் பாரம்பர்யப் பெருமைகளை அழித்து விட்டனர். அவர்களின் தெய்வ நம்பிக்கை ஒழிக்கப்பட்டது. அவர்களது கோயில்கள் இடிக்கப்பட்டன. தெய்வங்களின் இரும்புச் சிலைகள் உடைத்துத் தூளாக்கப்பட்டன. ஒலிம்பியா நகரம் கொள்ளையடிக்கப்பட்டது. இறுதியாக கி.பி. 426—ல் இரண்டாம் தியோடோசியஸ் என்பவன், ஒலிம்பிக் சம்பந்தமான எந்தவித நினைவுச் சின்னங்களும் இருக்கக் கூடாது; அழித்து விடுங்கள் என்று உத்திர விட்டான். ஸ்டேடியம் எல்லாம் தரை மட்டம் ஆக்கப்பட்டன. அங்கிருந்த மரம் செடி கொடிகள் வெட்டப்பட்டன. அத்துடன் இயற்கை அழிவும் சேர்ந்து கொண்டது. பெரும் பூகம்பம் ஒன்றில் அந்த ஒலிம்பியா நகரமே ஐந்தாறு மீட்டர் ஆழத்துக்கு மண்ணில் புதையுண்டது.

பல நூற்றாண்டுகளுக்குப் பின் 1875—ல் ஏர்னஸ்ட் கியூர்டிஸ் என்பவர் தலைமையில் புதை பொருள் ஆராய்ச்சியாளர்கள் அந்த இடத்தைத் தோண்டி எடுத்தனர். இடிந்த நிலையில் பெரும் கட்டிடங்களும், ஸ்டேடியங்களும் இன்னும் பல சின்னங்களும் கிடைத்துள்ளன. அவற்றைக் கொண்டு அங்கு இப்போது 'ஒலிம்பிக் மியூசியம்' அமைக்கப்

பட்டுள்ளது.

ஒலிம்பிக் போட்டிகள் தொடர்ந்து எத்தனை நாள் நடந்தன என்று நிச்சயமாகத் தெரியவில்லை. ஐந்து நாட்கள் வரை நடந்திருக்கலாம் என்று தெரிகிறது.

முதல் நாள் தொடக்க விழா. அதற்கு மிக நீண்ட ஊர்வலம் உண்டு. முன் வரிசையில் பல்வேறு வாத்தியக் குழுவினர் அணிவகுத்துச் செல்வார்கள். அதையடுத்து, சமயப் பண்டிதர்கள் பூசாரிகள் மந்திரம் ஓதிக் கொண்டு செல்வார்கள். அதன் பிறகு, கடவுளுக்குப் பலியிடப் போகும் மிருகங்கள் ஓட்டிச் செல்லப்படும். அவற்றின் பின்னால், பல்வேறு நகரங்களின் பிரதிநிதிகள் இறைவனுக்குப் படைப்பதற்கான பொருள்களைச் சுமந்து செல்வார்கள். அவர்களைத் தொடர்ந்து, போட்டியில் கலந்து கொள்ளும் வீரர்களின் அணி செல்லும். இறுதியில் என்ன தெரியுமா? அலங்கரிக்கப்பட்ட தேர்களும் குதிரைகளும் அணி அணியாகச் செல்லும்.

இந்த ஊர்வலம் பல்வேறு கோயில்கள் வழியாகச் செல்லும். அங்கெல்லாம், மிருகபலி நடைபெறும். அது தவிர, முறைப்படியான பிரார்த்தனைகளும் இசைப்பா மற்றும் வாத்தியங்களும் இசைக்கப்படும்.

ஊர்வலம் ஸ்டேடியத்தை அடைந்ததும் போட்டிகளின் தொடக்கம். முதலில் உறுதிமொழிச் சடங்கு. வீரர்கள், ஒலிம்பிக் விதிகளுக்குக் கட்டுப்பட்டு, அதன் கௌரவத்தைக் கட்டிக் காக்கப் பாடுபடுவோம் என்று உறுதி எடுத்துக் கொள்வார்கள். போட்டி தொடங்குவதற்கு முன்பு, ஒவ்வொரு வீரனின் பெயரும் அறிவிக்கப்படும். விளையாட்டின் பெயர், அதில் கலந்து கொள்பவர்கள், அதன் கண்காணிப்பாளர்கள் ஆகியோரின் பெயர்களை அறிவிப்பார்கள்.

பிறகு அந்த விளையாட்டு வீரர்களின் தலையில் கைவைத்தவாறு, அந்த வீரர் நல்லவரா, குற்றம் ஏதும் புரியாதவரா, நன்னடத்தை உள்ளவரா என்று கூட்டத்தினரைப் பார்த்துக் கேட்பார்கள். மக்கள் முன் வந்து அவர்களைப் பற்றிக் கூறலாம். குற்றம் புரிந்தவர் என்றால் போட்டியில் கலந்து கொள்ள முடியாது.

முதலில் ஓட்டப் பந்தயத்திற்கு ஸ்டேடியத்தை ஒரு தடவை சுற்றி வரச் சொன்னார்கள். பிறகு ஐந்து சுற்று வரை போயிற்று. அதன் பிறகு 12 சுற்றுகள் சுற்றும் போட்டிகள் நடத்தப்பட்டன.

ஒரு வீரன் ஐந்து போட்டிகளில் மட்டுமே கலந்து கொள்ளலாம். இது விதி. இதை 'பென்டாதலின்' என்கிறோம். இதன் ஆரம்பம் எப்போது தெரியுமா? 182 – ஆவது ஒலிம்பிக் தான். 232– ஆவது ஒலிம்பிக்கில் குத்துச் சண்டை சேர்க்கப்பட்டது.

நாளடைவில் புதுப்புது விளையாட்டுக்கள் சேர்க்கப்பட்டன. அதற்கு ஏற்றாற்போல் வீரர்களின்

* தட்டு எறிதல்.





* ஈட்டி எறிதல்.

எண்ணிக்கையும் கூடியது. எனவே, பழையவிளையாட்டுக்கள் ஒவ்வொன்றாகக் கைவிடப்பட்டன.

ஆரம்பத்தில் ஒரே வீரன் எத்தனை விளையாட்டுக்களில் வேண்டுமானாலும் பங்கு பெறலாம் என்றிருந்தது. அதைத் தடுக்க ஒரு நடைமுறை வகுக்கப்பட்டது. என்ன தெரியுமா, குழந்தைகளே? அதுதான் 'பென்டாதலின்!' ஒருவர் ஐந்து விளையாட்டுக்களுக்கு மேல் கலந்து கொள்ளக் கூடாது என்று கூறப்பட்டது. அதுவும் மிகக் கடின நடைமுறைப்படி அவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர். எப்படித் தெரியுமா?
நீளம் தாண்டுதல், ஈட்டி எறிதல், ஓட்டப்பந்தயம், தட்டு எறிதல், குத்துச் சண்டை ஆகிய ஐந்தும்தான் 'பென்டாதலின்' எனப்படுவது.

முதலில் எல்லா வீரர்களும் நீளம் தாண்டுதலில் கலந்து கொள்வார்கள். குறிப்பிட்ட தூரம் தாண்டாதவர்கள் நீக்கப்படுவார்கள். தாண்டியவர்கள்தான் இரண்டாவதான ஈட்டி எறிதலில் பங்கேற்கலாம். அதிலும் குறிப்பிட்ட தூரம் ஈட்டி எறிந்தவர்கள்தான் மூன்றாவதான ஓட்டப்பந்தயத்தில் பங்கேற்கலாம். மற்றவர்கள் நீக்கப்படுவார்கள். ஓட்டப்பந்தயத்தில் முதல் மூன்று இடத்துக்குள் வந்தவர்கள் மட்டும் தான் நான்காவதான தட்டு எறிதலில் பங்கேற்கலாம். மற்றவர் நீக்கப்படுவார்கள். தட்டு எறிதலில் முதல் இரு இடத்தைப் பெற்றவர்கள் மட்டுமே குத்துச் சண்டையில் பங்கு பெறலாம். குத்துச் சண்டையில் வெற்றி பெற்றவருக்கு 'சாம்பியன்' பட்டம். அதாவது ஐந்தில் வெற்றி பெற்றவர். எனவே அவருக்கு 'பென்டாதலின்' 'சாம்ராட்' என்ற சிறப்புப் பட்டம் வழங்கப்பட்டது.

33-ஆவது ஒலிம்பிக்கில் வினோத



* குத்துச் சண்டை வீரர்.

மான. ஒரு போட்டியைத் தொடங்கினார்கள். 'பெங்குரோஷியன்' என்று பெயர். அதில் கலந்து கொள்பவர்கள், எந்த முறையை வேண்டுமானாலும் கடைப்பிடிக்கலாம். அடிக்கலாம். உதைக்கலாம். கைகால்

களை முறிக்கலாம். பெரும் காயங்களை ஏற்படுத்தலாம். எதிரியை மூச்சுத் திணறச் செய்யலாம். இன்னும் எப்படி வேண்டுமானாலும் உபாதைகளைக் கொடுக்கலாம். முடிவில் எதிரியை வீழ்த்தி, அவனே தன் தோல்வியை ஏற்றுக்கொள்ளச்செய்துவிட வேண்டும். அப்படிச் செய்தால் வெற்றி வீரன் என்று அறிவிக்கப்படுவான்.

ஓர் ஒலிம்பிக்கில், கடைசிச் சுற்றில் அடிபட்ட வேதனை தாங்காமல் இறந்து போனவன் வெற்றி வீரனாக அறிவிக்கப்பட்டான். எப்படித் தெரியுமா?

ஏரேகியுன் என்று ஒரு மாவீரன். அவன் இந்தப் போட்டியில் கலந்து கொண்டான். ஏரேகியனுக்கு செம்மையான அடி. தலையில் பலத்த காயம்! ரத்தம் கொட்டியது. படுகாயமுற்ற நிலையில் கீழே விழுந்தான். அப்போது எதேச்சையாக எதிரியின் கால்கள் அவன் கைகளில் சிக்கின. அதைக் கெட்டியாகப் பற்றிக் கொண்டான். இறுதி முயற்சியாக மூச்சைத் 'தம்' பிடித்துக் கொண்டு எதிரியின் காலைப் பலம்கொண்ட அளவு முறுக்கினான். எதிரியினால் வலி பொறுக்க முடியவில்லை. ஐயோ' என்று அலறியவாறு, தனது இரு கரங்களையும் உயர்த்தித் தனது தோல்வியை ஒப்புக்கொண்டான். அதே கணத்தில் ஏரேகியன் பிடித்த 'தம்' பட்டென்று வெடித்து அவனுடைய உயிர் பிரிந்தது. ஏரேகியன் இறந்து விட்டான். எனினும், எதிரி தனது தோல்வியை ஒப்புக்கொண்டு விட்டான் அல்லவா? எனவே, இறந்துபோன ஏரேகியன் 'பெங்குரோஷியன்' சாம்பியனாக அறிவிக்கப்பட்டான்.

குழந்தைகளே! இதுவரையில் பழைய ஒலிம்பிக்கின் கதையைப் பார்த்தோம். கி. பி. 393 – இல் நடந்தது தான் ரோமானியர் காலத்தில் நடந்த கடைசி ஒலிம்பிக் என்றும் பார்த்தோம். அதன் பிறகு பல நூற்றாண்டுகளுக்கு ஒலிம்பிக் நடக்கவில்லை. பிறகு எப்போது அது மீண்டும் விளையாடத் தொடங்கப்பட்டது? அதைப் புதுப்பித்துத் தொடங்கியவர் யார்? இதுவரை புதிய ஒலிம்பிக் போட்டிகள் எத்தனை நடந்துள்ளன? எங்கெங்கு நடந்தன? எப்படியெல்லாம் அந்தப் புதிய ஒலிம்பிக் இன்று வரை வளர்ச்சி அடைந்துள்ளது?

இவற்றுக்கெல்லாம் விடை அடுத்த மாத கோகுலத்தில் நீங்கள் அறியலாம். ஆம்! அடுத்த மாதம் 'புதிய ஒலிம்பிக்'கின் கதை!

பழமொழிப் புதிர் விடை:

புதிர் – 41: கிளியை வளர்த்துப் பூனையிடம் கொடுத்தாற் போல.

புதிர் – 42: பால ஜோதிடம்; விருத்த வைத்தியம்.

சில்லறைக்குப் பதில்


"டாக்டர்... ஒரு பல்லு பிடுங்கினீங்களே... எத்தனை ரூபாய் பீஸ்...!"

"இருபத்தைந்து ரூபாய்..."

"இந்தாங்க ஐம்பது ரூபாய்... மீதி தாங்க..."

"சில்லறை இல்லையே... இருங்க, இன்னும் ஒரு பல்லையும் பிடுங்கிடறேன்...!"

— ஏ. ஆர். வீரராகவன்






ஃச்சங்குருவிகள் தான் பறக்கும் போதே உணவைப் பிடித்துத்தின்னும். நீரினை குளம் குட்டைகளின் மேல் பரப்பைத் தொட்டுப்பறக்கும் போது உறிஞ்சிக் கொள்ளும்.



அமெரிக்க செகரெட்டரி என்ற பறவை தனது உணவினை, பறந்து தேடாமல், நிலப் பரப்பில் நடந்து தேடிப் பிடிக்கும். பாம்புகளை விரும்பிச் சாப்பிடும்.



பெலிகான் என்ற இனம் தன் உணவினை அலகின் அடியிலுள்ள பை போன்ற அமைப்பில் மறைத்துக் கொள்ளும். பின்பு ஓய்வு நேரத்தில் கழுத்தை முன்னே தள்ளி வாயிலுள்ள பை அமைப்பிலிருந்து உணவை வெளியே தள்ளி விழுங்கும்



ஸீ-கல் என்ற பறவை கள் நத்தை போன்ற பூச்சி, புழுக்களை விரும்பிச் சாப்பிடும்.

நத்தைக் கூட்டை, பறக்கும்போது பாறை மீது போட்டு உடைத்து உள்ளிருக்கும் சதைப் பற்றைத் தின்னும்.



மரங்கொத்தி தன் உறுதியான அலகால் மரத்தினைக் கொத்தி உணவான பூச்சி களைக் கண்டுபிடிக்கும். அப்படி அது கொத்தும் போதும், மரத்தில் செங் குத்தாக நடக்கும்போதும் அதன் வால் உறுதுணையாக இருக்கிறது.

— விமலன் —


சிரி சிரிக்கலாமே


— ஏ. ஆர். வீரராகவன்.

காரணம் என்ன?

"உன்னுடைய 'விட்' எல்லாம் பத்திரிகையில் ஒரு வாரம் விட்டு ஒரு வாரம் வெளிவருகிறதே ஏன் ....?"

"அது 'விட்' தானே .... அதுதான் விட்டு விட்டு வெளிவருகிறது ....!"





முடியவில்லையே!


டாக்டர்: நான் சொன்னபடி தினமும் இரண்டு ஸ்பூன் சாப்பிடுறீங்களா ....?"

நோயாளி: என்னாலே ஒரு ஸ்பூனைக் கூட சாப்பிட முடியல்லே டாக்டர் ...!"

முதலில் வந்தது

"நீ எப்படி தம்பி ஓட்டப்பந்தயத்திலே முதலிலே வந்தே?"

"பக்கத்து வீட்டு நாய் என் பின்னால் துரத்துவதாக நினைத்துக் கொண்டு ஓட்டப்பந்தயத்தில் ஓடினேன் .... அதனால்தான் .....!"






நானே போய் வருகிறேன்

" வீட்டைப் பாத்துக்கப்பா ... வாக்கிங் போயிட்டு வந்துடறேன் ..."

"அட என்னத்துக்கு ... நீங்க போகணும்? நானே போய்ட்டு வந்துடறேன் ....!"

ஏன் பௌலர் அவுட் ஆவதில்லை?

"ஏன் அப்பா ... எப்பவும் இந்த கிரிக்கெட் ஆட்டத்தில் பேட்ஸ்மேன் மட்டும் அவுட் ஆகிறாங்க ...? பௌலர் அவுட் ஆனா என்ன ...?"




சீனக் கதை —

1

மகளின் தியாகத்தால் மணி உருவானது!

தமிழில்: சந்திரநாத்



முன்னொரு காலத்தில் சீனா தேசத்தில், அதன் தலைநகரமான பீகிங் பட்டணத்தில், வெளிமதிலில் இரண்டு பெரிய காவல் கோபுரங்கள் இருந்தன.

ஒரு கோபுரத்திற்கு 'முரசு கோபுரம்' என்று பெயர். அதில் ஒரு பெரிய முரசும், கண்ணாடிக் குடுவையாலான ஒரு கடிகாரமும் இருந்தன. அது தண்ணீரால் இயங்கும் கடிகாரம்.

மேல் குடுவையில் உள்ள தண்ணீர் கீழ்க் குடுவையில் சதா சொட்டுச் சொட்டாகச் சொட்டிக் கொண்டே இருக்கும்.

மேல் குடுவையில் உள்ள தண்ணீர் முழுவதும் கீழ்க் குடுவைக்குள் வந்து விட்டால், ஒரு மணி நேரம் ஆகிவிட்டது என்று அர்த்தம்.

உடனே அந்தக் கோபுரத்தின் காவலாளி கண்ணாடிக் குடுவையைத் தலை கீழாகத் திருப்பி வைப்பான். பிறகு முரசு மேடைக்குப் போய் முரசை அறைந்து ஊருக்கு மணி அறிவிப்பான். திருப்பி வைத்த குடுவையில் மேலே இருந்து தண்ணீர் கீழ்க் குடுவையில் சொட்ட ஆரம்பிக்கும்.

இரண்டாவது கோபுரத்திற்கு 'மணி கோபுரம்' என்று பெயர். அங்கே ஒரு பெரிய வெண்கல மணி கட்டியிருந்தது. அதை அடித்தால், பல மைல் தூரத்திற்கு இனிமையான நாதம் கேட்கும்.

அங்கே உள்ள காவலாளி காலையில் சூரியோதயம் ஆகும் போது மணியை இழுத்து அடிப்பான்; உடனே காவலர்கள் கோட்டையின் கதவுகளைத் திறந்து விடுவார்கள். அதே மாதிரி இரவு ஒன்பது மணிக்கு இன்னொரு தடவை மணியை இழுத்து நாதம் எழுப்புவான். உடனே காவலர்கள் கோட்டையின் கதவுகளை இழுத்து மூடி விடுவார்கள்.

பீகிங் நகரத்து மக்கள் அந்த மணி ஓசையைக் கேட்பதற்காகவே, மற்ற வேலைகளை நிறுத்தி விட்டுக் காத்திருப்பார்கள். மணி அடிக்க ஆரம்பித்ததும் அவர்களில் முதியவர்களாக உள்ளவர்களின் மனசு பதை பதைக்கும். மணி ஒலித்துக் கடைசியில்,

''ஷ்ஷ்ஷ்ஷை' என்று முடியும் போது அவர்கள் கண்களில் நீர் ததும்பும்.

''பாவம், கோ— அய் தன் காலணியைத் தேடுகிறாள்'' என்பார்கள். பெருமூச்சு விடுவார்கள்.

''அது யார் தாத்தா கோ— அய்?'' என்று இளைஞர்கள் கேட்பார்கள். அவர்களுக்குப் பழங்காலத்தில் நடந்தது தெரியாது. அந்த மணி உருவான காலத்தில் நடந்தது ஒரு பெரிய துயரக் கதை.

''சொல்லுங்கள் தாத்தா; கேட்கிறோம்'' என்பார்கள் இளைஞர்கள்.

பெரிதாகப் பெருமூச்சு விட்டுக்கொண்டு பெரியவர்கள் அந்தக் கதையைச் சொல்வார்கள்.

2

இந்த மணியையும் இந்தக் காவல் கோபுரங்களையும் அமைத்தவர் ஒரு சீனச் சக்கரவர்த்தி.

அவர் சீனாவிலேயே மிகப் பெரிய காவல் கோபுரங்களையும், உலகிலேயே மிகப் பெரிய ஓசையை எழுப்பக் கூடிய பெரிய முரசையும், இசை ஒலி போன்ற ஓசை தரும் மணியையும் உடையவன் என்கிற பெருமையை அடைய விரும்பினார்.

அரும்பாடுபட்டுப் பெரிய உயரமான காவல் கோபுரங்களைக் கட்டி விட்டார். பிரம்மாண்டமான முரசையும் அமைத்து விட்டார்.

கடைசியில் மணி ஒன்றுதான் பாக்கி இருந்தது. ''அது மட்டும் தயாராகி விட்டால், என் புகழ் உலகமெங்கும் பரவி விடும்'' என்று எண்ணினார் அவர்.

அதைச் சாதிக்க அவர் ஓர் ஆலோசனை சபையைக் கூட்டினார். ''உயிர்த்துடிப்புள்ள இனிய நாதத்தைத் தரும் ஒரு மணியை நாம் உருவாக்க வேண்டும். சீனாவின் மிகக் கெட்டிக்காரரான கருமானைக் கண்டு பிடித்து அழைத்து வாருங்கள்'' என்று உத்தரவிட்டார் சக்கரவர்த்தி...

உடனே சீனாவின் எல்லா மாகாணங்களிலும் உள்ள திறமைசாலியான கருமார்களைத் தேடும் பணி ஆரம்பமாயிற்று. ஒவ்வொரு மாகாண கவர்னரும், தங்கள் மாகாணத்துச் சிறந்த கருமான்களைத் திரட்டிப் பீகிங்கிற்கு அனுப்பி வைத்தார்கள்.

ஒரே வாரத்திற்குள் சீனாதேசத்தின் எல்லாப் பகுதிகளிலிருந்தும் நூறு சிறந்த கருமான்கள் பீகிங் வந்து சேர்ந்தார்கள்.

அவர்களிலே புகழ்பெற்ற கருமான் ஒருவன் இருந்தான். குவான்— யூ என்பது அவன் பெயர்.

''சீனாவின் புகழ் வாய்ந்த கலைஞனான குவான்— யூவே, என்ன சொல்கிறாய்? உறுதியும், இனிமையான குரலும், தூர தூரத்திற்கும் கேட்கும் நாதமும், உடைய ஓர் அற்புத மணியை உன்னால் வார்த்துத் தர முடியுமா?'' என்று கேட்டார் சக்கரவர்த்தி.

குவான்— யூ இடுப்பளவு தலை தாழ்த்தி, சக்கரவர்த்தியை வணங்கினான். ''முடியும், சக்கரவர்த்தியவர்களே'' என்றான்.

''எப்படிச் செய்வாய், அதை நீ?'' என்று கேட்டார் சக்கரவர்த்தி.

''பேரரசரான தங்கள் உதவியிருந்தால் வானத்திற்கே ஒரு இரும்புப் பாலம் அமைத்து விட முடியாதோ?'' என்றான் குவான்— யூ.

''என்ன என்ன பொருள்கள் வேண்

என்ன மன்றம்?

குரு: என்னடா, அங்கே, உங்க பாட்டி, எங்க பாட்டி, எதிர் வீட்டுப் பாட்டி எல்லோரும் ஒரேயடியா சத்தம் போட்டுப் பேசிக்கிட்டிருக்காங்க? ஏதாவது பட்டிமன்றமா?

சீனா: அது பட்டிமன்றம் இல்லேடா! பாட்டி மன்றம்!

— இரா. பிரசன்னு (3221).



டும், உனக்கு மணி செய்ய?'' என்று கேட்டார் சக்கரவர்த்தி.

''உறுதியான கட்டமைப்பு ஏற்பட இரும்பு வேண்டும்; பெரும் ஓசை எழ பித்தளை சேர்க்க வேண்டும்; கம்பீரத்திற்கு தங்கமும், இனிமைக்கு வெள்ளியும் சேர்க்க வேண்டியிருக்கும்.'' என்றான் குவான்– யூ.

''அந்தப் பொருள்கள் எல்லாம் உனக்குக் கிடைக்கும்'' என்றார் சக்கரவர்த்தி.

3

சில நாட்களிலேயே குவான்– யூ கேட்ட பொருள்கள் எல்லாம் வந்து சேர்ந்து விட்டன.

பீகிங் நகரத்தை அடுத்து, ஒரு நீர் நிலைக்கு அருகில், குவான்– யூவும் மற்ற கருமான்களுமாகச் சேர்ந்து ஒரு பெரிய உலைக் கூடத்தை அமைத்தார்கள்.

பெரிய காளவாய் அடுப்புகள் மீது பிரம்மாண்டமான கொதிகலன்களை நிறுவினார்கள். அவைகளிலிருந்து கொதிக்கும் தாதுக் குழம்புகள் ஓடி வரக் கால்வாய்களை அமைத்தார்கள். ஓடி வந்த திரவம் மணி அச்சில் விழ ஏற்பாடு செய்தார்கள்.

குவான்– யூ தானே ஒவ்வொன்றையும் நேரடியாக மேற்பார்வை செய்தான்.

இரும்பு, வெள்ளி, தங்கம், பித்தளை எல்லாவற்றையும் தேவையான அளவு எடுத்துப் பெரிய கொதிகலன்களில் இட்டுத் தீ மூட்டினான்.


அந்த உலைக் கூடத்திலே பல மாத காலம் புகை எழுந்து கொண்டே இருந்தது.

காய்ச்சுவதும், ஊற்றுவதும், பதப்படுத்துவதுமாகப் பரீட்சைகள் நடந்து கொண்டே இருந்தன.

கடைசியில் எந்த அளவில் பொருள்களைக் கலக்க வேண்டும் என்பதைக் கண்டு பிடித்து விட்டான் குவான்– யூ.

''பிரபுவே, இப்போது நாங்கள் மணியை வார்க்கத் தயாராகிவிட்டோம்'' என்று சக்கரவர்த்தியிடம் போய்ச் சொன்னான்.

''அப்படியா? அதை ஒரு பெரிய திருநாளாகவே கொண்டாடுவோம்''



என்றார் சக்கரவர்த்தி.

ஊரை எல்லாம் ஆடம்பரமாக அலங்கரிக்கும்படி உத்தரவிட்டார். மக்கள் எல்லோரும் அழகாகப் பட்டாடைகள் உடுத்திக் கொண்டு உலைக் களத்திற்கு வரவேண்டும் என்று அறிவிக்கச் சொன்னார்.

"நாளைக் காலை பத்து மணிக்கு நகர்ப்புற உலைக் கூடத்தில் மணி வார்க்கும் திருவிழா நடைபெறுகிறது" என்று முரசு அறைபவர்கள் நகரெங்கும் அறிவித்துக் கொண்டு சென்றார்கள்.

மறுநாள் அதிகாலையிலிருந்தே பீகிங்வாசிகள் உலைக்களத்தை நோக்கிச் சாரி சாரியாக வர ஆரம்பித்து விட்டார்கள்.

குறிப்பிட்ட நேரத்திற்குச் சற்று முன்னாலேயே உலைக்களத்தைச் சுற்றியிருந்த மைதானம் நிரம்பி வழிந்து விட்டது.

பெண்கள் எல்லோரும் கையில் அழகான விசிறிகளுடன் அமர்ந்திருந்தார்கள்.

அவர்களுக்குச் சற்றுத் தூரத்தில் அரண்மனை பாண்டு வாத்திய கோஷ்டி அமர்ந்து இசை பரப்பிக் கொண்டிருந்தது.

சக்கரவர்த்தி வந்து தமக்குரிய உயர்ந்த ஆசனத்தில் அமர்ந்ததும், குவான்—யூ பணிவுடன், அவருக்கு வளைந்து வணக்கம் செலுத்தினான்.

அவனுக்குப் பின்னால் அவனுடைய பெரிய உலைக் கூடம் புகையும் ஆவியும் கக்கிக் கொண்டு நின்றது.

அதன் கொதிகலன்களில் தளதளவென்று திரவம் கொதித்தது. அந்தக் கொதிகலன்களை மடை திருப்பி விடப் போகிற மற்ற கருமான்கள் அருகில் தயாராக நின்றார்கள்.

மைதானம் முழுவதும் வண்ணத் தோரணங்கள் காற்றில் அசைந்து ஆடின.

சக்கரவர்த்தி எல்லாவற்றையும் ஒருமுறை பார்த்து விட்டு, தன் பட்டுக்-கைக்குட்டையை எடுத்து மேலே உயர்த்தி லேசாக அசைத்தார்.

உடனே வாத்தியங்கள் உச்ச சுதியில் ஒலித்தன. பெண்கள் எழுந்து தங்கள் கைவிசிறிகளை உயர்த்தி





பழைய பாக்கி

மாணவன்: பிள்ளையாரப்பா! உன் கருணையால் போன வருஷம் பாஸாயிட்டேன்! இந்த வருஷமும் பரீட்சையிலே பாஸாயிட்டா, சென்ற ஆண்டு வேண்டுதலையும் சேர்த்து இரண்டு சிதறு தேங்காயாக உடைத்து விடுகிறேன்!

பிள்ளையார்: அதெல்லாம் முடியாது! பழைய பாக்கியைத் தீர்த்தவங்களுக்கு மட்டுமே இந்த ஆண்டுக் கோரிக்கைகளைப் பரிசீலனை செய்வதென முடிவு செய்திருக்கோம்!

— பழையனூர் மா. கணபதி.

அசைத்தார்கள். குவான்— யூ உலையின் ஒரு மறையைப் பிடித்துத் திருப்பினான்.

அடுத்த கணம், கொதிகலன்களிலிருந்து கொதிக்கும் நீல நிறத் திரவங்கள் வரிசையாக வெளிப்பட்டு மடைகளில் ஓடி, ஓரிடத்தில் கூடி, பிறகு மணி அச்சில் விழுந்தது.

மணி அச்சின் விளிம்பு வரை திரவம் விழுந்ததும் குவான்— யூ திரவத்தை நிறுத்தினான்.

மணி வார்த்தாகி விட்டது. இனி அது குளிர்ந்து இறுக வேண்டும். அதற்குப் பல மணி நேரம் ஆகும்.

''சரி, மணி இறுகிய பிறகு சொல்லி அனுப்பு'' என்று சொல்லி விட்டு, சக்கரவர்த்தி அரண்மனைக்கு திரும்பினார்.

மக்களும் அவரவர் வீடுகளை நோக்கிச் சென்றார்கள்.

இரவு முழுவதும் குவான்— யூவும் அவனுடைய சீடர்களும் உலைக் களத்திலேயே இருந்தார்கள். மணி இறுகுவதற்கான காரியங்களில் தீவிரமாக ஈடுபட்டிருந்தார்கள்.

பொழுது விடிவதற்குச் சற்று முன் தான் திரவம் இறுகியது. குவான்— யூ மணியைச் சுற்றியுள்ள களிமண் அச்சை உடைக்கும்படி தன் ஆட்களுக்கு உத்தரவிட்டான்.

அவர்கள் அப்படியே செய்தார்கள். சற்று நேரத்தில், மணியைச் சுற்றியிருந்த களிமண் அச்சு முழுவதும் அகன்று இறுகிய மணி தெரிந்தது.

குவான்— யூ ஆவலுடன் அதனிடம் ஓடிப் போய்ப் பரிசோதித்தான். அடுத்த கணம், அவன் முகம் வெளுத்து விட்டது.

மணி நன்றாக வந்திருந்தது. ஆனால், அதில் ஏராளமான ஓட்டைகளும், கீறல்களும் நிறைந்திருந்தன. அதிலிருந்து சத்தமே வரவில்லை.

4

''எவ்வளவு காலம், எவ்வளவு முயற்சி வீணாகி விட்டது!'' என்றார் சக்கரவர்த்தி இதைக் கேட்டதும்.

தலைகுனிந்து அவர் முன் நின்றான் குவான்— யூ.

''உம்'' என்று பெருமூச்சு விட்டார் சக்கரவர்த்தி. ''சரி, மனம் தளராதே! மீண்டும் முயற்சி செய். உலகில் யாரிடமும் இல்லாத மணி எனக்கு வந்தாக வேண்டும் அதுதான் முக்கியம். போ, உடனே வேலையைத் தொடங்கு'' என்றார்.

குவான்— யூ குனிந்து அவரை வணங்கி விட்டு உலைக் களத்திற்குத் திரும்பினான்.

உலைக்களத்தில் அடுப்புகள் மீண்டும் புகைய ஆரம்பித்தன. கொதிகலங்களில் தங்கமும், வெள்ளியும், இரும்பும், பித்தளையும் மீண்டும் கொதிக்க ஆரம்பித்தன.

குவான்— யூ மிக்க கவனமாக வேலைகளைக் கவனித்தான். ஒவ்வொரு பொருளையும் கவனமாகப் பரிசோதித்தான். இனி பிசகு ஏற்பட்டு விடக் கூடாது என்பதில் கருத்தாக இருந்தான்.

இந்தத் தடவை மணி வார்க்கப்படுவதைக் காண அதிகக் கூட்டம் வரவில்லை. அரச சபையைச் சேர்ந்த

சிலர் மட்டுமே சம்பிரதாயத்துக்காக வந்திருந்தார்கள்.

குவான்— யூ வெகு ஜாக்கிரதையாகப் புதிய மணி அச்சில் கொதிக்கும் திரவத்தை ஊற்றினான்.

'இந்தத் தடவை நல்லபடியாக வர வேண்டும்' என்று அவன் வேண்டிக் கொள்ளாத தெய்வமே இல்லை.

கொதிக்கும் திரவம் துளிக்கூட பிசிறின்றி அச்சில் பாய்ந்து நிரப்பியது.

குவான்— யூ திருப்தியுடன் அதை ஆற விட்டு விட்டு, காவல் இருந்தான். 'இந்தத் தடவை மணி சரியாக வந்து விடும்'' என்ற நம்பிக்கை வந்து விட்டது, அவனுக்கு!

ஆனால், திரவம் ஆறி, இறுகிய பின் அச்சைப் பிரித்துப் பார்த்த போது, தலையில் இடி விழுந்தது போல ஆகிவிட்டது!

மணி இந்தத் தடவையும் கூடி வரவில்லை! அதில் மிக நீண்டதொரு விரிசல் விழுந்திருந்தது.

குவான்— யூ திடுக்கிட்டு, சப்தநாடிகளும் அடங்கியவனாய் அப்படியே உட்கார்ந்து விட்டான்.

அவமானத்தால் அவன் குன்றிப் போய் விட்டான். இரவு முழுவதும் அவன் யாரிடமும் ஏதும் பேசவே இல்லை. விரிசல் மணியையே பார்த்துக் கொண்டு வெகு நேரம் உலைக்களத்திலேயே உட்கார்ந்திருந்தான்.

தெய்வமாக நினைத்த அவனுடைய தொழிலே அவனைக் கைவிட்டு விட்டது போலிருந்தது!

5

''முட்டாளே, விளையாடுகிறாயா, என்னிடம்?'' என்று சீறினார், சக்கரவர்த்தி.

''இல்லை பிரபுவே, நான் கனவில் கூட அப்படி நினைத்ததே இல்லை!'' என்று கதறினான் குவான்— யூ.

''உனக்கு வெட்கமாக இல்லையா, சீனாவின் மிகப் பெரிய கருமான் என்று பெயர் வைத்துக் கொண்டிருப்



பதற்கு?'' என்று கர்ஜித்தார் சக்கரவர்த்தி.

''இரும்பும், பித்தளையும், தங்கமும், வெள்ளியும், வெண்கலமும் உன் கையில் நர்த்தனமாடும் என்கிறார்களே, எவ்வளவு பெரிய பொய்'' என்றார் சக்கரவர்த்தி.

குவான்— யூ இதற்கும் பதிலே சொல்லவில்லை.

''எங்கே போயிற்று உன் திறமை எல்லாம் — யூ குடும்பத்தில் பரம்பரையாக வந்த திறமை எங்கே?''

குவான்— யூ சிறு குழந்தை போலக் கேவிக் கேவி அழுதான். அவனுக்கு அவமானம் தாள முடியவில்லை.

''உலைக்களத்திலேயே பிறந்து வாழ்ந்த பரம்பரையல்லவா, உன்னுடையது? உலோகங்கள் எல்லாம் உங்கள் வீட்டுப் புழக்கடையில், கைகட்டிச் சேவகம் செய்யக் காத்துக் கிடக்கும் என்பார்களே! குவான்— யூ, மகத்தான உலோகக் கலைஞனே, உன்னுள்ளே இருக்கும் அந்த மேதையை வெளியே கொண்டு வா; உனக்கு இன்னொரு சந்தர்ப்பம் தருகிறேன்.''

''இன்னொரு சந்தர்ப்பமா?'' நடுங்கினான் குவான்— யூ.

''ஆமாம். இன்னொரு சந்தர்ப்பம்; கடைசி சந்தர்ப்பம். யூக் குடும்பத்தின் திறமைக்குக் கடைசி சந்தர்ப்பம். அந்தக் குடும்பம் இத்தனை தலைமுறைகளாக உலோக உருக்குக் கலையில் அடைந்த அனுபவம், ஒரு நிகரற்ற மணியை, இந்தச் சீன நாட்டிற்குக் காணிக்கையாகச் செய்து தந்தே ஆக வேண்டும்— ''

சக்கரவர்த்தியின் குரல் இடியோசை போல குவான்— யூவின் காதில் விழுந்தது.

''இந்த மூன்றாவது தடவையும், யூ குடும்பம் தன் திறமையைக் காட்டத் தவறினால் — ''

சக்கரவர்த்தி ஒரு கணம் நிறுத்திவிட்டு, எழுந்து குவான்— யூவின் அருகில் வந்தார்.

அவனுடைய தாடையை விரலால் நிமிர்த்தி அவனுடைய கண்களுக்குள் ஆழமாகப் பார்த்தார். பிறகு இடி போன்ற குரலில் சொன்னார். ''தவறினால், உன் தலை உன் கழுத்தில் இருக்காது— ''

கையை 'சட்'டென்று விலக்கிக் கொண்டு சக்கரவர்த்தி உள்ளே போய் விட்டார்.

6

குவான்— யூ நடுங்கிக் கொண்டே வீடு வந்து சேர்ந்தான். இடிந்து

பூனைக் கோயில்



எகிப்து நாட்டில் பூனைகளைத் தெய்வமாக நினைத்து, அவற்றிற்குக் கோயில் கட்டினார்கள்; சிலைகள் அமைத்தார்கள். ஒருவருடைய வீட்டிலே வளர்ந்த பூனை இறந்து விட்டால், அந்த வீட்டில் துக்கம் கொண்டாடுவார்களாம். அத்துடன், அந்த வீட்டில் இருப்பவர்கள் தங்களுடைய புருவ மயிரை எடுத்து விடுவார்களாம்!

அவர்கள் சேமித்து வைத்த தானியங்களை எலிகளிடமிருந்து காப்பாற்றி அவர்களுக்கு மிகவும் உதவியாக இருந்த பூனைகளை அவர்கள் இவ்வாறு போற்றி வந்தார்களாம்!

— எம். கவிதா (19,351),
கீழச்சிவல்பட்டி.



போய்க் கூடத்தில் உட்கார்ந்து விட்டான்!

குவான்— யூவுக்கு ஒரு மகள் இருந்தாள். 'கோ — ஆய்' என்பது அவள் பெயர். பதினைந்து வயசுதான் ஆகியிருந்தது. மிக அழகாக இருப்பாள்.

கோ — ஆய் தந்தையிடம் உயிரையே வைத்திருந்தாள். குவான் — யூவுக்கும் வேறு குழந்தைகள் கிடையாது. ஆகவே, கோ— ஆயை அவன் மிகச் செல்லமாக வளர்த்து வந்தான்.

கோ— ஆய் அப்போது கோயிலுக்குப் போயிருந்தாள். அங்கே அவள் அரச சபையில் நடந்ததை எல்லாம் கேள்விப்பட்டாள். அவள் உடலும் உள்ளமும் பதை பதைத்தன.

''ஒரு இரும்பு உலை சரியாக வேலை செய்யவில்லை என்பதற்காக, ஒரு பிரஜையின் தலையையே கேட்கும் இந்த ராஜா என்ன ராஜா?'' என்று நினைத்தாள்.

செய்தி காதில் விழுந்ததும் அவள் உடனே வீடு திரும்பினாள். வீட்டில் தந்தை மனமிடிந்து உட்கார்ந்திருப்பதைப் பார்த்தாள். ''அப்பா'' என்று ஓடி வந்து கட்டிக் கொண்டாள்.

குவான்— யூவின் கண்களிலிருந்து கண்ணீர் அருவியாகப் பெருகி வழிந்தது.

கோ— ஆய் தன் மெல்லிய விரல்களால் அதைத் துடைத்தாள். ''அழாதீர்கள் அப்பா. கடவுள் நம்மைக் கைவிட மாட்டார்'' என்று தைரியம் சொன்னாள்.

''எப்பேர்ப்பட்ட மகா கலைஞர் நீங்கள்? உங்களுக்கு வசப்படாத உலேர்கம் இருக்க முடியுமா? இரண்டு தடவை உங்களிடமிருந்து அது தப்பியதே பெரிய அதிசயம். மூன்றாவது தடவை அதன் கழுத்தை இறுக்கி, காலடியில் விழச் செய்து விட மாட்டீர்களா?'' என்றாள் அவள்.

''இன்னொரு தடவையா, நானா?'' என்றான் குவான்— யூ.

''ஏன் முடியாது? இழந்த சாம்ராஜ்யங்களை அடைய அரசர்கள் எத்தனை தடவை போரிடப் போகிறார்கள்? சிலந்திகள், எத்தனை தடவை வலை கிழிந்தாலும், திரும்பத் திரும்பப் பின்னிக் கொண்டே இருக்கவில்லையா? முயற்சிக்கு முடிவேது?'' என்றாள் கோ— ஆய்.

''எழுந்திருங்கள்; தைரியத்தோடு உலை அடுப்பிலே கொப்பறைகளை ஏற்றுங்கள். அடுப்பை எரிய விடுங்கள். 'உன்னை உருவாக்காமல் விட மாட்டேன்' என்று சூளுரையுங்கள்; உலோகங்கள் மீண்டும் கொதிக்கட்டும்; யூ குடும்பத்துச் சிறந்த கருமான்களாக இருந்த மூதாதையர்களே வந்து அந்த உலோகக்

குழம்பை, உங்கள் கையைத் தொட்டு வார்ப்பார்கள் — உலகமே காணத் துடிக்கும் அதிசய மணி பிறந்து விடும் — இது நிச்சயம்'' என்றாள் கோ— ஆய்.

தந்தையை எழுப்பி நிறுத்தி, அவனுடைய மேலங்கியைக் கொண்டு வந்து அணிவித்தாள் கோ— ஆய்.. கலைந்து கிடந்த அவனுடைய நீண்ட சிகையை வாரிப் பின்னித் தொங்க விட்டாள். காலணிகளைக் கொண்டு வந்து காலில் அணிவித்தாள்.

நீண்டு தொங்கும் அவனுடைய இருபுறத்து மீசைகளையும் செல்லமாகத் தடவிக் கொடுத்தாள்.

''யூ குடும்பத்து குவானின் மீசை, நினைத்ததைச் சாதிக்கக் கூடிய ஒரு ஆணின் மீசை என்பதை உலகம் தெரிந்து கொள்ளட்டும் — போய் வாருங்கள்'' என்றாள்.

7

ஆனாலும், உற்சாகமே இல்லாமல் தான் குவான்— யூ உலைக்களத்திற்கு மூன்றாவது முறை போனான்.

தந்தைக்குத் தைரியமும், தேறுதலும் சொன்னாலும் கோ— ஆயின் மனசிலும் 'மணி இந்தத் தடவை சரியாக வரவேண்டுமே' என்கிற கவலையே மேலோங்கி இருந்தது. 'மணி சரியாக வராவிட்டால்?' இதை நினைக்கும் போது, அவள் உடம்பு நடுங்கியது. அப்பாவின் தலையே போய் விடும். அப்பாவை இழந்த பின் அவள் உயிர் வாழ முடியுமா? நிச்சயமாக முடியாது.

கோ— ஆய் தனக்குத் தெரிந்த ஒரு சோதிடரிடம் போனாள். தொண்டு கிழவர் அவர். அவருடைய வெள்ளைத் தாடி அவர் மடிமீது செல்லக் குழந்தை போலப் புரண்டது.

கோ— ஆய் அவர் முன் பழங்களையும் உரிய காணிக்கையையும் வைத்து வணங்கி விட்டு, நடந்ததை எல்லாம் சொன்னாள்.

''என்ன குற்றத்தால் மணி கூடி வராமல் போய் கொண்டே இருக்கிறது? அது சரிவரக் கூடி வர என்ன செய்ய வேண்டும்?'' என்று கேட்டாள்.

சோதிடர் முதலில் சோழிகளைக் கீழே உருட்டிப் பார்த்தார். கணக்குகள் போட்டார். புகையும் தீ குண்டத்தில் சுள்ளிகளைப் போட்டார். அவை 'சடபட சடபட'வென்று வெடிப்பதைக் கூர்ந்து பார்த்தார்.

பிறகு ஒரு ஓலைச் சுவடியை எடுத்து அதில் ஏதோ எழுதி அவளிடம் கொடுத்தார்.

கோ— ஆய், கைகள் நடுங்க அதை வாங்கிப் படித்தாள்:

''நாலு உலோகத்துக்கும் தாகம்,
தாகம்,
தீராத தாகம்.
நாலும் உருகி ஒன்றாகச் சேர
நல்லதோர்கன்னியின் ரத்தம்வேண்
டும்.''

''ஆங்'' என்று வாய்விட்டுக் கத்தி விட்டாள், கோ— ஆய், இதைப் படித்ததும், கன்னியின் ரத்தமா, வேண்டும்? எங்கே போவது கன்னியின் ரத்தத்திற்கு? எந்தக் கன்னிப் பெண் கேவலம் ஒரு அற்ப மணிக்காகத் தன்னையே பலிதர முன் வருவாள்?

கோ— ஆய் இடிந்து போய் வீடு திரும்பினாள். இரவெல்லாம் அவள் தூங்கவே இல்லை. சோதிடர் சொன்னதை எவரிடமும் சொல்லவும் இல்லை.

அதிகாலையில் அவள் அம்பு போல எழுந்து நின்றாள். கண்ணீரைத் துடைத்துக் கொண்டாள்.

''என் அப்பாவின் உயிர் எப்படியும் காப்பாற்றப்பட்டே ஆக வேண்டும்'' என்று தனக்குள் சொல்லிக் கொண்டாள்.

நேராகத் தந்தையின் அறைக்குப் போனாள் குவான்— யூ அப்போது உலைக்களத்துக்குக் கிளம்பிக் கொண்டிருந்தான்.

''அப்பா — இன்று தானே மணியை வார்க்கப் போகிறீர்கள்? நானும் அதைக் காண விரும்புகிறேன்'' என்றாள்.

''சரி, கிழட்டுத் தாதியுடன் வா — சரியாகப் பதினோரு மணிக்கு

மணியை வார்த்து விட இருக்கி றோம்'' என்றான் குவான்– யூ.

' உங்களுக்கு வெற்றி கிடைக்கும். இந்தத் தடவை மணி எந்தவிதக் குறையுமின்றி உருவாகி விடும்; கோட்டைக் கோபுரத்தில் தொடங்கி, பல ஆயிரம் ஆண்டுகள் முழங்கும்! நிச்சயம்'' என்று வழி அனுப்பினான் கோ– ஆய்.

இந்தத் தடவை மணி வார்க்கப்படு வதைக் காண பீகிங் நகரமே வந்து கூடியிருந்தது.


மணி சீராக வராவிட்டால் குவான் – யூவை அந்த இடத்திலேயே சிரச் சேதம் செய்து விடுவாரே – அதைப் பார்க்க வேண்டாமா?

சரியாக, பதினோருமணிக்குச் சற்று

போர்டுகள் பலவிதம்...

நாம் வழக்கமாகப் பல இடங்களிலும் பார்க்கும் அறிவிப்புப் பலகைகளைக் 'கொஞ்சம்' மாற்றிப் பார்த்திருக்கிறோம்...

– கருத்து : தேனி இரமேஷ்



முன், கோ — ஆய் தன் கிழத்தாதியுடன் அங்கே வந்து சேர்ந்துவிட்டாள்.

இந்தத் தடவையும் அரண்மனை வாத்திய கோஷ்டி கோரஸாக இசைத்து முழக்கியது; நகரத்து இளம் பெண்கள் பட்டாடைகளை உடுத்தி, கையில் உள்ள அழகிய விசிறிகளை இசைக்கேற்ப அசைத்தார்கள்.

குவான் — யூ கொதிக்கும் உலோகக் குழம்புகளின் வடிமுனைகளைத் திறந்து விட்டான்.

நாலு வெவ்வேறு கொதிகலன்களிலிருந்து நாலு வகைக் திராவகக் குழம்புகள் ஓடிவந்து, ஒரு பெரிய கொப்பறையில் விழுந்தது, தளதளவென்று மின்னியது.

குவான் — யூ ஒரு கைப்பிடியைத் திருப்பினதும் கலப்படமான அந்தக் கொதிக்கும் திரவம், கீழே உள்ள களிமண் மணி அச்சில் கடகடவென்று கொட்டி நிறைந்துவிடும்.

குவான் — யூ மறையை 'சடக்' கென்று திருப்பினான். அடுத்த கணம் பார்வையாளர் வரிசையில் இருந்து அம்பு போல ஒரு பெண் ஓடி வந்தாள்.

''கோ — ஆய்! ஐயோ! கோ — ஆய்!'' என்று கதறிக் கொண்டு அவளைப் பிடிக்கத் தாதி ஒரு நிமிஷம் பின்னால் ஓடிவந்தாள்.

ஆனால்,கண்மூடித்திறப்பதற்குள், கோ — ஆய் கொப்பறை அருகில் வந்து அதனுள் குதித்து விட்டாள்.

அடுத்த வினாடி, கொப்பறையின் அடித்தளம் ஒரு கதவு போலத் திறந்து கொதிக்கும் திரவக் குழம்பு, கீழே உள்ள மணி அச்சில் கடகடவென்று கொட்டியது.

''கோ — ஆய், கோ — ஆய்'' என்று கத்திக் கொண்டே பின்னால் ஓடி வந்த தாதிக் கிழவியின் கையில், உள்ளே குதிக்கும் கோ — ஆயின் ஒரு காலில்இருந்தகாலணிதான்சிக்கியது. அடுத்த கணம் அக்காலும் திரவத்துள் மறைந்து விட்டது.

'இந்தத் தடவையாவது வெற்றி பெறுவோமா?' என்ற கவலையோடிருந்த குவான் — யூ சட்டென்று திரும்பிப் பார்த்தான். உடனே, ''ஆ, என் அருமைமகளே, கோ — ஆயே!'' என்று அலறினான்; துடித்தான், தரையிலே விழுந்து புரண்டான்.

நீலநிறத் திரவக் குழம்பு ஒரு கணம் சிவப்பு நிறம் பெற்று, சுழன்று, பிறகு அடித்தளம் வழியாக அச்சில் விழுந்து, மணியாக உறைந்தது.

கோ— ஆய் கொதிக்கும் உலோகக் குழம்போடு கலந்து, மணி அச்சில் விழுந்து மறைந்து விட்டாள்!

அடுத்த கணம் வாத்தியங்களின் ஒலி எல்லாம் நின்று விட்டன; விசிறி பிடித்த பெண்களின் கைகள் எல்லாம் ஓய்ந்து நின்று விட்டன. சக்கரவர்த்தியே 'ஆ' என்று கூவிக் கொண்டு எழுந்து நின்று விட்டார். அவர் முகம் வெளுத்து விட்டது.

அதே சமயம் அச்சில் மணிக்கான உலோகங்கள் சரியான அளவில் இறுக ஆரம்பித்தன.

பல மணி நேரம் கழித்து, மற்ற கருமான்கள் களிமண் அச்சை உடைத்துக் கொண்டிருந்த போது குவான்— யூ உயிரற்றவன் போல உட்கார்ந்திருந்தான்.

அச்சைப் பிரித்து மணியை வெளியில் எடுத்த போதும் அவன் சலனமின்றியே உட்கார்ந்திருந்தான்.

ஆவலோடு ஓடி வந்து அதைப் பார்க்கவில்லை.

மணியைத் தண்ணீரில் போடும் போது தட்டிப் பார்த்தார்கள். 'கணீர்' என்று அது ஒலித்தது.

எந்தக் குறையுமில்லாத அற்புதமான ஒரு மணி உருவாகி விட்டது!

சக்கரவர்த்தியின் முகம் மலர்ந்தது. ஆனால், அதில் சோகமும் கலந்திருப்பது நன்றாகத் தெரிந்தது.

பெரிய பெரிய தாம்பாளங்களில் அரிய பரிசுகளைக் கொண்டு வந்து குவான்— யூவின் முன் வைத்தார்கள்.

ஆனால், அவன் அதில் எதையும் தொடவில்லை. ''மகளே — என் அருமை மகளே'' என்று அந்தக் கருமானின் உள்ளம் கதறிக் கொண்டிருந்தது.

மணியைக் கொண்டு போய்க் கோட்டைக் கோபுரத்தில் தொங்க விட்டார்கள்.

அப்போது அங்கே நின்று அதைப் பார்த்தவன்தான் — அப்புறம் குவான்— யூவை சீன தேசத்திலேயே யாரும் பார்க்கவில்லை.



எல்லாம் வந்தாச்சு

அள்ளி வைத்து மண் குவித்தால்
வீடு வந்தாச்சு!
புள்ளி வைத்துக் கோடு போட்டால்
கோலம் வந்தாச்சு!

பஞ்சுப் பாதம் தூக்கி வைத்தால்
ஆட்டம் வந்தாச்சு!
கொஞ்ச நேரம் கூவிப் பார்த்தால்
பாட்டு வந்தாச்சு!

அண்ணன் இல்லா நேரம் ஓட்டு,
சைக்கிள் வந்தாச்சு!
தண்ணீர் மேலே கை அடித்தால்,
நீச்சல் வந்தாச்சு!

தட்டிக் கொட்டி அடுக்கிப் பாரு
பொம்மை வந்தாச்சு!
குட்டிக் கையால் கோடு போடு
படமும் வந்தாச்சு!

துள்ளி ஓடு! ஆட்டம் ஆடு!
உடம்பு நேராச்சு!
பள்ளிப் பாடம் நிதம் படித்தால்
மார்க்கும் வந்தாச்சு!

சுப்ரபாலன்

(வி) சித்திரச் செய்திகள்

வழுக்கைத் தலைப் போட்டி!




நியூயார்க்கில் வழுக்கைத் தலையர்களுக்கான போட்டி நடைபெற்றது. மிகவும் அழகான வழுக்கைத் தலையை உடையவர் யார் என்பதுதான் போட்டி! ஏராளமான பேர்கள் கலந்து கொண்டார்கள். இதில் 'ஆன்டனி கலோன்' என்னும் வழுக்கைத் தலையருக்குத்தான் முதல் பரிசு கிடைத்தது. பரிசுத் தொகை ரூ. 3000!



ஏரோப்பிளேன் எறியும் போட்டி!


ஆஸ்திரேலியாவில் காகித ஏரோப்பிளேன் எறியும் போட்டி நடந்தது. பல்வேறு வடிவங்களில் காகிதத்தில் செய்யப்பட்ட ஏரோப்பிளேன்களை எறிந்தார்கள். இதில் 'ஜான் வின்செண்ட்' என்பவர் தடிப்பான காகிதத்தில் செய்யப்பட்ட ஏரோப்பிளேனை 100 மீட்டர் 2 செ. மீ. தூரத்திற்கு எறிந்து சாம்பியன் பட்டம் பெற்றார்.

பலூனில் பறந்தவர்!



ஸ்வீடனில் பிறந்த ஃபெர்லின்ட்ரான்ட் என்பவர், வெப்பக் காற்று நிரப்பப்பட்ட பெரிய பலூன் மூலம் தரையிலிருந்து 17½ கி. மீ. உயரம் வானத்தில் பறந்து உலக சாதனை புரிந்திருக்கிறார். இது நடந்த இடம் அமெரிக்காவில் லாரேடோ நகர். பலூனின் அடியில் 1½ மீட்டர் அகல நீளம் உள்ள அலுமினியக் கூட்டில் அவர் உட்கார்ந்திருந்தார். அவர் சென்ற ஆண்டு, பலூன் மூலம் அட்லாண்டிக் கடலைக் கடந்து சாதனை புரிந்தவர்!

நாய் வண்டிப் போட்டி!




பிரான்ஸில், டவ்லோஸ் நகரத்தில் நாய் வண்டிப் பந்தயங்கள் நடக்கின்றன! நாயால் இழுக்கப்படும் சிறிய வண்டியில் குழந்தைகள் மட்டுமல்ல; பெரியவர்களும் அமர்ந்து போட்டியில் கலந்து கொண்டு மகிழ்ச்சி அடைகிறார்கள்.

பாம்புகளுடன் வாழ்பவர்!




கர்நாடகா மாநிலத்தில், உடுப்பியில், ரவி அய்தால் என்பவர் ராஜநாகம் உட்பட 76 பாம்புகளுடன் ஓர் அறையில் வாழ்ந்து வருகிறார். ஒரு தடவை கூட அந்தப் பாம்புகள் அவரைக் கடித்ததில்லையாம்! எழுத்தராகப் பணிபுரியும் ரவிக்கு மாதச் சம்பளம் ரூ. 600/– தான். இதில் ரூ. 50–ஐ பாம்புகளுக்காகச் செலவிடுகிறார். பாம்புக்கடியைக் குணப்படுத்த ஆயுர் வேத முறையில் சிகிச்சையும் அளிக்கிறார் இவர்!

பூனைத் தீவு!



இந்து மகா சமுத்திரத்தில், மனிதர்களே இல்லாத ஒரு சிறு தீவில் பூனைகள் மட்டுமே இருக்கின்றன. ஆயிரக்கணக்கான பூனைகள்! நூறு ஆண்டுகளுக்கு முன், ஒரு கப்பல் அந்தப் பக்கத்தில் மூழ்கிய போது, அதிலிருந்து தப்பிய இரண்டு மூன்று பூனைகள்தாம் இப்படி ஆயிரக்கணக்கில் பெருகிவிட்டன! இந்தப் பூனைகளின் உணவு – மீன்கள்.

வெப்பத்தால் தண்ணீர்



சூரிய வெப்பத்தால் பயிர்கள் வாடிவிடுகின்றன அல்லவா? இதைத் தடுக்க சூரிய சக்தியையே பயன் படுத்துகிறார்கள் சோவியத் நாட்டில். எப்படி? சூரிய வெப்பம் ஆரம்பித்தவுடனே, சூரிய சக்தியால் பம்புகள் இயக்கப்பட்டு நிலத்திலிருந்து நீர் எடுக்கப்பட்டுப் பயிர்களுக்குப் பாய்கிறது!

–ஆழி–

உறுப்பினர் வரைந்த ஓவியங்கள்



— ஆர். பத்மபிரியா (11,154).



— டி. சுரேஷ்குமார் (7513).



— ஜி. கே. வேணி (21,963).



— கே. காவேரி (15,946).



— என். ரங்கராஜன்



மணியான மணி!

இதோ இங்குள்ள எனது அன்பு நாய், என் இணைபிரியா நண்பன் போன்றது. எப்போதும் என்னுடனேயே இருக்கும், பள்ளி செல்லும் நேரம் தவிர.

நான் எங்களது தோட்டத்திற்குச் செல்ல, காலையில் சைக்கிளை எடுத்தாலே போதும்; எங்கிருந்தாலும் ஓடி வந்துவிடும். ஓடி வருவதோடல்லாமல் மகிழ்ச்சியுடன் குதித்துக் கொண்டு தானாக 'ஜம்ப்' செய்து, சைக்கிள் ஸ்டாண்டில் அமர்ந்து கொண்டு, ஒரு சிறு பிள்ளையைப் போல் கால்களைக் கவனமாகச் சக்கரத்தில் படாமல் வைத்துக் கொள்ளும். நாக்கைத் தொங்கப் போட்டுக் கொண்டு அங்கும் இங்கும் வேடிக்கை பார்த்த வண்ணம் என்னுடனேயே வந்து, தோட்டத்தை அடைந்து சைக்கிளை நான் நிறுத்தியவுடன் கீழே குதித்து இறங்கிவிடும்.

மேலும், ஓர் அதிசயமான செய்தி என்னவென்றால், ஒரு சமயம் எங்கள் வீட்டுத் திண்ணையில் ஒரு மிகப் பெரிய பாம்பு விறகிற்குள் இருந்ததைப் பார்த்துவிட்டு இரவில் பயங்கரமாகக் குரைத்துக் கொண்டு விறகை வட்டமிடத் தொடங்கிவிட்டது. விவரமறியாத என் தந்தை வந்து அதை விரட்டிய போது, இது போகாமல் மீண்டும் சுற்றிச் சுற்றி வந்தது. பிறகு சந்தேகமடைந்த என் தந்தை, விறகைக் கலைத்துப் பார்த்தார். பாம்பு இருப்பதைப் பார்த்தவுடன், தடியின் உதவியால் அதை அடித்துக் கொன்றார்.

அன்று என் அன்பு நாயினால்தான் என் தாயாரின் உயிர் காப்பாற்றப்பட்டது. இல்லையென்றால் விறகு எடுக்கும் போது பாம்பு கடித்து ஆபத்தாகியிருக்கும். ஆதலால், எனது இந்தச் செல்ல நாயை எனது வீட்டில் குழந்தைகளில் ஒன்றாக நினைத்துத் தட்டில் உணவிட்டு நன்கு வளர்த்து வருகிறோம். இதன் பெயர் 'மணி' என்பதாகும். ''மணி, சீக்கிரம் வா'' என்றால், எங்கிருந்தாலும் பாய்ந்து வந்துவிடும்.

— கே. மல்லிகார்ச்சுனன் (16,154),
வெள்ளியணை.

பிருந்தாவனம்



பேசாதது ஏன்?

டாக்டர்: காயம் பட்ட இடம் வலிக்கு தான்னு கேட்டால், பேசாமல் இருக்கியே!

சிறுவன்: அது ஊமைக் காயம் டாக்டர்.

— எம். மணி (20,964).

கதர் = கௌரவம்



விடுதலைப்போரில்காந்திஜியுடன் சேர்ந்து பாடுபட்ட அலி சகோதரர்கள் ஒரு சமயம், தாங்களே நூற்றுத் தாங்களே நெய்த ஒரு துண்டை காந்திஜிக்குப் போர்த்தி, "இந்தக் கதரை ஏற்றுக்கொள்ளுங்கள்" என்றார்கள். உருது மொழியில் 'கதர்' என்றால் 'கௌரவம்' என்று பொருள். அன்று முதல் கதர் என்ற பெயர் வழங்கி வருகிறது.

— இராம. செந்தில்குமார் (3360), திருக்கடையூர்.

இத்தாலியின் சிறப்பு



இத்தாலியிலுள்ள ஒவ்வொரு நகருக்கும் ஒரு சிறப்பு உண்டு. வாட்டிகன்—மாதா கோயில், ரோம்—சரித்திரச் சின்னங்கள், டிவோலி—நீர் ஊற்றுக்கள், பிளாரன்ஸ்—அரண்மனைகள், வெனிஸ்—கடல் வீதிகள், ஜெனோவா—வான வீதிகள், பைசா—சாய்ந்த கோபுரம், மிலான்—தொழில் துறை, நேப்பிள்ஸ் — புகழ்பெற்ற வெசூவியஸ் மலை.

— செ. தியாகராஜன் (3032), திருக்கடையூர்.

5 திருமணங்கள்

காந்திஜிக்குத் திருமணம் நடந்த போது, அதே வீட்டில், அதே நாளில், அதே முகூர்த்தத்தில் அவருடைய



அண்ணனுக்கும், சித்தப்பா மகனுக்கும் சேர்த்தே திருமணத்தை நடத்தினார்கள். இதனால் இரண்டு வித நன்மைகள்: சிக்கனம்; அத்துடன் சிரமமும் குறைகிறதல்லவா?

— மா. தா. சந்திரகுமார் (21,303), சென்னை 106.



தலையிலே இல்லையாம்!

மகள்: அம்மா, என் தலையிலே ஒன்றுமே இல்லையாம். டீச்சரம்மா திட்டறாங்க.

அம்மா: அதான் தினமும் ஒரு முழம் பூ வாங்கி உன் தலையிலே வைத்து அனுப்புகிறேனே, அதை உன் டீச்சர் பார்க்கலியா?

— கொடிநகர் மு. பஜ்ருதீன் (20,924), கொடிக்கால்பாளையம்.

காலிலே மஞ்சள்!

ஒரு சமயம் எழுத்து மன்னர் கல்கி அவர்கள் உடல்நலமில்லாதிருந்தார். அப்போது காலிலே மஞ்சள் பத்து போட்டுக் கொண்டிருந்தார். அச்சமயம், பல நாவல்கள் எழுதிப் புகழ் பெற்ற வை. மு. கோதைநாயகி அம்மாள் அவரைக் காண வந்திருந்தார். "இது என்ன காலிலே மஞ்சள் பத்து?" என்று அவர் கேட்டார்.

"இப்பொழுதுதான் பெரும்பா



லான பெண்கள் மஞ்சள் பூசிக் கொள்வதில்லையே, அதனால்தான் நான் காலில் மஞ்சள் பூசி இருக்கிறேன்" என்று பதிலளித்தார் கல்கி!

— கோவி. மகுடேசுவரன் (21,549).

மூவகை உழவர்

1. ஏர் உழவர் — நிலத்தை ஏர் கொண்டு உழுது பயிர் விளைவிப்பவர்.

2. சொல் ஏர் உழவர் — எழுதுகோலாகிய ஏரால் தாள் எனும் நிலத்தை உழுது எழுத்தோவியம் அளிப்பவர்.

3. வில் ஏர் உழவர் — வில்லாகிய ஏரால் பகைவரது மார்பை உழுது வீரமாகிய பயிரை விளைவிப்பவர்.

— க. காவேரி (15,946), நெய்வேலி — 1.





எத்தனை பேர்?


ஒரு குடும்பத்தின் மொத்த உறுப்பினர்கள் = 20.

மொத்தம் சுட்ட தோசைகள் = 20.

ஒரு குழந்தைக்கு ½ தோசை வீதமும் ஓர் ஆணுக்கு 3 தோசைகள் வீதமும் ஒரு பெண்ணுக்கு 2 தோசைகள் வீதமும் பகிர்ந்து 20 பேருக்கும் 20 தோசைகளைத் தரவேண்டும். அப்படி என்றால், ஆண்கள், பெண்கள், குழந்தைகள், எத்தனை பேர்?

விடை: ஆண் – 1, பெண்கள் – 5, குழந்தைகள் – 14.

— பொ. கண்ணன் (18,073),
நாமக்கல் – 2.



பிறமொழிப் பாடல்

தமிழாசிரியர்: யாருக்காவது பிறமொழிப் பாடல் தெரியுமா?


ஒரு மாணவன்: எனக்கு வங்காள மொழிப் பாடல் தெரியும், சார்.

தமிழாசிரியர்: எங்கே பாடு, கேட்கலாம்.

மாணவன்: ஜன கண மன அதி நாயக ஜயஹே......

— பே. பாலரிஷி (13,015),
எட்டயாபுரம்.

முதலும் முடிவும்




ஒரு சொல்லின் முதல் வரும் எழுத்தே முடிவிலும் வருகிறது. அப்படிப்பட்ட சொற்கள்:

திருப்பதி, சிவகாசி, குரங்கு, பாப்பா, கிராக்கி.

— ப. தேவேந்திரகுமார் (1418),
சென்னை – 7.

பதினாறும் பெற்று...

பதினாறும் பெற்றுப் பெருவாழ்வு வாழ்க' என்று பெரியவர்கள் வாழ்த்துவார்கள். 'பதினாறும் பெற்று' என்பதைச் சிலர் 'பதினாறு பிள்ளைகள் பெற்று' என்று தவறாகப் பொருள் கொள்கிறார்கள். ஆனால், பதினாறு என்பது பேறுகளைக் குறிக்கிறது. அவையாவன:



1. புகழ், 2. கல்வி, 3. ஆற்றல், 4. வெற்றி, 5. நன்மக்கள், 6. பொன், 7. நெல், 8. அறிவு, 9. பெருமை, 10. ஆயுள், 11. நல்லூழ், 12. இளமை, 13. பொருள், 14. துணிவு, 15. நோயின்மை, 16. நுகர்ச்சி.

— எஸ். ஜமீலா (18,181),
குன்னூர் – 2.

குணமானால்தான் பணம்!

சீனாவிலே ஒரு பழக்கம் இருந்ததாம். ஒரு நோயாளி டாக்டரிடம் போனால், அவர் முன் பணம் எதுவும் வாங்க மாட்டாராம். நோய் குணமாகும் வரை எதுவும் கொடுக்க வேண்டாமாம். நோய் முற்றிலும் குண




மான பிறகே டாக்டருக்குப் பணம் தருவார்களாம். ஒவ்வொரு நோய்க்கும், எவ்வளவு பணம் தரவேண்டும் என்பதும் டாக்டர்கள் கூடி முன்பே முடிவு செய்து வைத்திருப்பார்களாம். இப்படி நம் நாட்டிலும் நடந்தால், எவ்வளவு நன்றாக இருக்கும்!

— எம். நாச்சியப்பன் (20,679),
கோவில்பட்டி.


படிப்பவர் எண்ணிக்கை

தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம் அச்சிடும் பாடநூல்களின் எண்ணிக்கை:



தமிழ்நாட்டில் தொடர்ந்து படிப்பவர்களின் எண்ணிக்கை குறைந்து வருவதாக, தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம் தெரிவிக்கிறது.

—ஏஎல். பழநியப்பன் (3035),
சென்னை — 40.



சீனச் சிறுவர் செய்தி

உலகிலேயே இன்று அதிகமாக விற்பனையாகும் சிறுவர் பத்திரிகை எது தெரியுமா? 'சீனச் சிறுவர் செய்தி' என்ற பத்திரிகைதான். இந்தப் பத்திரிகையின் விற்பனை ஒரு கோடியே இருபத்தைந்து லட்சம் பிரதிகள்!

— இரா. உமாசத்தியன் (1089),
நாகர்கோவில் — 1.



பச்சைக் காய்கறி

அம்மா: பச்சைக் காய்கறிகளை உணவில் சேர்த்தால் நல்லதப்பா.

மகன்: அப்படியானால், நீ ஏனம்மா சிவப்பாயிருக்கிற கேரட்டையும் பீட்ரூட்டையும் சேர்க்கிறாய்.

—பி. மோகனாம்பாள் (20,436),
கடலூர்.

கேள்விகள்; சொல்லுகிறோம்

* 'கொரில்லாப் போர்' என்கிறார்களே, அப்படியென்றால்...?

— சி. ஞானபானு, திருத்தணி.

கும்பல் கும்பலாகச் சேர்ந்து கொண்டு எதிரிகளை மறைந்திருந்து தாக்கித் தொல்லை கொடுப்பதுதான் கொரில்லாப் போர் முறை. அவர்களிடம் எந்த விதமான ஒழுங்கோ கட்டுப்பாடோ இருக்காது.

* பெரியவர்களைப் பற்றிக் குறிப்பிடும் போது 'திரு. நடேசன்' அல்லது 'திரு. மாணிக்கம்' என்கிறோம். ஆனால், தமிழ்த் தென்றல் திரு. வி. கலியாணசுந்தர முதலியார், அவருடைய பெயருக்கு முன்னால், அவரே 'திரு' போட்டுக் கொண்டிருக்கிறாரே, அது எப்படி?

— க. நமசிவாயம், மதுரை — 2.

அடடே, 'திரு' என்று மரியாதையைக் குறிப்பதற்காகவா அவர் போட்டுக் கொண்டார்? இல்லவே இல்லை. அவர் பிறந்த ஊராகிய திருவாரூரைக் குறிக்கவே முதலில் 'திரு' என்றும், தம் தந்தையார் பெயராகிய விருத்தாசல முதலியார் என்பதைக் குறிக்கவே 'வி' என்றும் தம் பெயருக்கு முன்னால் போட்டுக் கொண்டார்.

* ஓவியர் ஆழியின் வீட்டு விலாசத்தையும், அவரது புகைப்படத்தையும் வெளியிடுவீர்களா?

— டி. ஜெயமுருகன், சாப்டூர்.

இதோ அவரது புகைப்படம். அவரது



முகவரி:

ஓவியர் ஆழி வே. ராமசாமி (ஓவியர். ஆழி)
அகரக்கடம்பனூர்,
ஆழியூர் அஞ்சல் — 611 117,
தஞ்சாவூர் மாவட்டம்.

* பூனை குட்டி போட்டு விட்டு, சிறிது நேரம் கழித்து குட்டிகளில் சிலவற்றைச் சாப்பிட்டு விடுகிறதே, என்ன காரணம்?

— டி. மகேஸ்வரன், வீரராக்கியம்.



தாய்ப் பூனை குட்டிகளிடம் மிகவும் பிரியமாக இருக்கும். அது தன் குட்டிகளைச் சாப்பிடாது. ஆண் பூனைதான், பிறந்த குட்டிகளில் ஒன்றிரண்டைக் கடித்துத் தின்று விடும்.

* கடிதம் எழுதும் போது முகவரியின் மேல் பகுதியில் QMS என்று சிலர் குறிப்பிடுகிறார்களே, ஏன்?

— என். பி. மாசிலாமணி, நாட்டான் வலசு.

Quick Mall Service என்பதன் சுருக்கமே **Q.M.S.** விரைவில் கடிதம் போய்ச் சேர வேண்டும் என்பதற்காக அவ்வாறு குறிப்பிடுகிறார்கள்.

* 'கர்ண பரம்பரைக் கதை' என்கிறார்களே, அப்படி என்றால் என்ன?

— கோ. இளங்குமரன், இராசபாளையம்.

'கர்ணம்' என்றால் காது. புத்தகம்,

பத்திரிகை இல்லாத காலத்தில் ஒருவர், தான் காதால் கேட்ட கதைகளைப் பிறருக்குச் சொல்லுவார். அவரிடம் காதால் கதை கேட்டவர்கள், தாங்கள் கேட்ட கதைகளை மற்றவர்களுக்குச் சொல்லுவார்கள். இப்படிப் பரம்பரை பரம்பரையாகக் காது வழியாகக் கேட்ட கதைகளைத்தான் 'கர்ண பரம்பரைக் கதைகள்' என்கிறார்கள்.

* **தீயவை பார்க்காதே, தீயவை பேசாதே, தீயவை கேட்காதே.... சரி, 'தீயவை நினைக்காதே!' என்று சொல்லவில்லையே, ஏன்?**

— **மு. அப்பாஸ் மந்திரி, போடிநாயக்கனூர்.**

தீயவற்றைப் பார்க்காமலும், பேசாமலும், கேட்காமலும் இருந்தாலே தீய நினைப்புத் தோன்றாது.

* **'மந்தி' என்றால், அது பெண் குரங்கைத்தான் குறிக்குமாம். என் நண்பன் சொல்கிறான். நீங்கள் என்ன சொல்லுகிறீர்கள்?**

— **என். வேதாசலம், உளுந்தூர்ப்பேட்டை.**

நண்பன் சொல்வது சரிதான். பண்டைத் தமிழ் இலக்கியங்களில் பெண் குரங்கை 'மந்தி' என்றே குறிப்பிட்டிருக்கிறார்கள். ஆனால், இப்போதெல்லாம் ஆண், பெண் இரண்டையுமே 'மந்தி' என்று சொல்வது வழக்கமாகி விட்டது.

* **மூக்குக் கண்ணாடியை எத்தனை வருஷங்களாக உபயோகப்படுத்துகிறார்கள் என்று சொல்ல முடியுமா?**

— **என். லீலாவதி, மதுரை — 2.**

சீனர்கள் மூக்குக் கண்ணாடியை 2000 ஆண்டுகளுக்கு முன்பே அணிந்திருந்தார்களாம். கி. பி. 1275—இல் சீனர்களில் சிலர் மூக்குக் கண்ணாடி அணிந்திருந்ததைத் தாம் பார்த்ததாக மார்க்கோ போலோ என்ற ஐரோப்பிய யாத்திரிகர் குறிப்பிட்டிருக்கிறார்.

* **'நாகார்ச்சுன சாகர் அணைக்கட்டு' என்று பெயர் வரக் காரணம் என்ன?**

— **கே. எம். ஜான் முஹம்மது, இளையான்குடி.**

புத்தமத போதகர்களில் சிறந்து விளங்கியவர் நாகார்ச்சுனர் என்பவர். அவருடைய பெயரால் ஆந்திராவில் கிருஷ்ணா நதிக் கரையில் ஒரு கிராமம் தோன்றியது. அதன் பெயர் நாகார்ச்சுன கொண்டா. கிருஷ்ணா ஆற்றின் குறுக்காகக் கட்டப் பெற்ற அணைக்கும் அவர் பெயரையே வைத்திருக்கிறார்கள்.

* **பொன்னாங்கண்ணிக் கீரையை 40 நாட்கள் தொடர்ந்து சாப்பிட்டால், வானத்தில் இருக்கும் நட்சத்திரங்கள் பகலிலேயே நம் கண்ணுக்குப் புலப்படும் என்று சொல்கிறார்களே, அது எப்படி?**

— **செ. இராசேந்திரன், தேன்மலைப்பட்டி.**

தம்பி, இதை நம்ப முடியவில்லையே. கீரை வகைகளிலே பொன்னாங்கண்ணி மிகச் சிறந்தது. புரோட்டீனும் இரும்புச் சத்தும் அதில் இருப்பதால், கண்ணுக்கு மிகவும் நல்லது. அதன் தைலத்தைத் தேய்த்துத் தலை முழுகி வந்தால், கண் நோய்கள் தீரும் என்பதெல்லாம் உண்மை. பகலிலே நட்சத்திரம் காண முடியும் என்று சொல்பவர், தம்முடைய கற்பனைக் கண் கொண்டு பார்த்திருப்பாரோ, என்னவோ!

* **வெள்ளை யானை இருக்கிறது என்கிறார்களே, உண்மையா? அது எந்த நாட்டில் இருக்கிறது?**

— **டி. சங்கரன், மயிலாடுதுறை.**





உண்மைதான். ஆனால், வெள்ளை யானையை மிகவும் அபூர்வமாகவே காணலாம். அதன் தோலிலே எந்த விதமான நிறப்பொருளும் (pigment) இல்லாமல் வெண்மையாக இருக்கும். மனிதர்களில் கூட இப்படி வெண் பிறவியாகச் சிலர் இருப்பார்கள். அவர்களை நாம் அபூர்வமாகவே காணலாம்.

* **ஜவஹர்லால் நேரு ஏதோ ஒரு மலையிலிருந்து விழுந்து விட்டாராமே, உண்மையா? எப்படி?**

— **நா. வித்யா லெட்சுமி, தியாகராஜபுரம்.**

உண்மைதான். நார்வே நாட்டில் சுற்றுப் பயணம் செய்த போது, ஜவஹரும் அவருடைய ஆங்கில நண்பர் ஒருவரும் ஒரு மலையின் மீது ஏறினார்கள். அங்கிருந்த ஓர் ஆற்றில் குளிக்கச் சென்றார்கள். பனி படர்ந்த அந்த ஆற்றில் ஜவஹர் காலை வைத்ததும், கால் தவறி அவர் ஆற்றில் விழுந்து விட்டார். நல்ல காலம். அவருடைய நண்பர் தம் காலை நீட்டி, ஜவஹரைப் பிடித்துக் கொள்ளச் சொல்லி, அவரைக் கரை சேர்த்துக் காப்பாற்றி விட்டார்!


பிறருக்கு உதவு..
ஓவியர் - எஸ்.கே.ராமானுஜம் (ராஜு)
அமேசான் காட்டில் ஒட்டைச்சிவிங்கி ஒன்று மிகுந்த கர்வத்துடன் தனிமையில் வாழ்ந்து வந்தது....
ஒரு சமயம், மழையின்றி அக்காட்டில் புற்களும், செடிகளும் காய்ந்து விட்டன. அதனால், மான்களும் முயல்களும் பசியில் வாடின
உயரமான மரங்களில் மட்டும் ஒரு சில இலைகளை மான்கள் கண்டு விட்டன. உடனே அவைகள் உயரமான ஒட்டைச்சிவிங்கியின் உதவியை நாடின.
அதற்கு ஒட்டைச்சிவிங்கி மிகவும் கர்வத்துடன் சொன்னது
நான் உயிர்வாழ எனக்கு மட்டும்தான் இந்த மரங்களின் இலைகள் போதுமானவை...
பாவம்! எல்லா மான்களும் அக்காட்டை விட்டு ஓடிவிட்டன.
ஹா..ஹா..ஹா! எனக்கு எப்படியும் ஆகாரம் கிடைத்துவிடும்..
அப்பொழுது நொண்டி வரிக்குதிரை பசியினால் அழுது கொண்டே வந்தது
என்னால் பசி தாங்க.. முடியவில்லை. எனக்கு.. நீ.. தான் உதவ வேண்டும்
"நான் உனக்கு ஒரு இலை கூடத்தர முடியாது" என்று ஈவு, இரக்கமின்றி ஒட்டைச்சிவிங்கி கூறிவிட்டது. இதனால் அக்காட்டிலுள்ள வரிக்குதிரைகளும் வெளிக் காடுகளுக்கு ஓடிவிட்டன.


"இனி இக்காட்டில் இலைகளைத்தின்னும் எந்த மிருகங்களும் என்னை விட உயரமாக இருக்க முடியாது" என்று ஒட்டைச்சிவிங்கி கூறிக்கொண்டே மிகவும் கர்வத்துடன் கம்பீரமாக நடந்தது.
அந்தக்காட்டிலுள்ள சிங்கங்கள் மிகுந்த பசியில் மான்களைத் தேடின.
இதனையறிந்த ஒட்டைச்சிவிங்கி புதரில் பதுங்க எண்ணியது. ஆனால், அது மிக உயரமாக இருப்பதால் காய்ந்த புதர்களில் மறைந்து கொள்ள முடியாமல் தவித்தது.
மான்களும், வரிக்குதிரைகளும் இக்காட்டை விட்டுச் சென்றதால் எல்லாச் சிங்கங்களும் அந்த ஒட்டைச்சிவிங்கியை விரட்டித் துரத்தின...
ஒட்டைச்சிவிங்கி தான் செய்த தவற்றை உணர்ந்தது.
நான் பிறருக்கு உதவவில்லை ஆனால் என் உடல் பலருக்கு... உதவுகின்றதே!

சார் தபால்

மின் மினியா? கண் மணியா?.....

* 'கொடியும் மலரும்' கதையில் தேசியக் கொடியில் அசோகச் சக்கரத்திற்குப் பதில் ராட்டை வரையப்பட்டிருக்கிறதே! சரியா?

— நாதவிழி பெருமாள், (20,718), திருநெல்வேலி.

(இக் கதை நடந்த காலம், வெள்ளையர் இந்தியாவை ஆண்டு வந்த காலமாதலால் ராட்டை வரையப்பட்டிருக்கிறது.

— ஆசிரியர்)

* 'கொடியும் மலரும்' கதையில் வரும் பாரத தேவியைப் போல் ஒவ்வொரு வீட்டிலும் இருந்தால், நாடு நலம் பெறும். இதை எழுதிய கூத்தபிரான் அவர்களுக்கு மிக்க நன்றி.

— இரா. கவிதா, மணவாளநல்லூர்.

* கண்ணதாசன் குழந்தைப் பருவக் கட்டுரையில் சட்டிச் சாமியார் படத்தில் நீள அங்கி அணிந்துள்ளார். இடையில் ஒரு துண்டல்லவோ இருக்க வேண்டும்!

— ரா. அ. பத்மநாபன், விழுப்புரம்.

* கவியரசர். கண்ணதாசனின் குழந்தைப் பருவத்தை கவிஞரின் உடனிருந்து பழகிய இராம. கண்ணப்பன் அவர்களே தொகுத்தளித்தது அருமையாக இருந்தது.

— ஒ. எஸ். பாலகிருஷ்ணன், திருப்பரங்குன்றம்.

* திரு. கண்ணதாசன் மறைந்து விட்டாலும், இராம. கண்ணப்பர் என்பவர் மூலம் அவரின் குழந்தைப் பருவத்தை அளித்தது அருமை.

— மழலைப்பிரியன் (21,412), வந்தவாசி.

* அரங்கத்தில் கண்ட அதிசய உலகம் என்பதை விட 'கோகுலத்தில் கண்ட அதிசய உலகம்' என்று கூறலாம். அந்த அதிசய உலகத்தைத் தந்த பி. எஸ். மணி அவர்களுக்கு நன்றி.

— ப. கணேஷ் (14,478), சங்ககிரி மேற்கு.

* மின்மினிக் கதைகளா அவை? யாவும் கண்மணிக் கதைகள்.

— பி. கவியமூர்த்தி, தென்பாதி.

* இதுவரை தாங்கள் வெளியிட்ட 40 பழமொழிப் புதிர்களையும் ஒன்றாகத் தொகுத்து வருகின்றேன். தொடர்ந்து வெளியிடுங்கள்.

— எம். ஏ. சுப்ரமணியன், முருகன் புதூர், கோபி.

* தேசிய ஒற்றுமை, சமய ஒற்றுமை — இவற்றை வளர்க்கும் வகையில் இருந்தது 'வீரச் சீக்கியரின் அன்புக் குருநானக்' வண்ணப்படக் கதை. இது போன்ற கதைகளைத் தொடர்ந்து வெளியிடுங்கள்.

— செ. சரவணன், திருவாரூர் — 2.

* நேர்மையாக நடந்து கொண்டால், தெய்வம் நமக்குத் துணை நிற்கும் என்ற உயர்ந்த கருத்தை 'ஆண்டவன் அனுப்பினார்' கதை உணர்த்துகிறது.

— என். சந்திரன் (4785), பாவட்டக்குடி.

* 'பெரிய இல்லம், சிறிய உள்ளம்' என்ற கதை, நிலையான புத்தியும், எவர்க்கும் உதவ வேண்டும் என்ற மனப்பான்மையும் அவசியம் என்பதை உணர்த்துகிறது.

— வி. சுந்தர ராமன், குத்தாலம் — 609 801.

* அன்றாடம் வாழ்க்கைக்குத் தேவையான கருத்துக்களை வெளியிட்டுக் கொண்டிருக்கும் கோகுலத்தை 'சிறிய இல்லம்; பெரிய உள்ளம்' என்று கூறுவதில் பெருமைப்படுகின்றோம்.

— ஏ. பி. லோகநாதன், கோபி.

* டாக்டர். கு. கணேசன் அவர்களின் 'தண்ணீரில் மூழ்கியவருக்கு முதலுதவி' கட்டுரை மிகவும் பயனுள்ளதாய் அமைந்திருந்தது. பாராட்டுக்கள்.

— க. மகேஷ், தியாக துர்க்கம்.

* 'ஒரு நாக்கின் கதை', நாக்கின் சிறப்பினை, பெருமையினை, அதன் அவசியத்தை அற்புதமாய்ப் படம் பிடித்துக் காட்டியிருக்கிறது.

— எஸ். மணிமாறன், திருவண்ணாமலை.

* 'அன்பு செய்த அற்புதம்' சிறுகதை அருமையிலும் அருமை.

— ஆர். கார்த்திகேயன், மயிலாடுதுறை.


* 'அன்பு செய்த அற்புதம்' கதையில் வரும் பிரடெரிக் என்னும் தவளையின் செயல் என்னை மிகவும் கவர்ந்தது.

— ஜோ. கண்ணன், மயிலாடுதுறை.

* 'இப்பிலி ராஜாவின் இலிம்பிக்ஸ்' கதையை என் வீட்டில் உள்ள அனைவரும் படித்து வயிறு வலிக்கச் சிரித்து மகிழ்ந்தோம்.

— இ. இரமேஷ் (10,667), கவுண்டம் பாளையம்.

தொண்டைச் சதை வளர்ச்சி



டாக்டர். கு. கணேசன்

உங்களுக்கு ராம்குமாரைத் தெரியாதில்லையா? வாருங்கள், அறிமுகப்படுத்துகிறேன்.

இவன்தான் ராம்குமார். பத்தாம் வகுப்பிலிருந்து பிளஸ் ஒன் செல்லும் மாணவன். விடுதியில் தங்கிப் படிக்கிறான். நன்றாகப் படிப்பான். நடந்து முடிந்த தேர்வில் மாவட்டத்தில் முதல் மாணவனாகவும், மாநிலத்தில் மூன்றாவது மாணவனாகவும் வந்திருக்கிறான். ராம்குமார் படிப்பில் மட்டுமன்றி, பொது அறிவிலும் மிகவும் கெட்டிக்காரன். அறிவியல் செய்திகளை அதிகமாகத் தெரிந்து கொள்ள வேண்டும் என்று ஆவல் கொள்வான். ஓய்வு நேரங்களில் என்னைச் சந்திக்க வருவான். இன்றும் வந்திருக்கிறான் —

ராம்குமார்: வணக்கம், டாக்டர்! 'கோகுலம்' வாசகர்களுக்கு என்னை அறிமுகப்படுத்தியதற்கு நன்றி.


நான்: நீ மாவட்டத்திலேயே முதல் மாணவனாக வந்ததற்கு 'கோகுலம்' வாசகர் சார்பில் என்னுடைய வாழ்த்துக்கள்! சரி, வந்த விஷயத்தைச் சொல்!

ராம்குமார்: ஊரிலிருந்து அப்பா கடிதம் எழுதியிருக்கிறார். அது விஷயமாக உங்களிடம் பேசிவிட்டுப் போகலாமென்று வந்தேன், டாக்டர்.

நான்: என்ன விஷயம்? அப்பா என்ன எழுதியிருக்கிறார் கடிதத்தில்?

ராம்குமார்: ஊரில் என் தங்கைக்கு உடல் நலம் இல்லையாம். அங்குள்ள டாக்டரிடம் அவளைக் காண்பிக்க போது அவர் தொண்டையில் ஏதோ சதை வளர்ந்திருக்கிறது என்றும், அதை உடனே ஆபரேஷன் செய்து எடுத்துவிட வேண்டுமென்றும் சொன்னாராம். கடிதத்தைப் படித்ததும் கவலை வந்துவிட்டது, டாக்டர். அதனால்தான் உங்களிடம் அது விஷயமாகத் தெளிவாகத் தெரிந்து கொள்ளலாம் என்று வந்தேன்.

நான்: கவலைப்படாதே, ராம்குமார்! நீ சொல்வதைப் பார்த்தால், சாதாரணமாக குழந்தைகளுக்கும், சிறுவர்களுக்கும் வரக்கூடிய 'தொண்டைச் சதை வளர்ச்சி' நோய்தான் உன் தங்கைக்கும் வந்திருக்கும் என நினைக்கிறேன். அதற்கு நீ பயப்படத் தேவையில்லை!



அந்தாதிப் பெயர்

"என்னது... உங்க வீட்டிலே உள்ள பேர் எல்லாம் அந்தாதி முறைப்படி இருக்குமா.... எப்படி ...?"

"ஆமாம்... எங்கப்பா பேர் சிவசாமி... என் பெயர் சாமிக்கண்ணு.... என் தம்பி பெயர் கண்ணுச்சாமி....!"

— ஏ. ஆர். வீரராகவன்.

ராம்குமார்: தொண்டைச் சதை வளர்ச்சி நோய் என்றால் என்ன, டாக்டர்? அதுபற்றி எனக்கும் கொஞ்சம் சொல்லுங்களேன்...

நான்: சரி, சொல்கிறேன், கேள். பொதுவாக நம் அனைவருக்குமே தொண்டை ஆரம்பமாகும் இடத்தில் இரண்டு பக்கங்களிலும் 'டான்சில்' (Tonsil) என்று சொல்லக் கூடிய தொண்டைச் சதை சாதாரணமாக இருக்கும். இது சிறுவர்களுக்கும் . குழந்தைகளுக்கும் சில காரணங்களினால் பெரிதாக வளர்ந்து தொந்தரவு கொடுக்கும். இதைத்தான் 'தொண்டைச் சதை வளர்ச்சி நோய்' என்று சொல்வார்கள். இதையே ஆங்கிலத்தில் 'டான்சிலைட்டிஸ்' (Tonsillitis) என்று கூறுவார்கள்.

ராம்குமார்: இந்நோய் எதனால் வருகிறது, டாக்டர்?

நான்: ஏதேனும் ஒரு வகையான பாக்டீரியா அல்லது வைரஸ் தொண்டைச் சதையில் தொற்றிக் கொண்டு நோய்த் தொற்றை உண்டாக்கினால், அச்சதை வளர ஆரம்பிக்கும். பிறகு சதைக்குள் சீழ் பிடிக்கும். பல தொந்தரவுகள் பின் தொடரும்...

ராம்குமார்: அவை எவை என்பதையும் எனக்குக் கூறுங்கள், டாக்டர்.

நான்: சிறுவர்களுக்குத் திடீரென்று அதிகமாகக் காய்ச்சல் வரும். முதலில் தொண்டையில் லேசாக வலி ஆரம்பிக்கும். பிறகு, உணவு விழுங்க இயலாத அளவுக்கு தொண்டை வலி அதிகமாகும். காது வலிக்கும். கழுத்தில் நெறிக் கட்டிகள் தோன்றும். இருமல் வரும்; வாந்தி வரும். தொண்டை வலியினால் சிறுவர்கள் சாப்பிடக் கஷ்டப்படுவார்கள். சிலருக்கு வாய் துர்நாற்றம் வீசும். தொண்டைச் சதை மிகப் பெரிதாக வளர்ந்து விட்டால், மூச்சு விடுவதில்கூட சிரமம் ஏற்படும்.

ராம்குமார்: சரி டாக்டர், நீங்கள் இது தொண்டைச் சதை வளர்ச்சி நோய்தான் என்று எப்படி உறுதிப் படுத்துகிறீர்கள்? அதையும் நான் தெரிந்து கொள்ளலாமா?

நான்: ஓ! எஸ். தாராளமாகத் தெரிந்து கொள். இந்நோய் வந்திருக்கும் என்று சந்தேகிக்கும் சிறுவர்களை வாயைத் திறக்கச் சொல்லி, டார்ச் லைட் வெளிச்சத்தில் தொண்டையைப் பரிசோதிப்போம். தொண்டையில் இரு பக்கங்களிலும் சதைகள் உருண்டையாக வீங்கிக் காணப்பட்டாலும், அவை ஆப்பிள் நிறத்தில் சிவப்பாகக் காணப்பட்டாலும், அல்லது தொண்டைச் சதையின் மேல் வெள்ளையும் மஞ்சளும் கலந்த நிறத்தில் சீழ் போன்று காணப்பட்டாலும், நாங்கள் உடனே அக்குழந்தைக்கு 'தொண்டைச் சதை வளர்ச்சி நோய்' வந்திருக்கிறது என்று உறுதி செய்வோம். எங்கள் நோய் கணிப்புக்குக் குழந்தையிடம் காணப்படும் நோய் அறிகுறிகளும் உதவி செய்யும்.

ராம்குமார்: இந்நோய்க்கு என்ன வைத்தியம் செய்வீர்கள், டாக்டர்? ஆபரேஷன்தான் வைத்தியமா?

நான்: இல்லை ராம்குமார்! இந்நோயால் பாதிக்கப்பட்ட அனைவருக்குமே ஆபரேஷன் செய்வதில்லை. முதலில் பாதிக்கப்பட்ட நபருக்கு சுமார் ஒரு வாரம் வரை முழு ஓய்வு எடுக்கச் சொல்வோம். பள்ளி செல்லும் சிறுவர்களை வீட்டில் தனிமைப் படுத்திய பின்பு, எங்கள் வைத்திய முறைகளை ஆரம்பிப்போம். அதாவது, எவ்வகைக் கிருமிகள் நோயாளியைப் பாதிக்கின்றன என்று கண்டறிந்து அதற்கேற்ப கிருமி –

கொல்லி மருந்துகளை (Antibiotics) உட்கொள்ளச்சொல்வோம். நோயின் வீரியத்தைக் கணித்து, ஊசிகள் மூலமும் மருந்துகளைச் செலுத்து வோம். காய்ச்சலைக் குறைப்பதற் கும், தொண்டை வலியைக் குறைப் பதற்கும் வலி நிவாரணி மாத்திரை களைத் தருவோம். சுமார் ஒரு மாதத் திற்குத் திரவ உணவுகளையே உட் கொள்ளச் சொல்வோம். அதோடு 200 மி. லி. வெதுவெதுப்பான குடி நீரில் ஒரு தேக்கரண்டி சமையல் உப் பைப் போட்டுக் கலக்கி, அதனால் தினமும் ஆறு வேளை வாயைக் கொப் புளித்துத் தொண்டையைச் சுத்தம் செய்யச் சொல்வோம். இதனால் நோய் மிக விரைவில் குணமாகும்.

ராம்குமார்: அப்படியென்றால் யாருக்குத்தான் ஆபரேஷன் செய்வீர் கள், டாக்டர்?

நான்: மேற்சொன்ன முறைகளுக் குக் கட்டுப்படாமல் மீண்டும் மீண்டும் தொண்டையில் சதை வளர்ந்தால், அல்லது சதையின் வளர்ச்சி அளவுக் கதிகமாக இருந்தால் அதை ஆப ரேஷன் மூலம் அகற்றி விடுவது நல்லது. இம்மாதிரி நோயாளிக ளுக்கே நாங்கள் ஆபரேஷன் செய்வ துண்டு.

ராம்குமார்: இந்த ஆபரேஷன் ஆபத்தானதா, டாக்டர்?

நான்: இல்லை, ராம்குமார். தொண்டைச் சதையை அகற்றும் இந்த ஆபரேஷன் மிக எளிதானது. எந்தவித ஆபத்தும் இல்லாதது; பாதிப்பும் இருக்காது.

ராம்குமார்: இந்நோயைத் தவிர்க்க வழி முறைகள் இல்லையா, டாக்டர்?

நான்: இருக்கிறதே!

ராம்குமார்: அதைப் பற்றியும் எனக் குச் சொல்லுங்கள், டாக்டர். எனக்குத் தொண்டையில் சதை வளராமல் பார்த்துக் கொள்கிறேன்.

நான்: ராம்குமார்! தொண்டை யில் சதை வளர்வதைத் தடுக்க நீங்கள் செய்ய வேண்டிய முதல் காரியம், வாயை அடிக்கடி கழுவிச் சுத்தமாக வைத்துக் கொள்வதுதான். அதற்குப் பின்பு ஐஸ், ஐஸ்கிரீம், ரோஸ் மில்க் போன்ற குளிர்ச்சியான பானங்களை யும், பண்டங்களையும் அடிக்கடி சாப் பிடக் கூடாது. அதிலும் சில பள்ளிக் குழந்தைகள் ஐஸ் சாப்பிடும் போது என்ன செய்வார்களென்றால், தான் சாப்பிட்ட எச்சில் ஐஸைத் தன் நண் பர்களுக்கும் சாப்பிடக் கொடுப்பார் கள். இது மிகவும் தவறான செயல். இம்மாதிரிச் செய்வதால் ஒருவரிட மிருந்து மற்றொருவருக்கு நோய்க் கிருமிகள் தொற்றிக் கொள்ளும். இதைத்தவிர்க்கலாமில்லையா? பிறகு, சில குழந்தைகள் மூக்கு வழியாக மூச்சு விடாமல், வாய் வழியாக மூச்சுவிடும் தவறான வழக்கத்தை வைத்திருப் பார்கள். இதுவும் மாற்றப்பட வேண் டும். வாய் வழியாக மூச்சு விடக் கூடாது; மூக்கு வழியாக மட்டுமே மூச்சு விட வேண்டும். தொண்டையில் இலேசாக வலியோ, கரகரப்போ இருந்தாலும் உடனே 200 மி. லி. வெது வெதுப்பான நீரில் ஒரு தேக் கரண்டி சமையல் உப்பைப் போட்டுக் கலந்து வாயை அடிக்கடி கொப்புளிக்க வேண்டும். இதனால் நோய்க் கிருமிகள் தொற்றுவதை ஆரம்பத்திலேயே தவிர்க்கலாம். கடைசியாக ஒன்று — தொண்டைச் சதை வளர்ச்சி நோயினால் சிறுவர் கள் பாதித்திருக்கும்போது, பள்ளிக்கு லீவு போட்டுவிட்டு வீட்டில் தனியாகப் படுத்திருக்கவேண்டும். இதனால் மற்ற குழந்தைகளுக்கும் சிறுவர்களுக்கும் நோய் வருவதைத் தவிர்க்கலாம்!

ராம்குமார்: மிக்க நன்றி, டாக்டர். நான் மிகவும் பயந்து கொண்டே வந் தேன். இப்போது அந்த பயம் இல்லை. தொண்டைச் சதை வளர்ச்சி நோய் பற்றி மிகத் தெளிவாகத் தெரிந்து கொண்டேன். எனக்கும் என் நண்பர்க ளுக்கும் இந்நோய் வராமல் பார்த்துக் கொள்வேன். என் தங்கைக்கு உடனே ஆபரேஷன் செய்து சதையை நீக்கிவிட அப்பாவுக்குக் கடிதம் எழுதி விடுகி றேன். நன்றி டாக்டர்! வணக்கம்!

நான்: வணக்கம் (விடைபெற் றோம்.)

சரி, குழந்தைகளே! எங்கள் உரை யாடல் உங்களுக்கும் உபயோகமாக இருந்ததல்லவா?

பிருந்தாவனக் கவியரங்கம்


பள்ளிக்கூடம் திறந்தாச்சு


பள்ளிக் கூடம் திறந்தாச்சு;
பாபு, கோபு, வாருங்கள்!
செல்வோம் பாட சாலைக்கு,
சிறந்து விளங்க நாளைக்கு!

புதிய வகுப்பில் அமர்ந்திடுவோம்;
புதியன எல்லாம் கற்றிடுவோம்!
எதிலும் ஆர்வம் குன்றாமல்
எழிலுறக் கற்றுத் தேர்ந்திடுவோம்!

நண்பர் நல்லவர் பெற்றிடுவோம்;
நம்பட உரைக்கக் கற்றிடுவோம்!
கண்போல் நாளும் கல்வியினைக்
கசடறக் கற்றுத் தேர்ந்திடுவோம்!

— ஏ. எஸ். உமாமகேஸ்வரி (13,401),
செட்டிகுறிச்சி.





குளக்கரைக் காட்சி

குளக்கரையில் கொக்கு ஒன்று காத்து
நிற்குது;
கிட்ட வந்த மீனை அலகால் கொத்திச்
செல்லுது.

காகமொன்று தாகத்துடன் அங்கே வருகுது;
களைப்பு தீரக் குளத்துநீரை வாயால் பருகுது.

குட்டித்தவளை கட்டியாக எட்டிப்பார்க்குது;
'சூரியனே, வருக!' என்றுஉரக்கச்சொல்லுது.

தாமரை மேல் வண்டு ஒன்று வந்தே அமருது;
சந்தோஷமாய் இனிய தேனை உண்டு
மகிழுது.

சுறுசுறுப்பாய் அலையனைத்தும் வேலை
செய்யுது;

'சோம்பல் ஒழிக! ஒழிக!' என்றே பாடம்
சொல்லுது!

— இரா. பரமசிவம் (16,320),
புதுமாத்தூர்.



கடல்

கட்க்க முடியாத கடல் — எந்தக்
கப்பலும் செல்லாத கடல்,
சான்றோர் உலவும் கடல் — அது
சாலவும் இனிய கடல்.


நம்பிக்கை உண்டாக்கும் கடல் — நமக்கு
நற்புகழ் அளித்திடும் கடல்,
மீன்கள் இல்லாத கடல் — நம்மை
மேன்மையுறச் செய்யும் கடல்.

அறிவைப் புகட்டும் கடல் — நம்
அன்பினை வளர்க்கும் கடல்.
களிப்பினை ஊட்டும் கடல் — அது
கல்வியெனும் கரை யில்லாக்கடல்!

— தே. நீலாம்பரி (8457), பாண்டி.

கோடி கோடிப் பறவைகள்

கோடி கோடி பறவைகள்
கூடி வாழ்க்கை நடத்திடும்.
வேடந் தாங்கல் ஏரியில்,
வேடிக் கைகள் ஆயிரம்!




ஜாடி போன்ற கூட்டுக்குள்
ஜால வித்தை நடக்குது,
ஜோடி போட்டு நாரையும்
ஜோராய் மேலே பறக்குது!

வெள்ளைக் கொக்கு, கூட்டுக்கு
வேக மாக வருகுது.
பிள்ளைக் கொக்கு ஆவலாய்ப்
பிஞ்சுத் தலையை நீட்டுது!

பாழும் ஏரி நீரிலே
பாம்புத் தாராப் பறவையும்
சூழும் மீனைப் பிடித்திடச்
சூரத் தனங்கள் காட்டுது!

சர்வ தேசப் பறவைகள்
சந்திக் கின்ற ஏரியில்,
வர்க்க பேதச் சண்டைகள்
வருவ தில்லை, இல்லையே!

— மு. திருவேங்கடம் (20,496).



பசு

பசுவே பசுவே பாற்பசுவே — எங்கள்
சிசுவை வளர்க்கும் தாய்ப்பசுவே,
கொசுவை வாலால் விரட்டிடுவாய் — சிறு
குழந்தையும் நெருங்க விட்டிடுவாய்.

பாலும் மோரும் நீ தருவாய் — நாங்கள்
பருகிட நல்ல நெய் தருவாய்.
காலுக்குச் செருப்பு நீ தருவாய் — நல்ல
கழனிக்கு உரமாய் எரு தருவாய்.

கோமா தாவே, குலமாதா — நாளும்
கும்பிட்டு வழங்கும் அருள்மாதா.
சீமான், ஏழை எல்லோர்க்கும் — என்றும்
செல்வம் வளரத் துணைபுரிவாய்.

— இரா. செல்லத்துரை (20,163),
கடையாலுருட்டி.



சர் அலெக்சாண்டர் பிளெமிங்

இவர்தான் பெனிசிலினைக் கண்டு பிடித்தவர். ஸ்காட்லாந்தில் லாக்பீல்டில் பிறந்த இவர், லண்டனில் பாலிடெக்னிக் படித்தார். பிறகு நான்கு ஆண்டுகள் ஒரு கப்பல் கம்பெனியில் வேலை பார்த்தார். அதன் பிறகு, லண்டன் பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த செயின்ட் மேரீஸ் மருத்துவப் பள்ளியில் சேர்ந்து பட்டம் பெற்றார். அந்தப் பள்ளியிலே பேராசிரியரானார்.

முதலாவது உலகப் போர் நடந்த போது, இராணுவ மருத்துவப் பிரிவில் சேர்ந்து வெட்டுக்காயங்களைப் பற்றி ஆராய்ச்சி செய்தார். போர் முடிந்த பின்பும், இவர் தமது ஆராய்ச்சியை நிறுத்தவில்லை; தொடர்ந்து செய்து வந்தார்.

ஒருநாள், இவர், தமது ஆராய்ச்சிக் கூடத்தில் இருக்கும் போது, அவரே எதிர்பாராமல் கண்டுபிடித்ததுதான் பெனிசிலின். இரண்டாம் உலகப் போரில் காயமடைந்த ஏராளமான வீரர்களுக்கு இம்மருந்து உதவியது. இம்மருந்தைப் பெரும் அளவில் உற்பத்தி செய்ய அப்போது ராக்பெல்லர் நிதி உதவி கிடைத்தது.

1944–இல் இவருக்கு நைட் பட்டம் வழங்கப் பெற்றது. அதற்கு அடுத்த ஆண்டே இவருடன் கூட, ஃபினாரி, செயின் என்ற இரு விஞ்ஞானிகளுக்கும் நோபல் பரிசு அளிக்கப்பட்டது.

மருத்துவ நூல்கள் பல எழுதிய இவர், 1955 – இல் மாரடைப்பால் காலமானார்.




அடுத்த இதழில்...

என் குழந்தைப் பருவம்

—ஓவியர் கோபுலு

... பிரைவேட் லிமிடெட் சார்பாக அச்சிட்டு வெளியிட்டவர்: வி. முரளி. ஆசிரியர்: கெ. ராஜேந்திரன்.
நிர்வாகக் காரியாலயம்: ரேஸ் கோர்ஸ் சாலை, கிண்டி, சென்னை – 600 032. போன்: 4 3154 3, 4 34 157.
ஆறு மாதச் சந்தா: உள்நாடு: ரூ. 18/–; வெளி நாடு: கப்பல் தபால் ரூ. 60/–; விமானத் தபால்: ரூ. 135/–.
ஆண்டுச் சந்தா – உள்நாடு: ரூ. 36/–; வெளி நாடு: கப்பல் தபால் ரூ. 120/–; விமானத் தபால் ரூ. 270/–.



ஸர். அலெக்ஸாண்டர் ப்ளெமிங்

தோற்றம் 6.8.1881 மறைவு 11.3.1955

Registered No. TN/MS/(N)/281
Registered as a Newspaper in Sri Lanka